# 2

# தேசிய உற்பத்தி, செலவினம் மற்றும் வருமானம்

## 2.1 பொதுநோக்கு

**இலங்கைப் பொருளாதாரம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் துறைகளில் இருந்தான சிக்கல்களுக்கு மத்தியிலும் உண்மை நியதிகளில் 2015ஆம் ஆண்டின் 4.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது 2016இல் 4.4 சதவீதமாக வளர்ச்சியடைந்திருந்தது.** உள்நாட்டுப் பக்கத்தில், மீள ஆரம்பிக்கப்பட்ட ஒரு சில பாரிய அளவிலான அரச உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்களும் முதலீட்டு நடவடிக்கைகள் மீதான தனியார் துறையின் ஈடுபாடும் பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவாக இருந்தன. எனினும், விசேடமாக வருமான உயர்வுடன் தொடர்புபட்ட தொடர்ச்சியான இறைத்திரட்சி வழிமுறைகள், வழங்கல்பக்க தடைகள் மற்றும் வரிக் கொள்கை வழிமுறைகளினால் தூண்டப்பட்டு 2016இன் பிற்பகுதியில் பணவீக்க அழுத்தங்களில் ஏற்பட்ட அதிகரிப்பு, மத்திய வங்கியின் நாணயக் கொள்கை நிலை இறுக்கமாக்கப்பட்டமை மற்றும் ஆண்டு முழுவதிலும் நிலவிய மோசமான வானிலை நிலைமைகள் என்பன வளர்ச்சி உத்வேகத்தினை தளர்வுறச் செய்தன. மேலும் 2016ஆம் ஆண்டு முற்பகுதியில் அடிக்கடி ஏற்பட்ட கொள்கை மாற்றங்களினூடாக உருவாகிய நிச்சயமற்றதன்மையும் ஒட்டுமொத்தப் பொருளாதார நடவடிக்கைகளைப் பாதித்ததுடன் அது வலுவான உயர்வேகம் கொண்ட வளர்ச்சிக்கொரு பாரிய தடையாகவுள்ளதென இலங்கை மத்திய வங்கியால் நடாத்தப்பட்ட வியாபார அளவீடுகளுக்குப் பதிலளித்தவர்களினால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், அளவீட்டில் பங்குபற்றியவர்களால் சுட்டிக்காட்டியதன்படி தேர்ச்சிபெற்ற தொழிலாளர்களின் பற்றாக்குறை மற்றும் குறைந்தளவிலான பெண்களின் தொழிற்படை பங்கேற்புவீதம் போன்ற அமைப்பியல் தடைகள் பொருளாதார நடவடிக்கைகளின் தொடர்ச்சியான விரிவாக்கத்திற்கு அழுத்தம் கொடுக்கின்றன. வெளிநாட்டுப் பக்கத்தில், உலகளாவிய பொருளாதாரத்தின் மெதுவான மீட்சித்தன்மை, பன்னாட்டு வர்த்தகத்தின் பின்னடைவு, ஐக்கிய அமெரிக்காவின் இறுக்கப்பட்ட வட்டிவீதங்கள் மற்றும் 2016ஆம் ஆண்டு முழுவதும் காணப்பட்ட பொருளாதார மற்றும் அரசியல் அபிவிருத்திகளின் எதிர்பாராத விளைவுகளிலிருந்து அதிகளவிற்குத் தோன்றிய நிச்சயமற்ற கொள்கை போன்றவை வெளிநாட்டு கேள்விகளின் எதிர்பார்க்கப்பட்ட மீட்சிக்குத் தடைகளாக அமைந்தன.

**உற்பத்திப் பக்க மதிப்பீடுகளின் அடிப்படையில், வளர்ச்சிக்கு 2016ஆம் ஆண்டு பூராகவும் காணப்பட்ட சாதகமற்ற வானிலை நிலைமைகளினால் வேளாண்மை நடவடிக்கைகளில் பதிவுசெய்யப்பட்ட சுருக்கத்தின் மத்தியிலும் கைத்தொழில் மற்றும் பணிகள்சார் நடவடிக்கைகளில் ஏற்பட்ட விரிவு முக்கிய தூண்டுதலாக அமைந்தது.** மொத்த உள்நாட்டு உற்பத்தியின் முதன்மை பங்களிப்பாளரான பணிகள் துறையின் வளர்ச்சியானது, நிதியியல் பணிகள் நடவடிக்கைகள் மற்றும் போக்குவரத்து பணிகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பினால் ஆதரவளிக்கப்பட்டது. 2016இல் கைத்தொழில் நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவுசெய்தமைக்கு கட்டுமான நடவடிக்கைகள் மற்றும் சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் நடவடிக்கைகளில் ஏற்பட்ட மீட்சி பெரும் உத்வேகத்தினை வழங்கியது. மிகவும் மோசமான வானிலை நிலைமைகள், ருஷ்யா, மற்றும் சில மத்திய கிழக்கு நாடுகள் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவேண்டிய இலங்கையின் முக்கிய வேளாண்மை ஏற்றுமதிப் பொருட்களின் வலுவிழந்த கேள்வி மற்றும் குறைவான விலைகள் என்பன வேளாண்மை நடவடிக்கைகளின் சுருக்கத்திற்குக் காரணமாக இருந்தன.

2

அட்டவணை 2.1

நிலையான விலைகளில் (2010) கைத்தொழில் மூலங்களின்படி மொத்த உள்நாட்டு உற்பத்தி (அ)(இ)

| பொருளாதார நடவடிக்கை | மாற்ற வீதம் ( % ) | | மாற்றத்திற்கான பங்களிப்பு ( % ) | | மொ.உ.உ இன் சதவீதமாக ( % ) | |
|---|---|---|---|---|---|---|
| | 2015 (ஆ) | 2016 | 2015 (ஆ) | 2016 | 2015 (ஆ) | 2016 |
| **வேளாண்மை, காடாக்கல் மற்றும் மீன்பிடித்தல்** | **4.8** | **-4.2** | **7.6** | **-7.4** | **7.8** | **7.1** |
| தானியங்களின் வளர்ச்சி (அரிசி நீங்கலாக) | 7.3 | -10.5 | 0.3 | -0.4 | 0.2 | 0.1 |
| அரிசியின் வளர்ச்சி | 25.0 | -31.0 | 3.8 | -6.2 | 0.9 | 0.6 |
| காய்கறிகளின் வளர்ச்சி | 2.7 | -2.1 | 0.4 | -0.3 | 0.7 | 0.6 |
| கரும்பு, புகையிலை மற்றும் ஏனைய நீண்ட காலமல்லாத பயிர்கள் | -15.0 | 13.4 | -0.1 | 0.1 | 0.0 | 0.0 |
| பழவகைகளின் வளர்ச்சி | 17.5 | -3.7 | 1.8 | -0.5 | 0.6 | 0.5 |
| எண்ணெய்ப்பசை கொண்ட பழ வகைகளின் வளர்ச்சி (தேங்காய், செவ்விளநீர், கமுகு) | 5.2 | -0.6 | 0.8 | -0.1 | 0.8 | 0.7 |
| தேயிலையின் வளர்ச்சி (பச்சை இலைகள்) | -2.6 | -11.2 | -0.5 | -2.1 | 0.8 | 0.7 |
| ஏனைய குடிபானப் பயிர்களின் வளர்ச்சி (கோப்பி, கொக்கோ போன்றவை) | -18.1 | 7.5 | -0.1 | 0.0 | 0.0 | 0.0 |
| வாசனைத்திரவியங்கள், நறுமணப் பயிர்கள், மருந்து மற்றும் மருந்தாக்க பயிர்களின் வளர்ச்சி | 6.9 | 6.4 | 1.0 | 1.0 | 0.7 | 0.7 |
| இறப்பரின் வளர்ச்சி | -10.1 | -10.7 | -0.7 | -0.7 | 0.3 | 0.3 |
| ஏனைய நீண்டகாலப் பயிர்களின் வளர்ச்சி | 9.3 | -2.2 | 0.4 | -0.1 | 0.2 | 0.2 |
| விலங்கு உற்பத்தி | 8.1 | 6.3 | 1.0 | 0.9 | 0.6 | 0.6 |
| தாவர இனவிருத்தி மற்றும் வேளாண்மைக்கான துணை நடவடிக்கைகள் | 6.7 | -4.7 | 0.2 | -0.1 | 0.1 | 0.1 |
| காடாக்கலும் குத்திகளும் | 1.9 | 5.5 | 0.2 | 0.7 | 0.6 | 0.6 |
| மீன்பிடித்தல் | -2.6 | 1.6 | -0.8 | 0.5 | 1.4 | 1.3 |
| **கைத்தொழில்** | **2.1** | **6.7** | **11.5** | **40.1** | **26.2** | **26.8** |
| சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் | -5.2 | 14.4 | -2.6 | 7.3 | 2.2 | 2.4 |
| தயாரிப்பு | 4.9 | 1.7 | 16.0 | 6.3 | 15.7 | 15.4 |
| மின்சாரம், வாயு, நீராவி மற்றும் குளிரூட்டி வழங்கல் | 5.9 | 8.4 | 1.2 | 1.9 | 1.0 | 1.0 |
| நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் வழங்கல் | 4.4 | 7.9 | 0.1 | 0.3 | 0.1 | 0.1 |
| கழிவு நீர், கழிவுப்பொருள், சுத்திகரிப்பு மற்றும் அகற்றல் நடவடிக்கைகள் | 24.9 | 17.8 | 1.1 | 1.0 | 0.3 | 0.3 |
| நிர்மாணம் | -2.7 | 14.9 | -4.2 | 23.4 | 6.9 | 7.6 |
| **பணிகள்** | **5.7** | **4.2** | **66.5** | **54.0** | **56.6** | **56.5** |
| மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம், போக்குவரத்து மற்றும் களஞ்சியம் மற்றும் தங்குமிடம் மற்றும் உணவுப் பணி நடவடிக்கைகள் | 4.8 | 3.4 | 23.1 | 17.9 | 23.1 | 22.9 |
| தகவல் மற்றும் தொடர்பூட்டல் | 10.9 | 8.0 | 1.2 | 1.0 | 0.6 | 0.6 |
| நிதியியல், காப்புறுதி மற்றும் வதிவிடச் சொத்துரிமை உள்ளடங்கலாக உண்மைச் சொத்துக்கள் நடவடிக்கைகள் | 13.3 | 8.4 | 31.3 | 23.5 | 12.3 | 12.8 |
| தொழில்சார் பணிகள் மற்றும் ஏனைய ஆளணி பணி நடவடிக்கைகள் | 1.8 | 0.7 | 4.5 | 1.8 | 11.9 | 11.4 |
| பொது நிர்வாகம், பாதுகாப்பு, கல்வி, மனிதநலம் மற்றும் சமூக வேலை நடவடிக்கைகள் | 3.6 | 4.9 | 6.5 | 9.7 | 8.7 | 8.7 |
| **அடிப்படை விலையில் கூட்டப்பட்ட மொத்த பெறுமதிகளுக்கு சமமானவை** | **4.6** | **4.2** | **85.7** | **86.6** | **90.6** | **90.4** |
| உற்பத்திகள் மீதான மானியங்கள் கழித்த வரி | 7.5 | 6.2 | 14.3 | 13.4 | 9.4 | 9.6 |
| **சந்தை விலையிலான மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு சமமானவை** | **4.8** | **4.4** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** |
| வெளிநாட்டிலிருந்தான தேறிய முதன்மை வருமானம் | -18.1 | -14.0 | | | | |
| **சந்தை விலையிலான மொத்த தேசிய வருமானம்** | **4.5** | **4.1** | | | | |

(அ) தரவானது தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் 2010 அடியாண்டின் மொ.உ.உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது

(ஆ) திருத்தப்பட்டது

(இ) தற்காலிகமானது

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

செலவின அணுகுமுறை மதிப்பீடுகளின்படி, பெயரளவு மற்றும் உண்மை ஆகிய இரு நியதிகளிலும் முதலீட்டு தூண்டுதலினால் வளர்ச்சியானது வலுப்படுத்தப்பட்டது. அரச உட்கட்டமைப்பு நடவடிக்கைகள் மற்றும் கட்டடத் துறை நடவடிக்கைகள் மீதான தனியார் துறையின் ஈடுபாட்டின் தொடர்ச்சியான அதிகரிப்பினால் முதலீட்டு வளர்ச்சியானது தூண்டுவிக்கப்பட்டது. இவ்வேளையில், வட்டி வீதங்கள் மற்றும் வரிகளின் அதிகரிப்பு, இறக்குமதி நுகர்வுப் பொருட்களினது விலைகளின் படிப்படியான அதிகரிப்பு மற்றும் இலங்கை நாணயத்தின் பெறுமதிதேய்வு போன்றவற்றினால் தனியார் நுகர்வு ஒரு மெதுவடைவினை பதிவுசெய்தது. இறைத் திரட்சி வழிமுறைகளின் காரணமாக அரச நுகர்வும் மெதுவடைந்து காணப்பட்டது. மேலும், பெயரளவு நியதிகளில் தேறிய வெளிநாட்டுக் கேள்வி 2016இல் பாதகமடைந்து காணப்பட்டது. இதற்கு, ஏற்றுமதியுடன் ஒப்பிடுகையில் இறக்குமதிகளினது அதிகரிப்பின் தாக்கம் முக்கிய காரணமாகும். இறக்குமதிகளுக்கான கேள்விக்கு, நாட்டின் முதலீட்டு நடவடிக்கைகளில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு இணையாக இடைநிலைப்பொருட்கள் மற்றும் முதலீட்டுப்பொருட்களின் மீதான அதிகரிப்பினால் தூண்டப்பட்டது. பெயரளவு நியதிகளில் பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதி விரிவாக்கத்தை பதிவு செய்த போதிலும், இறக்குமதியினை ஈடுசெய்வதற்கு இது போதுமானதாக இல்லாத காரணத்தால் தேறிய வெளிநாட்டு கேள்வி மோசமடைந்து செல்வதற்கு இட்டுச் சென்றிருந்தது.


நாணயக் கொள்கையின் படிப்படியான இறுக்கத்தின் பின்னணியில், தனியார் சேமிப்புக்களின் மேம்பாட்டினாலும் அரசின் குறைச்சேமிப்பில் ஏற்பட்ட சரிவினாலும் உள்நாட்டுச் சேமிப்புக்கள் குறிப்பிடத்தக்களவு அதிகரித்திருந்தது. மேலும்,

வெளிநாட்டிலிருந்தான தேறிய நடைமுறை மாற்றல்கள் தேசிய சேமிப்பிற்கு சாதகமாக பங்களித்த பணவனுப்பல்களின் அதிகரிப்பின் குறிப்பிடத்தக்க அளவு பங்களிப்பினால் தொடர்ச்சியாக அதிகரித்திருந்தன. அதேவேளையில், வெளிநாட்டிலிருந்தான தேறிய முதன்மை வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2016இல் குறைவான வேகத்துடன் சுருங்கியிருந்தது. இதன்விளைவாக, தேசிய சேமிப்பானது இவ்வாண்டுப்பகுதியில் கணிசமாக அதிகரித்து 2015ஆம் ஆண்டுப்பகுதியுடன் ஒப்பிடும்போது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அதன் பங்கினை அதிகரித்தது. எனினும், முதலீட்டின் குறிப்பிடத்தக்க அதிகரிப்பானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் சேமிப்பு - முதலீட்டு இடைவெளியின் சிறிதளவிலான விரிவிற்கு வழிவகுத்தது. வருமான அணுகுமுறையின் கீழ், மொத்த தொழிற்பாட்டு மிகை பொருளாதாரத்தின் வருமான உருவாக்கலின் பிரதான கூறாக தொடர்ந்தும் இருந்த வேளையில் வீட்டலகுத்துறை 2016இல் உருவாக்கப்பட்ட வருமானத்தின் பெரும்பகுதிக்கு நிறுவன ரீதியான துறை என்ற வகையில் பங்களிப்புச் செய்தது.

## 2.2 மொத்த உள்நாட்டு உற்பத்தி, தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் மொத்தத் தேசிய வருமானம்

**நடைமுறைச் சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2015இன் ரூ.10,951.7 பில்லியனுடன் (ஐ.அ.டொலர் 80.6 பில்லியன்) ஒப்பிடுகையில் 2016இல் ரூ.11,839 பில்லியனாக (ஐ.அ.டொலர் 81.3 பில்லியன்) விளங்கியது.** இதன்படி பெயரளவு நியதிகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2015இல் அவதானிக்கப்பட்ட 5.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 8.1 சதவீத வளர்ச்சியை 2016இல் பதிவுசெய்தது. இவ்வளர்ச்சிக்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் உள்ளடக்க சுருக்கியானது,

வரைபடம் 2.1
**ஆண்டு வளர்ச்சி வீதம் (அ)**




(அ) தரவானது தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் 2010 அடியாண்டின் மொ.உ.உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது

மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

2015இன் 0.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இல் 3.6 சதவீதத்திற்கு வளர்ச்சியடைந்தமையின் மூலம் பெரிதளவு பங்களிப்பை வழங்கியது. மொத்த உள்நாட்டு உற்பத்தியானது நிலையான சந்தை விலைகளில், 2015இன் ரூ.8,633.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில், 2016இல் ரூ.9,012 பில்லியனுக்கு அதிகரித்தது. இதேவேளையில் உண்மை நியதிகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2015இன் 4.8 சதவீத வளர்ச்சியினுடன் ஒப்பிடுகையில் 2016இன் 4.4 சதவீத வளர்ச்சியை பதிவுசெய்தது.

**தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தி 2015இன் ரூ.522,355 உடன் ஒப்பிடுகையில் 2016இல் ரூ.558,363 ஆக மதிப்பிடப்பட்டது.** இதன்படி, தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தி, பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியின் உதவியினால் 2015இன் 4.7 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016 இல் 6.9 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. எனினும், ஐ.அ.டொலர் நியதியில் குறித்துரைக்கப்பட்ட தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தி 2015இன் ஐ.அ.டொலர் 3,843 உடன் ஒப்பிடுகையில் 2016இல் ஐ.அ.டொலர் 3,835 இற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு ஐ.அ.டொலரிற்கெதிராக உள்நாட்டு நாணயம் தேய்வடைந்தமையே காரணமாகும்.

**வெளிநாட்டிலிருந்தான தேறிய முதன்மை வருமானத்திற்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியைச் சீராக்கம் செய்வதன் மூலம் பெறப்பட்ட மொத்த தேசிய வருமானம் 2015இன் 5.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2016இல் பெயரளவு நியதிகளில் ரூ. 11,506.2 பில்லியனுக்கு அதிகரித்து 7.8 சதவீத வளர்ச்சியை பதிவுசெய்தது.** மொத்த தேசிய வருமானத்தில் ஏற்பட்ட இவ்வளர்ச்சிக்கு பெயரளவு மொ.உ.உற்பத்தியின் வளர்ச்சியில் ஏற்பட்ட அதிகரிப்பும் 2016இல் தேறிய முதன்மை வருமானத்தின் எதிர்மறையான வளர்ச்சியில் ஏற்பட்ட மெதுவான தன்மையும் பெருமளவிற்குக் காரணங்களாகும். இது 2015இல் பதிவுசெய்யப்பட்ட 19.2 சதவீத சுருக்கமடைதலுடன் ஒப்பிடுகையில் 2016இல் 18.3 சதவீத சுருக்கமடைதலுடன் காணப்பட்டது.

## 2.3 நிறுவன ரீதியான துறைகளிலிருந்தான பங்களிப்பு

**பொருளாதார நடவடிக்கைகளின் நிறுவன ரீதியிலான வகைப்படுத்தலின்படி, வீட்டலகுகள் மற்றும் வீட்டலகுகளுக்கு பணிபுரியும் இலாபமீட்டாத நிறுவனங்கள் இரண்டும் சேர்ந்து பொருளாதாரத்தில் பெறுமதிகூட்டலிற்கான முக்கிய பங்களிப்பாளராக தொடர்ந்துமிருந்தது.** இதன்படி வீட்டலகுகள் மற்றும் வீட்டலகுகளுக்கு பணிபுரியும் இலாபமீட்டாத நிறுவனங்கள் என்பனவற்றின் பங்கு நடைமுறை சந்தை விலைகளில் 2016இன்

பொருளாதாரத்தின் மொத்தப் பெறுமதிகூட்டலின் 50.7 சதவீதமாக விளங்கியது. மேலும், வீட்டலகுகள் மற்றும் வீட்டலகுகளுக்கு பணிபுரியும் இலாபமீட்டாத நிறுவனங்கள் துறையின் மொத்தப் பெறுமதிகூட்டலானது பெயரளவு நியதிகளில் 2015இன் 5.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இல் 6.2 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. அதேவேளை, பொருளாதாரத்தின் இரண்டாவது மிகப்பெரிய துறையான நிதியல்லாக் கூட்டுத்தாபனங்கள் 2016இன் மொத்தப் பெறுமதிகூட்டலில் 34.5 சதவீதத்திற்கு வகைகூறியது. நிதியல்லாக் கூட்டுத்தாபனங்கள் துறையின் பெறுமதிகூட்டல் 2015இல் பதிவுசெய்யப்பட்ட 1.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2016இல் 8.3 சதவீதத்தால் கணிசமானளவு வளர்ச்சியடைந்தது. அதேவேளை, அரசாங்கத்தின் பொருளாதார நடவடிக்கைகளிலிருந்தான பங்களிப்பினை பிரதிநிதித்துவப்படுத்தும் பொது அரச துறை 2016இல் 0.2 சதவீதத்தினால் சிறிதளவு அதிகரித்து பொருளாதாரத்தின் மொத்தப் பெறுமதிகூட்டலில் 10.1 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தியது. மேலும், நிதிக் கூட்டுத்தாபனங்கள் துறை 2015இன் 3.5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இல் 17.3 சதவீத வளர்ச்சியைக் கொண்டு மொத்தப் பெறுமதிகூட்டலில் 4.7 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தியது.

**பொருளாதாரத்தின் வேளாண்மை மற்றும் பணிகள் நடவடிக்கைகளின் மொத்தப் பெறுமதிகூட்டலிற்கான முக்கிய பங்களிப்பு வீட்டலகுகள் மற்றும் வீட்டலகுகளுக்குப் பணிபுரியும் இலாபமீட்டாத நிறுவனங்களிலிருந்து கிடைத்த வேளையில் கைத்தொழில் நடவடிக்கைகள் நிதியல்லா கூட்டுத்தாபனத் துறையினால் உந்தப்பட்டன.** இதன்படி, 2016இல் பொருளாதாரச் செயற்பாடுகளில் மொத்தப் பெறுமதிகூட்டலில் 81.4 சதவீதம் வீட்டலகுகள் மற்றும் வீட்டலகுகளுக்கு பணிபுரியும் இலாபமீட்டாத நிறுவனங்களால் உருவாக்கப்பட்டிருக்கையில் எஞ்சிய 18.6 சதவீதம் நிதியல்லாக் கூட்டுத்தானங்களிலிருந்து உருவாக்கப்பட்டது. வேளாண்மைச் செயற்பாடுகளில், பெரும்பான்மை பங்களிப்பானது வீட்டலகுகள் மற்றும் வீட்டலகுகளுக்குப் பணிபுரியும் இலாபமீட்டாத நிறுவனங்களால் ஏற்படுத்தப்பட்டதோடு, அவை மீன்பிடி, காய்கறிகள், வாசனைத்திரவியங்கள் மற்றும் அரிசி போன்றவற்றில் குறிப்பிடத்தக்களவில் காணப்பட்டன. இதேவேளை, நிதியல்லா கூட்டுத்தாபனங்கள் துறை விலங்கு வளர்ப்பு மற்றும் தேயிலை போன்றவற்றிற்குப் பெருமளவில் பங்களிப்புச் செய்தது. கைத்தொழில் நடவடிக்கைகளினைப் பொறுத்தமட்டில், 2016இன் மொத்தப் பெறுமதிகூட்டலில் 61.1 சதவீத பங்களிப்பை நிதியல்லாக் கூட்டுத்தாபனங்களும் இதைத் தொடர்ந்து வீட்டலகுகள் மற்றும் வீட்டலகுகளுக்குப் பணிபுரியும் இலாபமீட்டாத நிறுவனங்கள் 36.6 சதவீதத்தையும் பொது அரசாங்கம் 2.2 சதவீதத்தையும் பங்களிப்புச் செய்தன. தயாரிப்பு செயற்பாடுகளில் நிதியல்லாக் கூட்டுத்தாபனங்கள் அதிகளவு பங்களிப்பைச் செய்ததுடன் அதனைத் தொடர்ந்து வீட்டலகுகள் மற்றும் வீட்டலகுகளுக்கு பணிபுரியும் இலாபமீட்டாத நிறுவனங்களின் பங்களிப்புக்கள் காணப்பட்ட வேளையில், கட்டடவாக்க செயற்பாடுகளில் பொது அரசாங்கத்தின் பங்களிப்பு கட்டடவாக்க நடவடிக்கைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டு காணப்பட்டது. இதேவேளை, அனைத்து நான்கு நிறுவன ரீதியிலான துறைகளும் பணிகள் செயற்பாட்டின் மொத்தப் பெறுமதிகூட்டலிற்குப் பங்களிப்புச் செய்தன. வீட்டலகுகள் மற்றும் வீட்டலகுகளுக்குப் பணிபுரியும் இலாபமீட்டாத நிறுவனங்கள் பணிகள் செயற்பாடுகளுக்கான ஆகக்கூடிய பங்களிப்பான 53.4 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய வேளையில் பணி நடவடிக்கைகளின் மொத்தப் பெறுமதிகூட்டலில் நிதியல்லாக் கூட்டுத்தாபனங்கள், பொது அரசாங்கம் மற்றும் நிதிக் கூட்டுத்தாபனத் துறைகள் முறையே 23.9 சதவீதம், 15.1

அட்டவணை 2.2
நடைமுறை விலைகளில் நிறுவனத்துறையின்படி மொத்த பெறுமதி சேர்ப்பு (அ)(இ)

| விடயம் | மொத்த பெறுமதி சேர்ப்பின் சதவீதமாக (%) | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2015 (ஆ) | | | | 2016 | | | |
| | நிதியல்லா கூட்டுத் தாபனம் | நிதிக் கூட்டுத் தாபனம் | மத்திய அரசாங்கம் | வீட்டு அலகுகள் மற்றும் வீட்டு அலகுகளுக்குப் பணியாற்றும் இலாபமீட்டா நிறுவனங்கள் | நிதியல்லா கூட்டுத் தாபனம் | நிதிக் கூட்டுத் தாபனம் | மத்திய அரசாங்கம் | வீட்டு அலகுகள் மற்றும் வீட்டு அலகுகளுக்குப் பணியாற்றும் இலாபமீட்டா நிறுவனங்கள் |
| வேளாண்மை | 16.9 | - | - | 83.1 | 18.6 | - | - | 81.4 |
| கைத்தொழில் | 60.4 | - | 4.3 | 35.3 | 61.1 | - | 2.2 | 36.6 |
| பணிகள் | 23.8 | 7.0 | 15.3 | 53.9 | 23.9 | 7.6 | 15.1 | 53.4 |
| அடிப்படை விலையில் மொத்த பெறுமதி சேர்ப்பு | 34.0 | 4.3 | 10.7 | 51.0 | 34.5 | 4.7 | 10.1 | 50.7 |

(அ) தரவானது தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் 2010 அடியாண்டின் மொ.உ.உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது
(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானது

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

சதவீதம் மற்றும் 7.6 சதவீதத்திற்குப் பங்களிப்புச் செய்தன. மேலும், வீட்டலகுகள் மற்றும் வீட்டலகுகளுக்கு பணிபுரியும் இலாபமீட்டாத நிறுவனங்கள் போக்குவரத்துச் செயற்பாடுகள் மற்றும் ஏனைய தனியார் பணிகள் நடவடிக்கைகளுக்கு முக்கியமாகப் பங்களித்த வேளையில் நிதியல்லாக் கூட்டுத்தாபனங்கள் துறையின் பங்களிப்பு பெரும்பாலும் மொத்த விற்பனை மற்றும் சில்லறை விற்பனை மற்றும் போக்குவரத்து நடவடிக்கைகளில் புலனாயிற்று. அதேவேளை பொது அரச துறை பெரும்பாலும் பொது நிருவாகம், பாதுகாப்பு மற்றும் கட்டாய சமூகப் பாதுகாப்புச் செயற்பாடுகளுக்குப் பங்களிப்புச் செய்திருக்கையில் நிதிக் கம்பனிகள் துறைப் பங்களிப்பு நிதியியல் பணிகள் மற்றும் காப்புறுதி பணிகளில் காணப்பட்டது.

## 2.4 வெளியீடு, கொள்கைகள், நிறுவன ரீதியான உதவி மற்றும் பிரச்சனைகள்

### வேளாண்மை

**வேளாண்மை செயற்பாடுகள் பெறுமதிகூட்டல் நியதிகளில் 2015இன் 4.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இல் 4.2 சதவீதத்தால் சுருக்கமடைந்தன.** ஆண்டு முழுவதும் நிலவிய பாதகமான வானிலை, குறிப்பாக இரண்டாம் காலாண்டின் அடை மழையினாலான வெள்ளம், நீடித்த வரட்சி என்பன அதன் வளர்ச்சியை எதிர்மறையாகப் பாதித்தன. இதன்படி, அரிசி, தேயிலை, இறப்பர் மற்றும் பழங்களில் ஏற்பட்ட சுருக்கம் பெருமளவு வேளாண்மைச் செயற்பாடுகளின் பெறுமதிகூட்டலினை சுருக்கிய வேளையில் வேளாண்மைச் செயற்பாடுகளில் தானியங்கள், காய்கறிகள், எண்ணெய்ப்பசை கொண்ட பழவகைகள் மற்றும் தாவர இனவிருத்தி மற்றும் வேளாண்மைக்கான உதவி நடவடிக்கைகள் என்பன பெறுமதிகூட்டல் நியதிகளில் சுருக்கமடைந்தன. எனினும், விலங்கு உற்பத்தி, காடாக்கல் மற்றும் குற்றியாக்கல், மீன்பிடி, கரும்பு மற்றும் ஏனைய குடிபான பயிர்கள் என்பன வளர்ச்சிக்குச் சாதகமாகப் பங்களித்து வேளாண்மை நடவடிக்கைகளின் மொத்த சுருக்கத்தினை குறிப்பிடத்தக்க அளவு ஈடுசெய்தன. வேளாண்மை செயற்பாடுகளின் இம்மிதமான வளர்ச்சியை, இலங்கை மத்திய வங்கி நடத்திவரும் காலாண்டு வியாபார தோற்றப்பாட்டு அளவீட்டின் வேளாண்மைத்துறை துணைச் சுட்டெண்களும் காட்டின. இதற்கமைய வியாபார நிலை, கேள்வி, உற்பத்தி மற்றும் விற்பனை என்பன சராசரியாக நடுநிலை அளவுக்குக் கீழாக காணப்பட்டு வேளாண்மைச் செயற்பாடுகளின் மட்டுப்படுத்தப்பட்ட வளர்ச்சியை வெளிக்காட்டின.

### வேளாண்மை உற்பத்திச் சுட்டெண்

**வேளாண்மை மற்றும் மீன்பிடித் துறைகளின் வெளியீட்டை அளவிடும் வேளாண்மை உற்பத்திச் சுட்டெண் 2015இன் 4.4 சதவீத ஒட்டுமொத்த வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இல் 2.4 சதவீத ஒட்டுமொத்த வீழ்ச்சியை பதிவுசெய்தது.** வேளாண்மை உற்பத்திச் சுட்டெண்ணினுள் நெல், தேயிலை, இறப்பர், தெங்கு மற்றும் ஏனைய பயிர்களின் (பழங்கள், ஏனைய களப்பயிர்களின் துணைத்துறைகள்) துணைச் சுட்டெண்கள் வீழ்ச்சியடைந்திருக்கையில், ஏனைய துணை சுட்டெண்ணின் மரக்கறி உப துறைகள் முன்னைய ஆண்டைக் காட்டிலும் அதிகரித்திருந்தது. ஆண்டுகாலப்பகுதியில் கால்நடைத் துறையானது கணிசமாக வளர்ச்சியடைந்திருந்த போதிலும் வேளாண்மை உற்பத்திச் சுட்டெண்ணில் பிரதிபலிக்கப்பட்டவாறு 2015இல் இருந்து வளர்ச்சியானது மெதுவடைந்திருந்தது. மீன்பிடி நடவடிக்கையின் வளர்ச்சியானது முன்னைய ஆண்டினைப் போன்று 2016 காலப்பகுதியல் சிறிதளவாக காணப்பட்டது.

### நெல்

**நெல் உற்பத்தி 2015இல் பதிவுசெய்யப்பட்ட அபரிமிதமான அறுவடையைத் தொடர்ந்து 2016 காலப்பகுதியில் 4.4 மில்லியன் மெ.தொன்களுக்கு 8.3 சதவீதம் வீழ்ச்சியடைந்திருந்தது.** ஆண்டுப்பகுதியில் அறுவடை செய்யப்பட்ட தேறிய நிலப்பரப்பானது 1,010,989 எக்டேயர்களுக்கு 7.1 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்த அதேவேளை நெல் விளைச்சல் 2015இன் எக்டேயர் ஒன்றிற்கான 4,428 கி.கிறாமிலிருந்த 2016இல் எக்டேயர் ஒன்றிற்கு 4,372 கி.கிறாமிற்கு வீழ்ச்சியடைந்திருந்தது. இது 2015/16 பெரும்போக உற்பத்தியின் அதிகரிப்பு மற்றும் 2016 சிறுபோக உற்பத்தியின் வீழ்ச்சி என்பவற்றின் இணைந்த வெளியீடாகக் காணப்பட்டது. 2015/16 பெரும்போகத்திற்கான நெல் உற்பத்தியானது 2.9 மில்லியன் மெ.தொன்னாகக்

அட்டவணை 2.3
**வேளாண்மை உற்பத்திச் சுட்டெண் (2007-2010 = 100)**

| விடயம் | 2015(அ) | 2016(ஆ) | வளர்ச்சி வீதம் (%) | |
|---|---|---|---|---|
| | | | 2014/2015(அ) | 2015/16(ஆ) |
| வேளாண்மை மற்றும் மீன்பிடி | 127.3 | 124.2 | 4.4 | -2.4 |
| 1 வேளாண்மை | 121.2 | 116.9 | 5.3 | -3.5 |
| 1.1 வேளாண்மை பயிர்கள் | 117.8 | 111.9 | 4.3 | -5.0 |
| நெல் | 128.9 | 118.2 | 4.3 | -8.3 |
| தேயிலை | 105.5 | 93.9 | -3.3 | -11.0 |
| இறப்பர் | 66.0 | 59.0 | -32.1 | -10.6 |
| தெங்கு | 107.9 | 106.3 | 21.6 | -1.5 |
| ஏனைய பயிர்கள் | 140.7 | 140.8 | 12.3 | 0.1 |
| மரக்கறிகள் | 136.1 | 141.2 | 0.7 | 3.7 |
| பழங்கள் | 152.8 | 145.8 | 33.4 | -4.6 |
| ஏனைய களப்பயிர்கள் | 144.6 | 138.5 | 11.6 | -4.2 |
| 1.2 கால்நடை வளர்ப்பு | 147.2 | 154.6 | 11.4 | 5.0 |
| 2 மீன்பிடி | 155.9 | 159.1 | 1.4 | 2.1 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலம்: இலங்கை மத்திய வங்கி

காணப்பட்டதுடன் இது முன்னைய பெரும்போக உற்பத்தியைக் காட்டிலும் 0.9 சதவீத அதிகரிப்பாகும். 2015இன் இறுதிக் காலப்பகுதியில் காணப்பட்ட சாதகமான மழைவீழ்ச்சி அதனுடன் இணைந்த வகையில் முக்கிய உற்பத்திப் பிரதேசங்களில் அறுவடை செய்யப்பட்ட பரப்பளவின் அதிகரிப்பு என்பன பெரும்போக உற்பத்தியானது சிறிதளவாக அதிகரிப்பதற்கு பங்களிப்பு செய்திருந்தன. 2015/16 பெரும்போகக் காலப்பகுதியில் அறுவடை செய்யப்பட்ட பரப்பளவானது 667,483 எக்டேயருக்கு 1.2 சதவீதத்தால் சிறிதளவால் அதிகரித்திருந்தது. எனினும், குறிப்பிட்ட நெல் உற்பத்தி பிரதேசங்களில் நிலவிய வெப்பு நோய் மற்றும் இலை-சுருள் நோய் தாக்கத்தின் பகுதியளவான காரணத்தினால் எக்டேயர் ஒன்றிற்கான நெல் விளைச்சல் 2015/16 பெரும்போகக் காலப்பகுதியில் முன்னைய ஆண்டின் அதேகாலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 4,364 கி.கிராமிலிருந்து 4,349 கி.கிராமிற்கு 0.3 சதவீதத்தால் மெதுவாக வீழ்ச்சியடைந்திருந்தது. அதேவேளை, 2016இன் இரண்டாம் காலாண்டில் பாரியளவான வெள்ளம் மற்றும் மண்சரிவு என்பவற்றிற்கு இட்டுச்சென்ற கடுமையான புயல்காற்றின் முக்கிய காரணத்தால் 2016 சிறுபோகத்திற்கான நெல் உற்பத்தி 2015 உடன் ஒப்பிடுமிடத்து 1.5 மில்லியன் மெ.தொன்களுக்கு 21.9 சதவீதத்தால் கணிசமானளவு வீழ்ச்சியடைந்திருந்தது. இது சிறுபோகத்தில் நெல் அறுவடையை மெதுவடையச் செய்திருந்ததுடன் முக்கிய உற்பத்திப் பிரதேசங்களில் மீள்பயிரிடலை அவசியப்படுத்தியிருந்தது. இதன் விளைவாக, 2016 சிறுபோகத்தில் அறுவடை செய்யப்பட்ட பரப்பளவு 343,506 எக்டேயர்களுக்கு 20.0 சதவீதத்தால் கணிசமாக வீழ்ச்சியடைந்திருந்தது பகுதி காலப்பகுதியில் எக்டேயர் ஒன்றிற்கான நெல் விளைச்சலும் 2015இன் அதே சிறுபோகக் காலப்பகுதியின் 4,527 கிலோகிராமுடன் ஒப்பிடுமிடத்து 4,417 கி.கிராமிற்கு 2.4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. பெரும்போக மற்றும் சிறுபோகம் ஆகிய இரண்டினதும் வருடாந்த நெல் உற்பத்தியானது 2.8 மில்லியன் மெ.தொன் கொண்ட அரிசிக்குச் சமமாகக் காணப்பட்டதுடன் அண்ணளவாக 14 மாதங்களுக்குத் தேவையான உள்நாட்டுக் கேள்வியை பூர்த்திசெய்வதற்குப் போதுமானதாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

**அதிகரித்த நெல் உற்பத்தி மற்றும் நெல்லிற்கான உத்தரவாதமளிக்கப்பட்ட கொள்வனவு விலை என்பவற்றின் துறையினால் திறந்த சந்தையில் நெல்லின் விளையானது ஆண்டின் முதலரைப்பகுதியில் குறைவாகக் காணப்பட்டது.** வரவு செலவுத்திட்டம் 2016இல் முன்மொழியப்பட்டவாறு நெல்லிற்கான உத்தரவாதமளிக்கப்பட்ட கொள்வனவு விலையானது உள்நாட்டுச் சந்தையில் அரிசி விலைகளை உறுதியாகப் பேணும் நோக்கில் குறைக்கப்பட்டது. கீரி சம்பா வகைகளுக்கான நெல்லின் உத்தரவாதப்படுத்தப்பட்ட கொள்வனவு விலையான கி.கிராமொன்றிற்கு ரூ.50.00 ஆக மாற்றமின்றிக் காணப்பட்டதடன் சம்பா வகையானது கி.கிராமொன்றிற்கு ரூ.50.00 இலிருந்து ரூ.41.00 இற்கும் குறைக்கப்பட்ட அதேவேளை நாட்டரிசி மற்றும் ஏனைய வகைகள் கி.கிராமொன்றிற்கு ரூ.45.00 இலிருந்து ரூ.38.00 இற்குக் குறைக்கப்பட்டன. எனினும், 2016 சிறுபோகத்தின் குறைந்தளவான வெளியீட்டில் ஏற்பட்ட சந்தைக்கான வரையறுக்கப்பட்ட நெல் வழங்கல்களின் காரணமாக 2016இன் இறுதிக்காலப்பகுதியில் முக்கிய உற்பத்தி பிரதேசங்களில் அனைத்து நெல் வகைகளினதும் விலைகள் அதிகரித்திருந்தன. அதிகரித்த நெல் விகைளிற்கு இணங்கிச் செல்லும் வகையில் அதிகமாக பயன்படுத்தப்படும் சம்பா மற்றும் நாடு போன்றவற்றின் சராசரி சில்லறை விலைகள் 2016இல் முறையே 1.7 சதவீதம் மற்றும் 2.0 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

அட்டவணை 2.4
**நெல் துறை புள்ளிவிபரங்கள்**


| விடயம் | அலகு | 2015 | | | 2016 (அ) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பெரும்போகம் | சிறுபோகம் | மொத்தம் | பெரும்போகம் | சிறுபோகம் | மொத்தம் |
| விதைக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 773 | 481 | 1,254 | 756 | 358 | 1,114 |
| அறுவடை செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 735 | 476 | 1,211 | 743 | 380 | 1,123 |
| அறுவடை செய்யப்பட்ட தேறிய நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 659 | 429 | 1,088 | 667 | 344 | 1,011 |
| உற்பத்தி | '000 மெற்றிக்தொன் | 2,877 | 1,942 | 4,819 | 2,903 | 1,517 | 4,420 |
| | '000 புசல்கள் | 137,882 | 93,091 | 230,973 | 139,114 | 72,722 | 211,836 |
| சராசரி விளைச்சல் (ஆ) | கி.கி./ எக்டேயர்கள் | 4,364 | 4,527 | 4,429 | 4,349 | 4,417 | 4,372 |
| வழங்கப்பட்ட கொடுகடன் | ரூ.மில் | 3,261 | 2,321 | 5,582 | 3,401 | 2,450 | 5,851 |
| அரிசி இறக்குமதிகள் | '000 மெற்றிக்தொன் | - | - | 286 | - | - | 30 |
| இறக்குமதி செய்யப்பட்ட அரிசிற்கு சமனான நெல் | '000 மெற்றிக்தொன் | - | - | 409 | - | - | 43 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) பெரும்போக மற்றும் சிறுபோகத்திற்கான எக்டேயர் ஒன்றின் விளைவு பயிர் அறுவடை அளவீடுகளின் அடிப்படையில் அமைந்த தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்திலிருந்து பெற்ற தரவுகளைக் கொண்டு கணக்கிடப்படுகின்ற அதேவேளை மொத்த உற்பத்தியை அறுவடை செய்யப்பட்ட தேறிய நிலப்பரப்பால் பிரிப்பதன் மூலம் சராசரி விளைவு கணிப்பிடப்படுகின்றது.

மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

**2015 மற்றும் 2016 ஆகிய காலப்பகுதிகளில் அரிசி இறக்குமதிகளின் மீது விதிக்கப்பட்டவர்களின் மேல் நோக்கிய சீராக்கம் மற்றும் 2015இல் பதிவுசெய்யப்பட்ட அபரிதமான அறுவடை என்பவற்றின் காரணமாக கட்டியெழுப்பப்பட்ட அரிசியின் இருப்புக்களுக்கு பதிலிறுத்தும் வகையில் அரிசி இறக்குமதியானது 2016இல் கணிசமானதொரு வீழ்ச்சியைக் காட்டியிருந்தது.** அரிசி இறக்குமதிகளின் மீது விதிக்கப்பட்ட சிறப்புப் பண்டத் தீர்வையின் மேல் நோக்கிய திருத்தத்திற்கு பதிலிறுத்தும் வகையில் 2015இன் இரண்டாம் காலாண்டிலிருந்து அரிசி இறக்குமதிகளின் அளவானது வீழ்ச்சியடையத் தொடங்கியதுடன் இப்போக்கானது 2016இன் முதல் 10 மாதங்களில் தொடர்ந்திருந்தது. அரிசி இறக்குமதியை மேலும் கட்டுப்படுத்துவதற்கு, இறக்குமதி செய்யப்பட்ட கி.கிறாம் ஒன்றிற்கான அரிசியின் மீது ரூ.50 என்ற சுங்கத்தீர்வை, 15.0 சதவீதம் கொண்ட பெறுமதி சேகரிப்பு வரி, 7.5 சதவீதம் கொண்ட துறைமுகங்கள் மற்றும் வானூர்தி தீர்வை மற்றும் 2.0 சதவீதம் கொண்ட தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி என்பவற்றை உள்ளடக்கிய வகையில் புதிய வரிக் கட்டமைப்பானது 2016 நவெம்பர் 01ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் அமுல்படுத்தப்பட்டது. கடந்த காலங்களில் அமுல்படுத்தப்பட்ட வரி அதிகரிப்பின் விளைவாக 2016 காலப்பகுதியில் அரிசி இறக்குமதியானது முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட மெ.தொன் 285,604 உடன் ஒப்பிடுமிடத்து 29,524 மெ.தொன்களுக்கு 89.7 சதவீதமாக கணிசமானளவான வீழ்ச்சியை பதிவுசெய்திருந்தது. எனினும், ஆண்டின் இறுதிக் காலப்பகுதியில், நெல்லின் நிரம்பலில் ஏற்பட்ட பற்றாக்குறையின் காரணமாக அரிசியின் சில்லறை விலைகள் அதிகரித்திருந்ததுடன் இறக்குமதி செய்யப்பட்ட அரிசியுடன் நிரம்பலில் ஒரு நிரம்பலில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவதன் ஊடாக அரிசியின் விலைகளை உறுதிப்படுத்துவதற்கு அரசாங்கம் வழிமுறைகளை எடுத்திருந்தது. அரசாங்கம் 2016இல் அமுல்படுத்தப்பட்ட வரியை நீக்குவதனூடாக 2017 சனவரி 09ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் சம்பா, நாட்டரிசி மற்றும் பச்சையரிசி போன்ற இறக்குமதி செய்யப்பட்ட அரிசி வகைகளின் மீதான வரிகளைக் குறைத்திருந்த அதேவேளை இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் கி.கிறாமொன்றிற்கு ரூ.15.00 என்ற சிறப்புப் பண்டத் தீர்வையை அறிமுகப்படுத்தியிருந்தது. அரசாங்கம் 2017 சனவரி 27 இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் இறக்குமதி செய்யப்பட்ட அரிசிய மீதான சிறப்புப் பண்டத் தீர்வையை ரூ.15.00 இலிருந்து ரூ.5.00 இற்கு மேலும் குறைத்திருந்தது. இத்தகைய வழிமுறைகள் வர்த்தகர்கள் சந்தையில் செயற்கையானதொரு பற்றாக்குறையை உருவாக்குவதிலிருந்து ஊக்கமிழக்கச் செய்யும் நோக்குடன் அறிமுகப்படுத்தப்பட்டன.

வரைபடம் 2.2
அரிசி: நிரம்பல் மற்றும் கேள்வி



மூலம்: இலங்கை மத்திய வங்கி

## தேயிலை

**தேயிலை உற்பத்தி 2016இல் நிரம்பல் மற்றும் கேள்வி காரணிகளின் காரணமாக கணிசமான வீழ்ச்சியை காட்டியிருந்தது.** மொத்த தேயிலை உற்பத்தியானது 2015இன் 328.8 மில்லியன் கி.கிறாமிலிருந்து 2016இல் 292.6 மில்லியன் கி.கிராமிற்கு 11.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. மொத்த தேயிலை உற்பத்தியில் ஏறத்தாழ 63.0 சதவீதம் வகைகூறிய தாழ்நில தேயிலை உற்பத்தியானது 183.6 மில்லியன் கி.கிறாம்களுக்கு 9.3 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்த அதேவேளை உயர்நில மற்றும் மத்தியநிலத் தேயிலை என்பன முறையே 64.4 மில்லியன் கி.கிறாம் மற்றும் 44.5 மில்லியன் கி.கிராம்களுக்கு 14.6 சதவீதம் மற்றும் 12.7 சதவீதத்தில் வீழ்ச்சியை பதிவுசெய்திருந்தது. இவ்வீழ்ச்சிக்கு நிரம்பல் மற்றும் கேள்விப்பக்க காரணிகள் பங்களிப்பு செய்திருந்தன. நிரம்பல் பக்கத்தில், 2016இன் ஆரம்பத்தில் தேயிலை பயிர்ச் செய்யப்படும் பிரதேசங்களில் நிலவிய நீண்ட கால வரட்சி, 2016 நடுப்பகுதியில் மேக நிலைமைகளுடன் வானிலை போக்குகளிலான மாற்றம் மற்றும் 2016இன் இறுதிக் காலாண்டில் நிலவிய மோசமான வரட்சி நிலைமை என்பன தேயிலை உற்பத்தியின் மீது பாதகமான தாக்கத்தைச் செலுத்தியிருந்தன. கேள்விப் பக்கத்தில் உலக சந்தையிலான பண்டங்களின் குறைந்தளவான விலைகள் மற்றும் முக்கிய தேயிலை இறக்குமதி செய்யும் நாடுகளின் எரிபொருள் மற்றும் வாயு போன்றவற்றிலிருந்தான வருவாய்களின் வீழ்ச்சி 2016இல் தேயிலைக்கான கேள்வியை பாதகமாக பாதித்திருந்தன. அதேவேளை, சிறு உடமையாளர் தேயிலைத் துறையானது 2016இல் மொத்த தேயிலை உற்பத்தியில் 74.5 சதவீதத்திற்கு பங்களிப்புச் செய்து தொடர்ச்சியாக முக்கியமானதொரு இடத்தை வகித்திருந்தது.

2

**உயர், மத்திய மற்றும் தாழ்நில தேயிலைகளின் விலையானது கொழும்பு தேயிலை ஏலத்தில் 2015இல் பதிவுசெய்யப்பட்ட அதேமாதிரியான விலைக்கு மேலாக ஆண்டு முழுவதும் காணப்பட்டது.** அதன்படி, கொழும்பு தேயிலை ஏலத்தில் தேயிலைக்கான சராசரி விலையானது முன்னைய வருடத்தில் கி.கிராமொன்றிற்கு பதிவுசெய்யப்பட்ட ரூ.401.46 இலிருந்து 2016இல் ரூ.473.15 இற்கு 17.8 சதவீதத்தால் அதிகரித்தது. கொழும்பு தேயிலை ஏலத்தில் சராசரி தேயிலை விலையை பொறுத்தமட்டில் உயர்ந்தளவு ஆண்டுக்கு ஆண்டு அதிகரிப்பானது மத்தியநிலத் தேயிலைக்கு (17.6 சதவீதம்) பதிவாகியிருந்ததுடன் அதனைத் தொடர்ந்து தாழ்நிலத் தேயிலை (17.4 சதவீதம்) மற்றும் உயர்நிலத் தேயிலை (16.5 சதவீதம்) என்பன பதிவுசெய்திருந்தன. கி.கிராமொன்றிற்கான சராசரி ஏற்றுமதி விலையானது 2015இன் ஐ.அ.டொலர் 4.37 இலிருந்து 2016இல் ஐ.அ.டொலர் 4.39இற்கு 0.6 சதவீதத்தால் சிறிதளவால் அதிகரித்திருந்தது. எனினும், உள்நாட்டு தேயிலை ஏற்றுமதியாளர்கள் 2016 காலப்பகுதியில் ஐ.அ.டொலருக்கு எதிராக இலங்கை ரூபாவானது 3.8 சதவீதத்தால் தேய்வடைந்ததிலிருந்து நன்மையடைந்திருந்ததுடன் ரூபாவிலான ஏற்றுமதி விலையானது கி.கிராமொன்றிற்கு 2015இன் ரூ.593.08 இலிருந்து 2016இல் ரூ.639.88இற்கு 7.9 சதவீதத்திலானதொரு அதிகரிப்பை பதிவுசெய்திருந்தது. பச்சைச் தேயிலைக் கொழுந்திற்கு சிறு உடமையாளர்களால் பெற்றுக்கொள்ளப்பட்ட சராசரி விலையானது கி.கிராமொன்றிற்கு 2015இன் ரூ.58.80 இலிருந்து 2016இல் ரூ.68.53இற்கு அதிகரித்திருந்தது. உலக சந்தை நிலைமையானது முன்னேற்றமடைந்தாலும், 2017இல் அத்தகைய முன்னேற்றத்திலிருந்தான பூரணமான நன்மைகளை அடைந்து கொள்வதற்கு உள்நாட்டு நிரம்பலின் இறுக்கத் தன்மை மற்றும் அதிகரித்துச் செல்லும் உற்பத்திச் செலவு என்பன உள்நாட்டு தேயிலைக் கைத்தொழிலுக்கு சவாலாக காணப்படக்கூடும்.

### இறப்பர்

**2016 இல் இறப்பர் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியானது குறைந்த விலைகளுக்குப் பதிலிறுத்தும் வகையில் மிக முக்கியமாக சிறு உடமையாளர்கள் துறையில் பால் வெட்டும் பரப்புக்கள் மற்றும் பால்வெட்டும் நாட்களின் எண்ணிக்கை ஆகிய இரண்டிலும் ஏற்பட்ட வீழ்ச்சியினால் ஏற்பட்டதாகும்.** இறப்பர் உற்பத்தியானது 2016இல் 79.1 மில்லியன் கி.கிறாம்களுக்கு 10.7 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்ததுடன் கடந்த 50 ஆண்டுகளில் பதிவுசெய்யப்பட்ட மிகக் குறைந்த உற்பத்தியளவாகும். 2016இல் மொத்த உற்பத்தியில் ஏறத்தாழ 50 சதவீதத்திற்கு வகைகூறிய சீற் இறப்பரின் உற்பத்தி 39.8 மில்லியன் கிலோகிராம்களுக்கு 10.4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்த அதேவேளை கிறேப் உற்பத்தியானது 15.0 மில்லியன் கிலோகிராம்களுக்கு 35.1 சதவீதத்தால் அதிகரித்ததுடன் இறப்பரின் ஏனைய வகைகள் 24.6 மில்லியன் கிலோகிராம்களுக்கு 25.6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. தாவர எண்ணெய் மற்றும் மெய் ஆதன அபிவிருத்திகள் போன்ற அதிக இலாபம் தரக்கூடிய வேளாண்மை பயிர்களுக்கான நிலம் தொடர்பில் போட்டித்தன்மையின் காரணமாக பால்வெட்டும் பரப்புக்களானது ஆண்டு காலங்களில் வீழ்ச்சியடைந்துள்ளது. வருவாயானது பால்வெட்டுதலுக்கு ஏற்படக்கூடிய செலவைக்கூட ஈடுசெய்யக்கூடிய வகையில் காணப்படாததன் காரணத்தினாலும் கடந்த கணிசமானளவான காலப்பகுதியில் குறைந்தளவு காணப்பட்ட இறப்பர் விலையின் காரணத்தினாலும் குறிப்பிட்ட சில எல்லை நிரப்பரப்புக்களில் பால்வெட்டும் நடவடிக்கையானது கைவிடப்பட்டுள்ளது. ஆண்டின் இறுதிக் காலப்பகுதியில் உள்நாட்டு இறப்பரின் விலையானது முன்னேற்றமடைந்த போதிலும் சில இறப்பர் நிலங்களில் தரங்குறைந்த நிலைமையின் காரணமாக முன்னேற்றமடைந்த விலைகளுக்குப் பதிலளிக்கும் வகையில் உற்பத்தியானது உடனடியாக அதிகரிக்கவில்லை. எனினும் எல்லை நிலங்களில் ஏற்பட்ட பால் வெட்டும் நிரப்பரப்புக்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட வீழ்ச்சியின் முக்கிய காரணத்தால் 2016இல் எக்டேயர் ஒன்றிற்கான விளைவானது 851 கி.கிறாமிற்கு 3.9 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. கடந்த சில காலங்களில் கைத்தொழில் துறையில் தேக்கநிலையில் காணப்பட்ட இறப்பரின் உள்நாட்டு நகர்வானது 69 மில்லியன் கி.கிறாமை அடைந்து கொள்வதற்கு சிறிதளவால் அதிகரித்திருந்ததுடன் உள்நாட்டு இறப்பர் உற்பத்தியில் 87.2 சதவீதத்திற்கு வகைகூறியது. இயற்கை இறப்பரின் ஏற்றுமதியானது 2016இல் 16.2 மில்லியன் கி.கிறாமிற்கு 55.8 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்ததுடன் இறப்பரின் உற்பத்திச் செலவானது கி.கிறாமொன்றிற்கு ரூ.180.00 இற்கு 5.9 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. சீனா, யப்பான் போன்ற நாடுகள் உள்ளிட்ட முக்கிய நாடுகளின் உயர்ந்தளவான இருப்புக்களின் காரணமாக ஏற்பட்ட உலகக் கேள்வியின் மெதுவடைவு என்பவற்றின் விளைவாக விலைகளானது கொழும்பு இறப்பர் ஏலத்தில் வீழ்ச்சியடைந்திருந்ததுடன் முக்கியமாக பன்னாட்டுச் சந்தையில் குறைந்தளவில் காணப்பட்ட மசகு எண்ணெய் 2016இல் கொழும்பு இறப்பர் ஏலத்தில் ஆர்எஸ்எஸ்1 என்ற இறப்பர் வகையின் சராசரி விலையானது கி.கிறாமொன்றிற்கு ரூ.239.28 இற்குக் காணப்பட்டதுடன் 2015இல் பதிவுசெய்யப்பட்ட சராசரியுடன் ஒப்பிடுகையில் 3.6 சதவீதம் கொண்ட வீழ்ச்சியாகும். அதேவேளை, ஆண்டு காலப்பகுதியில் கி.கிறாமொன்றிற்கான லேற்ரெக்ஸ் இறப்பரின் விலைகளும் ரூ.262.31 இற்கு 13.01 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. விலையால் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணத்தால் கிலோகிராம் ஒன்றிற்கான இயற்கை இறப்பரின் சராசரி விலை 2015இல் பதிவுசெய்யப்பட்ட

ஐ.அ.டொலர் 2.2 இலிருந்து 2016இல் ஐ.அ.டொலர் 1.6 இற்கு 30.1 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. அதிகரித்திருந்த போதிலும், உற்பத்தியாளருக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள இலாப எல்லையானது குறைந்தளவாகக் காணப்பட்டதுடன் இறப்பர் பயிர்ச்செய்கை குறைந்தளவு கவர்ச்சி கொண்டதாக காணப்படுகின்றது.

## தெங்கு

**தெங்கு மற்றும் தெங்கு உற்பத்தி பொருட்கள் என்பவற்றின் நிரம்பல் ஆண்டு காலத்தில் மெதுவடைவொன்றை அனுபவித்திருந்தது.** தெங்கு உற்பத்தியானது 2016இல் 3,011 மில்லியன் காய்களுக்கு மதிப்பிடப்பட்டுள்ளதுடன் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து 1.5 சதவீத வீழ்ச்சியாகும். தெங்கு உற்பத்தியின் வீழ்ச்சியானது மிகப் பிரதானமாக 2016 காலப்பகுதியில் பிரதானமாக தெங்கு பயிர் செய்யப்படும் பிரதேசங்களில் கிடைக்கப்பெற்ற குறைந்தளவான மழைவீழ்ச்சியே காரணமாகும். அதிகரித்த கைத்தொழில் கேள்விக்கு இணங்கிச்செல்லும் வகையில் 2015இல் 17.1 சதவீதம் கொண்ட சுருக்கத்தை அறிக்கையிட்ட தேங்காய் துருவல் உற்பத்தியானது 22.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் மீளெழுச்சி பெற்றதுடன் கடந்த தசாப்தத்தில் அதிகளவு தேங்காய் துருவல் உற்பத்தி செய்யப்பட்ட வருடமாக பதிவுசெய்திருந்தது. அதேவேளை, தேங்காய் காய்களின் விலைகள் அதிகரிப்பின் முக்கிய காரணமாக தேங்காய் எண்ணெய் உற்பத்திகள் 7.5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. 72,000 மெ. தொன்கள் கொண்ட தேங்காய் துருவல் ஏற்றுமதியானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 56.7 சதவீதம் கொண்ட கணிசமான வளர்ச்சியைப் பதிவுசெய்திருந்தது.

**குறைந்தளவான உற்பத்திகளுக்கு மத்தியில் தேங்காய்க்கான உயர்ந்த உள்நாட்டு விலைகளானது தெங்கினை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களிலிருந்தான அதிகரித்த கேள்வி மற்றும் உயர்ந்தளவான பன்னாட்டு விலைகள் என்பனவற்றின் காரணமாக ஏற்பட்டதாகும்.** தேங்காய் காய்களின் சராசரி சில்லறை விலையானது காய் ஒன்றுக்கு ரூ.45.82 இற்கு 8.3 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்திருந்தது ஆண்டு காலப்பகுதியில் தேங்காய் துருவலின் உள்நாட்டு விலையானது 2015இன் கி.கிறாமொன்றிற்கான ரூ.290.65 இலிருந்து 2016இல் ரூ.265.27 இற்கு 8.7 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. தெங்கு உள்ளீட்டு உற்பத்திகளின் சராசரி ஏற்றுமதி விலையானது கி.கிறாமொன்றிற்கு முன்னைய ஆண்டின் ரூ.439.94 இற்கு எதிராக 25.4 சதவீதத்தால் ரூ.328.30 இற்கு வீழ்ச்சியடைந்திருந்தது. உள்நாட்டுச் சந்தையில், 750 மி.லீற்றரைக் கொண்ட போத்தலொன்றின் தேங்காய் எண்ணெய் விலையானது ரூ.215.34 இற்கு 4.3 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. தேங்காய் துவருல், கொப்பரை, மற்றும் தேங்காய் எண்ணெய் போன்ற மூன்று வகையான தேங்காய் உள்ளீட்டு உற்பத்திகளின் ஏற்றுமதியானது 38.5 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் ஏற்றுமதி வருவாயானது 4.5 சதவீதத்தால் அதிகரித்திருந்தன. தேங்காய் காய்கள், தேங்காய் களிம்பு, தேங்காய் பாலோடு மற்றும் தேங்காய் பால் என்பவற்றின் ஏற்றுமதிகள் முறையே 130.5 சதவீதம், 27.1 சதவீதம் மற்றும் 38.9 சதவீதத்தால் அதிகரித்திருந்த அதேவேளை பால்மாவின் ஏற்றுமதியானது 32.5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது.

அட்டவணை 2.5
முதன்மை வேளாண்மைப் பயிர்களின் போக்குகள்

| வகை | அலகு | 2015 (அ) | 2016 (ஆ) | மாற்றம் (%) | |
|---|---|---|---|---|---|
| | | | | 2014/15 (அ) | 2015/16 (ஆ) |
| **1. தேயிலை** | | | | | |
| 1.1 உற்பத்தி (இ) | மில் கி.கி | 328.8 | 292.6 | -2.7 | -11.0 |
| 1.2 மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 203 | 203 | - | - |
| 1.3 பயிரிடப்பட்ட நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 195 | 195 | - | - |
| 1.4 உற்பத்திச் செலவு (ஈ) | ரூபா/கி.கி | 458.84 | 469.24 | -3.4 | 2.3 |
| 1.5 சராசரி விலை | | | | | |
| - கொழும்பு ஏலம் | ரூபா/கி.கி | 401.46 | 473.15 | -12.5 | 17.9 |
| - ஏற்றுமதி (க.ஏ.பெ) | ரூபா/கி.கி | 593.08 | 639.88 | -8.7 | 7.9 |
| 1.6 மீள்நடுகை | எக்டேயர்கள் | 1,226 | 104.4 | 2.6 | -14.8 |
| 1.7 புதிய பயிரிடுகை | எக்டேயர்கள் | 495 | 115 | 23.4 | -76.8 |
| 1.8 மொ.உ.உ.,இன் சதவீதமாக கூட்டப்பட்ட பெறுமதி (உ) | | 0.8 | 0.7 | -11.1 | -12.5 |
| **2. இறப்பர்** | | | | | |
| 2.1 உற்பத்தி | மில் கி.கி | 88.6 | 79.1 | -10.1 | -10.7 |
| 2.2 மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 137 | 136 | 2.2 | -0.7 |
| 2.3 பாலெடுக்கப்பட்ட நிலப்பரப்பு (ஊ) | '000 எக்டேயர்கள் | 108 | 93 | -2.7 | -13.9 |
| 2.4 உற்பத்திச் செலவு | ரூபா/கி.கி | 170.00 | 180.00 | 6.3 | 5.9 |
| 2.5 சராசரி விலை | | | | | |
| - கொழும்பு ஏலம் (ஆர்எஸ்எஸ்1) | ரூபா/கி.கி | 248.17 | 239.28 | -13.2 | -3.6 |
| - ஏற்றுமதி (க.ஏ.பெ) | ரூபா/கி.கி | 342.03 | 294.33 | -5.7 | -13.9 |
| 2.6 மீள்நடுகை (ஊ) | எக்டேயர்கள் | 621 | 591 | -70.4 | -4-9 |
| 2.7 புதிய பயிரிடுகை (ஊ) | எக்டேயர்கள் | 769 | 592 | -46.1 | -23.9 |
| 2.8 மொ.உ.உ இன் சதவீதமாக கூட்டப்பட்ட பெறுமதி (உ) | | 0.3 | 0.3 | - | - |
| **3. தெங்கு** | | | | | |
| 3.1 உற்பத்தி | காய்கள் மில் | 3,056 | 3,011 | 6.5 | -1.5 |
| 3.2 மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 455 | 466 | 3.2 | 2.4 |
| 3.3 உற்பத்திச் செலவு | ரூபா காய் | 16.39 | 16.70 | 19.9 | 1.9 |
| 3.4 சராசரி விலை | | | | | |
| - உற்பத்தியாளர் விலை | ரூபா காய் | 33.88 | 32.13 | 7.5 | -5.2 |
| - ஏற்றுமதி (க.ஏ.பெ) (எ) | ரூபா காய் | 54.54 | 41.16 | 39.6 | -24.5 |
| 3.5 மீள்நடுகை / கீழ்பயிரிடுகை (ஏ) | எக்டேயர்கள் | 4,919 | 5,000 | -15.1 | 1.6 |
| 3.6 புதிய பயிரிடுகை (ஐ) | எக்டேயர்கள் | 14,408 | 10,996 | -53.2 | -23.7 |
| 3.7 மொ. உ.உ.இன் சதவீதமாக கூட்டப்பட்ட பெறுமதி (உ) | | 0.8 | 0.7 | - | -12.5 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) பச்சைத் தேயிலை உட்பட
(ஈ) பச்சைத் தேயிலை வழங்குனர்களின் இலாபம் உட்பட
(உ) வளர்த்தல் மற்றும் பதனிடுதல் மட்டும்
(ஊ) இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் பயிர்ச்செய்கை உதவித் திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்ட நிலப்பரப்பு.
(எ) மூன்று முக்கிய தெங்கு உள்ளீட்டு உற்பத்திகள் மட்டும்.
(ஏ) தெங்குப் பயிர்ச்செய்கைச் சபையின் பயிர்ச்செய்கை உதவித் திட்டங்களில் உள்ளடக்கப்பட்ட நிலப்பரப்பு.
(ஐ) புதிதாக நடுகையிடப்பட்ட பரப்பானது ஒரு எக்டேயருக்கு 158 விதைகள் என்ற மாற்றல் வீதத்தில் தெங்குப் பயிர்ச்செய்கை சபையால் விநியோகிக்கப்பட்ட தெங்கு விதைகளின் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டது

மூலங்கள்: இலங்கைத் தேயிலைச்சபை
தேயிலை சிறு உடைமையாளர் அபிவிருத்தி அதிகார சபை
பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இறப்பர் அபிவிருத்திதிணைக்களம்
தெங்குப் பயிர்ச்செய்கைச்சபை
தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை
பெருந்தோட்ட கம்பனிகள்
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

2

## சிறு ஏற்றுமதிப் பயிர்கள்

**பாதகமான காலநிலை நிலமைகள் மற்றும் சுற்றோட்டமுடைய பருவகால போக்குகள் என்பவற்றின் காரணமாக சிறு ஏற்றுமதி பயிர்களின் உற்பத்தி வீழ்ச்சியை பதிவு செய்தது.** ஏற்றுமதி விவசாயத்திணைக்களத்தால் வழங்கப்பட்ட தற்காலிக மதிப்பீடகளின்படி சிறு ஏற்றுமதிப் பயிர்களின் உற்பத்தி 2015இல் 12.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016 இல் 9.5 சதவீத சுருக்கத்தை பதிவுசெய்திருந்தது. கறுவா, ஏலம், கோப்பி, கொக்கோ மற்றும் சாதிக்காய் என்பவற்றின் உற்பத்தி 2016இல் வளர்ச்சியைப் பதிவுசெய்திருந்த அதேவேளை மிளகு, கராம்பு மற்றும் பாக்கு என்பவற்றின் உற்பத்தி வீழ்ச்சியடைந்து இருந்தது. கறுவாவின் உற்பத்தியானது 2015இன் 17,707 மெ.தொன்களிலிருந்து 2016இல் 18,945 மெ.தொன்களுக்கு 7.0 சதவீதத்ததால் கணிசமாக அதிகரித்து இருந்தது. கொக்கோவின் உற்பத்தியானது 650 மெ.தொன்களுக்கு 42.2 சதவீதத்தினாலும் சாதிக்காயின் உற்பத்தியானது 4,155 மெ.தொன்களுக்கு 51.1 சதவீதத்தாலும் கோப்பியின் உற்பத்தியானது 2,824 மெ.தொன்களுக்கு 7.0 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்திருந்தது. மிளகு அறுவடையானது பூ மற்றும் காய் பருவங்களில் காணப்பட்ட தொடர்ச்சியான வரட்சியினால் மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 34.4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. மிளகின் விலையானது 2016இல் உயர்ந்த கேள்வியைப் பிரதிபலிக்கும் வகையில் 14.3 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. அதேவேளை, ஏனைய ஒவ்வொரு ஆண்டுகளில் அபரிமிதமான அறுவடையை உருவாக்குகின்ற கராம்பின் உற்பத்தியானது சுழற்சி முறையிலான அறுவடைப் போக்ககளின் பிரதான காரணத்தினால் 65.3 சதவீதம் கொண்ட கணிசமான வீழ்ச்சியை ஏற்படுத்தியிருந்தது. கராம்பு மற்றும் மிளகு என்பவற்றின் ஏற்றுமதி அளவானது 2016ஆம் ஆண்டின் முறைய 71.2 சதவீதம் மற்றும் 52.7 சதவீதம் என்பவற்றால் கணிசமாக வீழ்ச்சியடைந்திருந்தது. மரமுந்திரிப்பருப்பின் உற்பத்தியானது 2016இல் 3,192 மெ.தொன்களுக்கு 4.9 சதவீதத்தால் அதிகரித்ததுடன் பயிர்செய்யப்படட பரப்பளவானது 20,102 எக்டேயர்களுக்கு 7.6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. மரமுந்திரிகை பயிர்செய்யப்படும் பிரதேசங்களில் பூ மற்றும் காய் பருவ காலப்பகுதியில் அனுபவிக்கப்பட்ட எதிர்பாராத கடுமையான மழைவீழ்ச்சிக்கு மத்தியிலும் அதிகரித்த உற்பத்தியானது அடையப்பட்டது. உற்பத்தியானது அதிகரித்திருந்த போதிலும் ஆண்டு காலப்பகுதியில் மரமுந்திரிகையின் பண்ணைமட்ட விலைகளானது 5.3 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

## ஏனைய களப்பயிர்கள்

**ஆண்டு காலப்பகுதியில் காணப்பட்ட பாதகமான வானிலைநிலைமைகளின் பாதிப்பின் காரணமாக ஏனைய களப்பயிர்களின் உற்பத்தியானது வீழ்ச்சியடைந்ததிருந்தது.** ஏனைய களப்பயிர்களின் உற்பத்தி 2015இல் 362,452 மெ.தொன்களிலிருந்து 2016இல் 339,253 மெ.தொன்களுக்கு 6.4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. பயிர்செய்யப்பட்ட நிலப்பரப்புக்களின் வீழ்ச்சியில் ஏற்பட்ட பிரதான காரணத்தினால் குரக்கன், சோளம், பாசிப்பயறு, சோயா அவரை, உழுந்து, மிளகாய், உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம் மற்றும் நிலக்கடலை என்பவற்றின் உற்பத்தியானது 2016ஆம் ஆண்டில் வீழ்ச்சியடைந்திருந்தது. அதேவேளை சோளவகைப் பயிர், தட்டைப் பயறு இஞ்சி மற்றும் சின்ன வெங்காயம் என்பவற்றின் உற்பத்தியானது யாழ்ப்பாணம் மற்றும் புத்தளம் மாவட்டங்களில் ஏற்பட்டிருந்த அதிகரித்த உற்பத்தியின் பிரதான காரணத்தினால் 2015 உடன் ஒப்பிடுகையில் 2016இல் அதிகரித்திருந்தது. குறிப்பாக, ஆண்டு காலப்பகுதியில் பெரிய வெங்காய உற்பத்தி 65,223 மெ.தொன்களுக்கு 26.7 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்ததுடன் இதன் விளைவாக பன்னாட்டுச் சந்தையில் நிலவிய குறைந்தளவான விலைகளின் ஆதரவினால் பெரிய வெங்காய இறக்குமதி 215,593 மெ.தொன்களுக்கு 2.5 சதவீதத்தால் அதிகரித்தது. உருளைக்கிழங்கின் உற்பத்தியானது 2016இல் 95,805 மெ.தொன்களுக்கு 1.6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்த போதிலும் உருளைக்கிழங்கின் இறக்குமதி 4.2 சதவீதத்தால் அதிகரித்தது. கமத்தொழில் அமைச்சினால் வழங்கப்பட்ட உதவியுடன் பயிர்செய்யப்பட்ட பரப்பளவானது அதிகரித்ததன் காரணத்தால் இஞ்சி மற்றும் மஞ்சள் என்பவற்றின் உற்பத்தியும் அதிகரித்திருந்தது. தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் தற்காலிக மதிப்புகளின்படி பாதகமான வானிலைநிலைமைகளின் காரணமாக 2016ஆம் ஆண்டில் ஏனைய களப்பயிர்களின் பயிர்ச்செய்கைகாகப் பயன்படுத்தப்பட்ட மொத்த நிலப்பரப்புக்கள் 144,892 எக்டேயர்களுக்கு 4.6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

## மரக்கறிகள்

**மரக்கறிகளின் நிரம்பல் 2016 இல் தொடர்ச்சியாக அதிகரித்தது.** மொத்த மரக்கறிகள் உற்பத்தி 2015இல் 1,627,592 மெ.தொன்களுடன் ஒப்பிடுமிடத்து 2016இல் 1,648,501 மெ.தொன்களுக்கு 1.3 சதவீதத்தால் சிறிதளவால் அதிகரித்திருந்தது. இவ்வதிகரிப்பானது 2016 சிறுபோகத்தில் 2015இன் அதேகாலப்பகுதியுடன் ஒப்பிடுமிடத்து 10.4 சதவீதத்தால் அதிகரித்த மரக்கறிகளின் உற்பத்தியின் தாக்கத்தின் பிரதான காரணத்தினால் ஏற்பட்டிருந்த

போதிலும் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் நிலவிய தொடர்ச்சியான வரட்சியான வானிலைநிலைமைகளின் காரணமாக 2015/16 பெரும்போக உற்பத்தியானது 4.9 சதவீத வீழ்ச்சியைக் கொண்டிருந்ததுடன் ஆண்டு காலப்பகுதியில் அவதானிக்கப்பட்ட சிறிதளவான அதிகரிப்பை வெளிப்படுத்தியிருந்தது. 2016 சிறுபோக காலப்பகுதியில் அதிகரிக்கப்பட்ட உற்பத்தியானது 2016இன் இறுதிக் காலப்பகுதியில் நிலவிய வரட்சியின் காரணத்தினால் ஏற்பட்ட சிறுபோக நெற்பயிர்ச்செய்கை தோல்வியைத் தொடர்ந்து மரக்கறிப் பயிர்ச்செய்கைக்காகப் பயன்படுத்தப்பட்ட நிரப்பரப்புக்களின் அதிகரிப்பினால் பிரதானமாக ஏற்பட்டது. பெரும்போகக் காலத்தில் வீழ்ச்சியடைந்த மரக்கறி நிரம்பலுக்கு பதிலிறுத்தும் வகையில் மலைநாட்டு மற்றும் கீழ்நாட்டு மரக்கறிகளின் விலைகள் 2016 மே மாதத்தில் அதிகரித்திருந்தது. அதற்கும் மேலாக 2016 மே மாதத்தில் இடம்பெற்ற கடுமையான மழை மற்றும் வெள்ளப்பெருக்கு என்பவற்றின் காரணத்தினால் ஏற்பட்ட தானியங்களின் சேதங்கள் மற்றும் நிரம்பலின் தடங்கல்கள் என்பனவும் மரக்கறிகளின் விலைமட்டங்களை மேலும் மோசமடையச் செய்தது. அதேவேளை இடைநிலைப் பருவங்களில் மேற்கொள்ளப்பட்ட மரக்கறிப் பயிர்ச்செய்கைகளும் வானிலையுடன் தொடர்புடைய பின்னடைவின் காரணமாக வீழ்ச்சியடைந்தது. எனினும், சிறுபோக அறுவடைக் காலத்தில் மரக்கறிகளின் நிரம்பலானது கணிசமாக அதிகரித்ததுடன் ஓகத்து மாதப்பகுதியிலிருந்து விலைகளானது வீழ்ச்சியடைந்து கொண்டு செல்வதற்கு இட்டுச்சென்றது. மேலும், அதிகரிக்கப்பட்ட பயிர்ச்செய்கை நிலப்பரப்புக்களின் காரணமாக வடக்கு மாகாணத்திலிருந்தான மரக்கறி நிரம்பலின் கணிசமான முன்னேற்றமானது ஆண்டு காலப்பகுதியில் மரக்கறிச் சந்தையில் விலை அழுத்தங்களைக் குறைப்பதற்கு உதவியிருந்தது. எனினும், ஆண்டின் இறுதிப்பகுதியில் பருவகாலப் போக்குகளைத் தொடர்ந்து மரக்கறி விலைகள் மீண்டும் அதிகரித்தன. 2016 காலப்பகுதியில் ரூ.3.9 பில்லியன் பெறுமதியுடைய 21.1 மில்லியன் கி.கிறாம் கொண்ட மரக்கறிகள் ஏற்றுமதி செய்யப்பட்டன. வேளாண்மையாளர் மற்றும் நுகர்வோர்களைப் பாதுகாப்பதற்கு நாற்றுக்களில் சிறந்த வேளாண்மை நடைமுறைகள் தொடர்பில் வேளாண்மையாளர்களுக்கு அறிவூட்டுவதற்கு வலிமையான கொள்கை வழிமுறைகள் அவசியமாவதுடன் தானிய பயிர்ச்செய்கை மற்றும் செயன்முறை தொடர்பில் முன்னேற்றம் கண்ட தொழில்நுட்பங்களை பிரபலமடையச் செய்தல் வேண்டும். இது துறையின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கு உதவிசெய்யும்.

### பழங்கள்

**ஏற்றுமதியாளர்களால் அதிகரித்த கேள்வயை கொண்டிந்த போதிலும் பழங்கள் உற்பத்தியானது 2016 இல் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்திருந்தது.** பழங்களின் உற்பத்தி முன்னைய ஆண்டில் அவதானிக்கப்பட்ட 15.6 சதவீதத்தினைத் தொடர்ந்து 2016இல் 6.0 சதவீதத்தால் மேலும் ஒரு வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. வகைகளின் அடிப்படையில் நோக்குகின்ற போது தோடம்பழம், எலுமிச்சம்பழம், மாம்பழம், அவகாடோ மற்றும் கொடித்தோடையின் உற்பத்தியானது ஆண்டுப்பகுதியில் அதிகரித்திருந்த அதேவேளை வாழைப்பழம், பப்பாசி, அன்னாசி, றம்புட்டான், கொய்யா மற்றும் முலாம்பழம் என்பன வீழ்ச்சியைப் பதிவுசெய்திருந்தன. இலங்கை 2016 காலப் பகுதியில் ரூ.7.3 பில்லியன் செலவில் 54,107 மெற்றிக்தொன் தூய பழங்களை இறக்குமதி செய்திருந்தது. இது 2015இல் இறக்குமதி செய்யப்பட்ட அளவுடன் ஒப்பிடுகையில் 19.8 சதவீத அதிகரிப்பாகும். முன்னைய ஆண்டுகளைப் போலவே அப்பிள், தோடம்பழமை, மண்டரின் மற்றும் திராட்சை என்பனவே இறக்குமதி செய்யப்பட்ட தூயபழங்களின் பிரதான வகைகளாகும். அதேவேளை, 2016 காலப்பகுதியில் ரூ.5.0 பில்லியன் பெறுமதி வாய்ந்த 33,300 மெ.தொன் அளவுடைய தூய பழங்களை இலங்கை ஏற்றுமதி செய்திருந்ததுடன் 2016இல் பழங்களிலான வர்த்தகப் பற்றாக்குறை ரூ.2.3 பில்லியனுக்கு இட்டுச்சென்றது. உள்நாட்டு பழங்கள் மற்றும் மரக்கறிகள் என்பவற்றுக்குச் சிறந்த ஏற்றுமதிக் கேள்வி காணப்பட்ட போதிலும் தொடர்ச்சியான அடிப்படையில் பாரியளவான நிரம்பலை வழங்கமுடியாமையானது முக்கியமானதொரு வரையறையாகக் காணப்படுகின்றது. உற்பத்தியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கிடையில் நேரடியான தொடர்பினை உருவாக்குதல் மற்றும் ஒப்பந்த அடிப்படையிலான வேளாண்மை முறையினை மேலும் அபிவிருத்தி செய்தல் என்பன பழங்கள் மற்றும் மரக்கறி ஏற்றுமதிச் சந்தையை முன்னேற்றுவதற்கு முக்கியமானதாகும்.

### சீனி

**சீனி உற்பத்தி 2016 காலப்பகுதியில் கணிசமான அதிகரிப்பொன்றை பதிவு செய்திருந்தது.** 2015இல் 55,972 மெ.தொன்களுக்குக் கணிசமாக அதிகரித்திருந்த சீனி உற்பத்தியானது 2016இல் 62,048 மெ.தொன்களுக்கு 10.9 சதவீதம் என்ற மேலதிக அதிகரிப்பினைப் பதிவுசெய்திருந்தது. உயர் விளைச்சலைத் தரக்கூடிய கரும்பு வகைகள், சரியான நீர்வழங்கல் முறைமைக்கான அணுகும்தன்மையும் களப்பராமரிப்பும் மற்றும் பயிர்ச்செய்கையாளர்களின் பயிரிடல் நடவடிக்கைகளின் விரிவாக்கம் என்பனவே 2016ஆம்

2

ஆண்டில் அதிகரித்த உற்பத்திக்கு பங்களிப்புச் செய்த முக்கிய காரணிகளாகும். கல்லோயா தொழிற்சாலையானது எதிர்க்கணிய செயலாற்றத்தினைக் காட்டியிருந்த போதிலும் பெல்வத்தை மற்றும் செவனகல தொழிற்சாலைகள் என்பன உற்பத்தியில் ஏற்பட்ட முன்னேற்றத்திற்குப் பங்களிப்புச் செய்திருந்தன. கல்லோயா தொழிற்சாலையில் சாறாக்கலுக்கான கரும்பின் கிடைப்பனவானது வீழ்ச்சியடைந்திருந்த போதிலும் பெல்வத்த மற்றும் செவனகல ஆகிய இரண்டு தொழிற்சாலைகளிலும் சாறாக்கப்பட்ட கரும்பின் எண்ணிக்கை அதிகரித்திருந்தது. பெல்வத்த தொழிற்சாலையானது 2016இல் 34,188 மெ.தொன்களுக்கு 23.8 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்திருந்தது. 2015இல் மொத்தச் சீனி உற்பத்தியில் 49.3சதவீதத்திற்கு வகைகூறிய பெல்வத்த தொழிற்சாலையானது அதனது பங்கினை 55.1 சதவீதத்திற்கு அதிகரித்ததனூடாக அதனது நிலையை மேலும் உறுதிப்படுத்தியது. செவனகல தொழிற்சாலையானது 2016இல் 17,234 மெ.தொன்கள் உற்பத்திக்கு 19.9 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்திருந்தது. அதேவேளை, இரண்டாவது ஆண்டாகவும் கல்லோயா தொழிற்சாலையயின் உற்பத்தியானது 2016ஆம் ஆண்டில் 10,626 மெ.தொன்களுக்கு 24.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. பாதகமான வானிலைநிலைமைகளால் ஏற்பட்ட கரும்பின் வீழ்ச்சியடைந்த கிடைப்பனவு மற்றும் அவற்றின் மோசமான தரம் என்பன கல்லோயா தொழிற்சாலையின் செயலாற்றத்தில் மோசமான உற்பத்தி இடம்பெறுவதற்கு பங்களிப்புச் செய்திருக்கின்றது. இத்தகைய அபிவிருத்திகளுக்கு மத்தியில் உற்பத்தித்திறன் குறிகாட்டிகளில் ஒன்றான சீனியின் மீட்பு வீதமானது[1] முன்னைய ஆண்டின் 7.5 சதவீதத்திலிருந்து 2016இல் 7.6 சதவீதத்திற்கு சிறிதளவில் அதிகரித்தது. 2016ஆம் ஆண்டின் ஒட்டுமொத்த உள்நாட்டுச் சீனி உற்பத்தியானது ஏறத்தாழ நாட்டின் 9.5 சதவீதம் கொண்ட மொத்தச் சீனித் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்வதற்குப் போதுமானதாகக் காணப்பட்டது. அதிகரித்த கேள்வியுடன் இணைந்த வகையில் சீனி இறக்குமதி மீது காணப்பட்ட குறைந்தளவான சிறப்புப் பண்டத் தீர்வையானது சீனி இறக்குமதியை 651,181 மெ.தொன்களுக்கு 4.4 சதவீத அதிகரிப்பிற்கு இட்டுச் சென்றிருந்தது. பரந்தளவான சாத்தியப்பாடு அதேபோன்று பயிர்ச்செய்கையாளர்களின் சீனிப் பயிர்ச்செய்கைக்கான மேம்பாட்டின் தேவைப்பாடு என்பவற்றைக் கருத்திற்கொண்டு பெல்வத்த மற்றும் செவனகல தொழிற்சாலைகள் தற்போது காணப்படுகின்ற பயிர்ச்செய்கையாளர்களுக்குரிய நிகழ்ச்சித்திட்டங்களை விரிவாக்குவதற்கு அதிகளவான முன்னுரிமையை வழங்கியிருந்தன.

## மீன்பிடி

**மீன் பிடித்துறை 2016 இல் மெதுவாக விரிவாக்கமடைந்திருந்தது.** மீன் உற்பத்தி 2015 உடன் ஒப்பிடுகையில் 2016இல் 530,920 மெ.தொன்களுக்கு 2.1 சதவீதத்தால் அதிகரித்தது. கரையோர மீன் மற்றும் கரைகடந்த மீன் போன்ற உப துறைகளைக் கொண்ட ஆழ்கடல் மீன் உற்பத்தி துறையானது மொத்த மீன் உற்பத்தியில் 86.0 சதவீதத்திற்கு வகைகூறியதுடன் 456,990 மெ.தொன்களுக்கு 0.9 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. கரையோர மீன் உற்பத்தியானது 274,160 மெ.தொன்களுக்கு 1.9 சதவீதத்தால் சிறிதளவால் அதிகரித்த அதேவேளை கரைகடந்த மீன் உற்பத்தியானது 182,830 மெ.தொன்களுக்கு 0.6 சதவீத வீழ்ச்சியைப் பதிவுசெய்திருந்தது. மொத்த மீன் உற்பத்தியில் எஞ்சிய 14.0 சதவீதத்திற்கு பகுதிக்கு வகைகூறிய நன்னீர் மீன்பிடி மற்றும் அலங்கார மீன் போன்ற துறைகள் 2015 உடன் ஒப்பிடுகையில் 9.9 சதவீதத்தால் கணிசமான அதிகரித்திருந்தன. நன்னீர் மீன்பிடி மற்றும் அலங்கார மீன்பிடி துறை என்பவற்றின் வளர்ச்சியானது மிகப் பிரதானமாக நன்னீர் நீர்த்தேக்கங்களுக்கு இடப்பட்ட மீன்குஞ்சுகளின் அதிகரிப்பு அதேபோன்று அலங்கார மீன்பிடித் துறையில் ஏற்பட்ட முன்னேற்றம் என்பவற்றால் ஏற்பட்டிருந்தது. மொத்த மீன் இறக்குமதி 115,693 மெ.தொன்களுக்கு 3.6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்த வேளை நெத்தலி அல்லது கருவாட்டு மீன்களின் இறக்குமதி ஆண்டுப்பகுதியில் 34,978 மெ.தொன்களுக்கு 5.8 சதவீதத்தால் அதிகரித்தது. அதேவேளை தகரத்தில் அடைக்கப்பட்ட மீன்களின் இறக்குமதி 37,089 மெ.தொன்களுக்கு 24.3 சதவீதத்தால் கணிசமாக வீழ்ச்சியடைந்தது. 2016 யூன் 21 இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் ஐரோப்பிய ஒன்றியத்திற்கான இலங்கையின் கடலுணவு ஏற்றுமதிகள் மீதான தடையின் நீக்கத்துடன் இலங்கையின் மீன்வகைகளுக்கான ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்தான கேள்வியானது விரிவாக்கப்பட்டது. 2016ஆம் ஆண்டில் ஐரோப்பிய ஒன்றியத்திற்கான மீன் ஏற்றுமதி 2,540 மெ.தொன்களுக்கு 23.1 சதவீதத்தால் கணிசமாக அதிகரித்திருந்தது. முன்னோக்கிப் பார்க்கையில் மோசமான கையாளலின் காரணமாக மீன்பிடியில் ஏறத்தாழ 25 சதவீதமானது அறுவடைக்குப் பின்னரான இழப்பீடாக மதிப்பிடப்பட்டுள்ளதுடன் அதிகளவிலான அறுவடைக்குப் பின்னரான இழப்பினை நீக்குதலானது கைத்தொழில் துறையின் முழுமையான சாத்தியப்பாட்டினை அடைந்து கொள்வதற்கு முக்கியமானதாகும்.

---

[1] $\text{சீனி மீட்பு வீதம்} = \dfrac{\text{உற்பத்தி செய்யப்பட்ட சீனி}}{\text{பிழியப்பட்ட கரும்பின் அளவு}} \times 100$

அட்டவணை 2.6
**மீன் உற்பத்தி**

'000 மெற்றித்தொன்கள்

| துணைத்துறை | 2015 | 2016(அ) | மாற்றம் (%) | |
|---|---|---|---|---|
| | | | 2014/15 | 2015/16(அ) |
| கடல் | 453 | 457 | -1.4 | 0.9 |
| கரையோரம் மற்றும் களப்பு | 269 | 274 | -3.5 | 1.9 |
| கடற்கரையிலிருந்து தொலைவில் | 184 | 183 | 1.9 | -0.6 |
| நன்னீர் மீன்பிடி | 67 | 74 | -11.2 | 9.9 |
| பிடிப்பு | 57 | 58 | -17.1 | 2.4 |
| பண்ணை மீன் வளர்ப்பு | 3 | 9 | 77.0 | 201.3 |
| இறால் வளர்ப்பு | 7 | 6 | 37.7 | -15.0 |
| மொத்தம் | 520 | 531 | -2.8 | 2.1 |

(அ) தற்காலிகமானது

மூலம்: கடற்றொழில் மற்றும் நீர்வாழ் மூலவளங்கள் அமைச்சு

## கால்நடை

**பாலுற்பத்தியில் சுயபூர்த்தியை அடைந்து கொள்வதற்காக அரசாங்கத்தின் முயற்சியின் பிரதான காரணத்தினால் 2016இல் 384 மில்லியன் லீற்றருக்கு 2.6 சதவீத வளர்ச்சியுடன் மொத்தத் தேசிய பால் உற்பத்தியானது தொடர்ச்சியாக அதிகரிக்கப்பட்டது.** நிதியகம பண்ணையில் இறக்குமதி செய்யப்பட்ட கன்று ஈனாத பசுக்களிலிருந்தான பால் எடுத்தல், பதனிடப்படுத்தப்படாத பாலிற்காக பண்ணையாளர்களால் பெற்றுக்கொள்ளப்பட்ட கவர்ச்சியான விலைகள் மற்றும் பால் தொழிற்சாலைகளின் அதிகரித்த இயலளவுடன் பாரிய பால் சேகரிப்பாளர்களிடமிருந்து பதனிடப்படாத பாலிற்கான வளர்ச்சியடைந்துவரும் கேள்வி போன்ற பல்வேறுபட்ட காரணிகளினால் அதிகரித்த உற்பத்தியானது காரணமாக இருந்தது. மொத்த பால் உற்பத்தியில் ஏறத்தாழ 82.8 சதவீதம் வகைகூறிய பசும்பாலு் உற்பத்தி 317.9 மில்லியன் லீற்றருக்கு ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 4.1 சதவீதத்தில் அதிகரித்த அதேவேளை எருமைப் பசுக்களின் பால் உற்பத்தி 66.1 மில்லியன் லீற்றருக்கு 4.2 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. மொ.உ.உற்பத்தியானது தற்போது மொத்தக் கேள்வியில் ஏறத்தாழ 42.0 சதவீதத்தை அடைந்து கொள்வதற்குப் போதுமானதாகும். அதேவேளை, பால் கறக்கும் பசுக்களின் எண்ணிக்கை 284,400 இற்கு 5.6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்ததுடன் பால் கறக்கும் எருமைப் பசுக்களின் எண்ணிக்கை 83,150 இற்கு 9.2 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. 2015 வரைக்கும் பசுக்களின் எண்ணிக்கையானது ஒரு மதிப்பீடாக மாத்திரம் காட்டப்பட்டது. 2016ஆம் ஆண்டில் மிருகங்களின் உற்பத்தி மற்றும் சுகாதாரம் என்பவற்றுடன் தொடர்புடைய திணைக்களத்தில் பணிபுரியும் கால்நடை அபிவிருத்தி பயிற்றுவிப்பாளர்கள் என்பவர்களின் பங்குபற்றலுடன் மொத்த எண்ணிக்கையின் கணிப்பீடானது நடாத்தப்பட்டதுடன் நாடு முழுவதிலும் சிறிதளவான பணிகள் விநியோக அலகுகளிலிருந்து சேகரிக்கப்பட்ட தரவுகளின் ஊடாக பசுக்களின் எண்ணிக்கையானது பட்டியலிடப்பட்டிருந்தது. இக்கணிப்பீட்டின் விளைவாக 2016ஆம் ஆண்டிற்கான பசுக்களின் எண்ணிக்கையைக் காட்டுகின்ற இலக்கமானது இலங்கையிலுள்ள பசுக்களின் உண்மையான எண்ணிக்கையை வெளிப்படுத்துவதுடன் மந்தைகளின் இலக்கங்களில் ஏற்படுகின்ற சதவீத மாற்றமானது தற்போதைய மொத்த எண்ணிக்கைக் கணிப்பீட்டுடன் முன்னைய மதிப்பீட்டு இலக்கங்களுடன் சமப்படுத்தப்படுகின்றது. 2016இல் தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையால் பால் உற்பத்தியானது 11.0 மில்லியன் லீற்றரிலிருந்து 17.9 மில்லியன் லீற்றருக்கு அதிகரித்த அதேவேளை மில்கோ பிறைவேற் லிமிடெட்டானது அதனது பால் சேகரிப்பை 70.0 மில்லியன் லீற்றருக்கு 9.4 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. பொலநறுவை மற்றும் திகா போன்ற இடங்களில் அமையப்பெற்றுள்ளவற்றின் செயன்முறை இயலளவை அதிகரிக்கும் நோக்கில் மில்கோ பிறைவேற் லிமிடெட்டினால் முகாமை செய்யப்படுகின்ற தொழிற்சாலைகளின் நவீனமயமாக்கல் நிறைவுபெற்றுள்ள அதேவேளை அம்பவேல தொழிற்சாலையானது 2017இன் முதலாவது காலாண்டின் இறுதியில் நிறைவு செய்யப்படும். பால் உற்பத்தியின் தேசிய சராசரி செலவானது தேங்காய் புண்ணாக்குகளின் விலையில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக 2015ஆம் ஆண்டுப்பகுதியுடன் ஒப்பிடுகின்ற போது லீற்றர் ஒன்று ரூ.31.99 இற்கு ரூ.2.67 இனால் வீழ்ச்சியடைந்த அதேவேளை லீற்றர் ஒன்றுக்கான சராசரிப் பண்ணை மட்ட விலைகள் ரூ.64.00 இற்கு ரூ.5.00 இனால் அதிகரித்ததுடன் பண்ணையாளர்கள் அதிக வருமானத்தினை ஈட்டிக் கொள்வதற்கும் வழிவகுத்திருந்தது. உற்பத்தியானது அதிகரித்திருந்த போதிலும் 2016ஆம் ஆண்டில் ரூ.33.6 பில்லியன் பெறுமதி வாய்ந்த பால்மா இறக்குமதி செய்யப்பட்டிருந்ததுடன் இது 94,011 மெ.தொன்களுக்கு 15.0 சதவீத அதிகரிப்பாகும். 2016இல் 16,577 பசுக்கன்றுகளைப் பதிவுசெய்திருந்த கன்று ஈனாத பசுக்களை வளர்ப்புச் செய்யும் செயற்றிட்டம் போன்ற பல்வேறுபட்ட நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதன் ஊடாக நாட்டில் பசுக்களின் தரத்தினை உயர்த்துவதற்கு



அட்டவணை 2.7
**கால்நடை வளர்ப்புத்துறை புள்ளிவிபரங்கள்**

| துணைத்துறை | 2015 (அ) | 2016 (ஆ) | மாற்றம் (%) | |
|---|---|---|---|---|
| | | | 2014/15 (அ) | 2015/16 (ஆ) |
| 1. மொத்த மந்தைகள் (எண்ணிக்கை) (மில்) | 1.4 | 1.2 | -8.9 | -14.1 |
| கறவைப் பசுக்கள் | 1.1 | 0.9 | -6.9 | -13.1 |
| எருமைகள் | 0.3 | 0.3 | -15.1 | -17.4 |
| 2. தேசிய பால் உற்பத்தி (மில். லீற்றர்கள்) | 374.4 | 384.0 | 13.7 | 2.6 |
| பசும்பால் | 305.4 | 317.9 | 15.2 | 4.1 |
| எருமைப்பால் | 69.1 | 66.1 | 7.9 | -4.2 |
| 3. பால் உற்பத்திகள் (மில். லீற்றர்கள்)(இ) | 33.5 | 36.9 | 14.0 | 10.1 |
| 4. உற்பத்தியாளர் விலை - பசும்பால்(ரூ./லீற்றர்) | 58.91 | 64.03 | -1.7 | 8.7 |
| 5. தேசிய முட்டை உற்பத்தி (எண்ணிக்கை) (மில்) | 1,898.9 | 2,059.7 | 16.0 | 8.5 |
| 6. தேசிய கோழி இறைச்சி உற்பத்தி ('000 மெ.தொ) | 164.5 | 173.8 | 13.8 | 5.7 |

(அ) திருத்தப்பட்டது.
(ஆ) தற்காலிகமானது.
(இ) தேசிய கால்நடை அபிவிருத்திச்சபை. மற்றும் மில்கோ பிறைவேட் லிமிடட் என்பவற்றின் உற்பத்திகள் மாத்திரம் உள்ளடக்கப்படுகின்றது

மூலங்கள்: கிராமிய பொருளாதார விவகார- அமைச்சு
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
தேசிய கால்நடை அபிவிருத்திச்சபை
மில்கோ பிறைவேட் லிமிடெட்

2

அரசாங்கம் தொடர்ச்சியாகக் கவனத்தைச் செலுத்தியிருந்தது. இவ்வழிமுறைகள் இறக்குமதி செய்யப்பட்ட பால்மாவின் பெறுமதியைக் குறைக்க முடிகின்ற அதேவேளை சர்வதேச நியமங்களை அடைந்து கொள்ளும் வகையில் உள்நாட்டு பால் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் பாலின் தரம் மேலும் முன்னேற்றம் செய்யப்படுதல் வேண்டும்.

**கோழிப் பண்ணைத் துறை அதனது வளர்ச்சி உத்வேகத்தை 2016ஆம் ஆண்டிலும் தொடர்ந்தது.** விலங்கு உற்பத்தி மற்றும் நலத் திணைக்களத்தின் தற்காலிக மதிப்பீடுகளின் அடிப்படையில் கோழியிறைச்சியின் உற்பத்தி 173,830 மெ.தொன்களுக்கு 5.7 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்தது. அதிகரிக்கப்பட்ட கோழியிறைச்சி உற்பத்தியானது மிகப் பிரதானமாக புறொயிலர் பேறன்ஸ் மற்றும் லேயர் பேறன்ஸ் என்பவற்றின் இறக்குமதிகளின் அதிகரிப்பு முறையே 88.7 சதவீதம் மற்றும் 107.7 சதவீதம் என்பவற்றால் தூண்டப்பட்டது. எனினும், தோலுடனான கோழி இறைச்சியின் உற்பத்திச் செலவானது கி.கிறாமொன்றிற்கு 2015இன் ரூ.291.16 இலிருந்து 2016இல் ரூ.306.74 இற்கு அதிகரித்தது. உற்பத்தியானது அதிகரித்திருந்த போதிலும் 2016இல் கோழியிறைச்சியின் விலை அதிகரித்திருந்தது. கி.கிறாமொன்றிற்கான உடன் கோழி இறைச்சியின் சராசரி விலை முன்னைய ஆண்டின் ரூ.507.90 உடன் ஒப்பிடுகையில் 2016இல் ரூ.538.56 ஆகக் காணப்பட்டது. 2017 மாச்சு 14 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் கி.கிறாம் ஒன்றிற்கு புறொயிலர் கோழியிறைச்சிக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலை ரூ.420.00 ஆகக் காணப்பட்டது. அதேவேளை, முட்டை உற்பத்தி 2.0 பில்லியனுக்கு 8.5 சதவீதத்தால் அதிகரித்திருந்த அதேவேளை முட்டைகளின் சராசரி உற்பத்திச் செலவீனமானது ரூ.10.07 இலிருந்து ரூ.12.41 இற்கு அதிகரித்திருந்தது. முட்டை ஒன்றின் சராசரி விலை 2015இன் ரூ.14.80 இலிருந்து 2016இல் ரூ.16.10 இற்கு அதிகரித்தது. பன்றி இறைச்சி மற்றும் ஆட்டிறைச்சி என்பவற்றின் உற்பத்தியானது முறையே 1.4 சதவீதம் 3.7 சதவீதத்தால் 7,280 மெ.தொன் 1,400 மெ.தொன்னிற்கு அதிகரித்த அதேவேளை மாட்டிறைச்சியின் உற்பத்தி 31,540 மெ.தொன்களுக்கு 2.0 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. கி.கிறாமொன்றிற்கான பன்றி இறைச்சியின் உற்பத்திச் செலவினம் ரூ.264.58 ஆகக் காணப்பட்ட அதேவளை ஆட்டிறைச்சி மற்றும் மாட்டிறைச்சி என்பன முறையே கி.கிறாமொன்றிற்கு ரூ.281.15 மற்றும் ரூ.357.37 இற்குக் காணப்பட்டது. பன்றி இறைச்சி, ஆட்டிறைச்சி மற்றும் மாட்டிறைச்சி என்பவற்றின் சராசரி விலைகள் 8.2 சதவீதம் 12.2 சதவீதம் மற்றும் 18.5 சதவீதம் என்பவற்றால் அதிகரித்திருந்தது.

### காடாக்கல்

**வனத் திணைக்களத்தால் நடாத்தப்பட்ட வன உள்ளடக்க மதிப்பீட்டு அளவீட்டின்படி இலங்கையின் காட்டின் அளவானது 1,951,472 எக்டேயர்களாக விளங்கியது.** எனினும் இவ்வளவீடானது பத்து ஆண்டுகளுக்கு ஒரு முறை மாத்திரம் நடாத்தப்படுவதால் 2010இல் கடைசியாக நடாத்தப்பட்ட அளவீட்டிலிருந்தே பிந்திய தகவல்கள் காணப்படுகின்றன. சட்ட ரீதியற்ற வகையிலான காடழித்தல், குடியேற்றல் மற்றும் சேனைப் பயிர்ச்செய்கை போன்றவற்றின் காரணமாக, இயற்கை காடுகளின் பரப்புக்களின் உள்ளடக்கமானது ஆண்டு காலப்பகுதியில் மோசமடைந்திருந்தது. ஆகையால், காலத்திற்கு ஏற்றவகையில் நாட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள காட்டுப் பகுதிகளில் ஏற்பட்ட மாற்றங்களை மதிப்பிடுவதற்கு தற்போது கிடைக்கப்பெற்றுள்ள பிந்திய தொழில்நுட்பங்களை பயன்படுத்த வேண்டியதுடன் ஓர் முறைசார்ந்த அளவீடானது உயர்ந்தளவான மீடிறன்களில் நடாத்தப்படல் வேண்டும் ஆண்டுக் காலப்பகுதியில், மரத்தண்டு பிரித்தெடுப்பிற்காக அழிக்கப்பட்ட காடுகள் 2015இன் 423 எக்டேயர்களுடன் ஒப்பிடுகையில் 781 எக்டேயர்களாகக் காணப்பட்டது. அத்துடன், மலைகளின் உச்சியில் நாற்றல், செறிவூட்டல் நாற்றல், மற்றும் இடை வலய நாற்றல் என்பவற்றின் கீழ் மேற்கொள்ளப்பட்ட மீள் காடாக்கலானது 100 எக்டேயர்களாகக் காணப்பட்டது. காடழிப்பு மற்றும் காடுகளின் தரம்குறைத்தல் என்பவற்றிலிருந்தான புகையினை குறைப்பது தொடர்பில் ஐக்கிய நாடுகளின் நிகழ்ச்சித்திட்டமானது 2016 காலப்பகுதியில் தொடர்ச்சியாக தொழிற்பட்ட அதேவேளை, காடழித்தல் மற்றும் காடுகளின் தரம் குறைத்தல் போன்றவற்றிலிருந்தான புகையை குறைப்பதற்காக அமுல்படுத்தப்படுகின்ற தேசிய உபாயமொன்றின் அபிவிருத்தி (REDD++)[2] இலங்கைக்கான தேசிய வன இருப்பின் வடிவமைப்பு தேசிய வன கண்காணிப்பு முறைமையொன்றின் அபிவிருத்தி மற்றும் காலநிலை மாற்றம் மீதான ஐக்கிய நாடுகளின் கட்டமைப்பு மாநாட்டிற்கான தேசிய வன உசாத்துணை மட்டமொன்றின் சமர்ப்பிப்பு போன்றவற்றிற்கு உதவியிருந்தது. 2012இலிருந்து அமுல்படுத்தப்பட்டு வருகின்ற இலங்கை சமூக வன நிகழ்ச்சித்திட்டமானது திறன் அபிவிருத்தி மீதான பயிற்சியை வழங்கல் மற்றும் நுண்பாக தொழில் முயற்சிகளை நிறுவுவதற்கான மூலவள உதவியை வழங்கல் என்பவற்றின் ஊடாக 2016இலும் தொடர்ந்தது. நாட்டின் காடுகளால் சூழப்பட்ட நிலப்பரப்புக்களை 2016இன் 29.7 சதவீதத்திலிருந்து 2019இல் 32.0 சதவீதம் வரைக்கும் அதிகரிக்கும் நோக்கில் 2014இல் ஆரம்பிக்கப்பட்ட வன மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தரம் குறைக்கப்பட்ட காடுகளின் மறுசீரமைப்பு மற்றும் தற்போது

2 REDD++ஆனது காடழித்தல் மற்றும் காட்டின் அளவைக் குறைத்ததிலிருந்து ஏற்படும் வெளியீடுகளை குறைத்தல் மற்றும் கரியநிலம் அல்லது கனிய மணல், புறக்காட்டு மரங்கள், வேளாண்காடு, பெருந்தோட்டங்கள் அல்லது இயற்கைக் காடு போன்ற காபன் சேமிப்பை பாதிக்கின்ற காணி மூடல்களின் எல்லா மாற்றல்களையும் உள்ளடக்குகின்ற நிகழ்ச்சித் திட்டமாகும்.

காணப்படுகின்ற காடுகளை பாதுகாக்கும் நோக்கில் 2016ஆம் ஆண்டு காலப்பகுதியில் வனத் திணைக்களமானது பல்வேறுபட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது. அதேவேளை, தனியார்த் துறையின் மீள் காடாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வர்த்தக அளவிலான தனியார் வன பெருந்தோட்டங்களின் பரப்பானது 2016இல் 413 எக்டேயர்களாக காணப்பட்டது.

### வேளாண்மைக் கொள்கைகளும் நிறுவன ரீதியான உதவிகளும்

**அரசாங்கத்தின் 2016-2018ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான உணவு உற்பத்தி தேசிய நிகழ்ச்சித்திட்டமானது பல்வேறுபட்ட இலக்கிடல்களை கவனம் செலுத்தியிருந்தது.** இது பயிர் பன்முகப்படுத்தல் மற்றும் உற்பத்தித்திறன் முன்னேற்றம் என்பவற்றினூடாக 2018ஆம் ஆண்டளவில் சோளம், சோயா, அவரை, மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு போன்றவை தொடர்பில் நாடு சுயபூர்த்தியை அடைந்துகொள்ளும் வகையிலான இலக்குகள் மற்றும் 2020ஆம் ஆண்டளவில் வேளாண்மை - வியாபாரத்திற்கு சுயபூர்த்தி பண்ணைக் கைத்தொழிலை மாற்றுவதற்கு உதவுதல் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. மேலும், உணவு உற்பத்தி தேசிய நிகழ்ச்சித்திட்டமானது உணவுப் பாதுகாப்பை அடைந்துகொள்ளல், விவசாயிகளுக்கு உயர்ந்தளவானதும் நிலைத்துநிற்கக் கூடியதுமான வருமானம் மற்றும் இலாபகரமான விலையை உறுதிப்படுத்தல், இலங்கை மற்றும் வெளிநாடுகளில் போட்டித்தன்மை வாய்ந்த சந்தைகளுக்கான தடங்களற்ற அணுகும் தன்மை, பண்ணை பொறிமுறைப்படுத்தல், பயிர்ச்செய்யப்படுகின்ற நிலப்பரப்பின் விரிவாக்கம், போக்குவரத்தின் போதான வீண்விரயம் மற்றும் சூழல் பாதுகாப்பை நிச்சயப்படுத்தல், வினைத்திறனான பண்ணை முகாமைத்துவ நுட்பங்களை அறிமுகப்படுத்தல் மற்றும் உயர் விளைச்சலை தரக்கூடிய விதைகளை பயன்படுத்தல் மற்றும் முன்னேற்றகரமான நீர் முகாமைத்துவம் போன்றவை தொடர்பில் கவனம் செலுத்தியிருந்தது. அதன்படி, கமத்தொழில் அமைச்சானது உணவு உற்பத்தி தேசிய நிகழ்ச்சித்திட்டமானது உணவுப் பாதுகாப்பை அடைந்துகொள்ளல், விவசாயிகளுக்கு உயர்ந்தளவானதும் நிலைத்து நிற்கக் கூடியதுமான வருமானம் மற்றும் இலாபகரமான விலையை உறுதிப்படுத்தல், இலங்கை மற்றும் வெளிநாடுகளில் போட்டித்தன்மை வாய்ந்த சந்தைகளுக்கான தடங்களற்ற அணுகும் தன்மை, பண்ணை பொறிமுறைப்படுத்தல், பயிர் செய்யப்படுகின்ற நிலப்பரப்பின் விரிவாக்கம், போக்குவரத்தின் போதான வீண்விரயம் மற்றும் சூழல் பாதுகாப்பை நிச்சயப்படுத்தல், வினைத்திறனான பண்ணை முகாமைத்துவ நுட்பங்களை அறிமுகப்படுத்தல் மற்றும் உயர் விளைச்சலை தரக்கூடிய விதைகளை பயன்படுத்தல் மற்றும் முன்னேற்றகரமான நீர் முகாமைத்துவம் போன்றவை தொடர்பில் கவனம் செலுத்தியிருந்தது. அதன்படி, கமத்தொழல் அமைச்சானது 2016 இலிருந்து உணவு உற்பத்தி தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 500,00 வீட்டுத் தோட்டங்களை அபிவிருத்தி செய்தல் எனும் நோக்கில் வீட்டுத்தோட்ட மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தை தூண்டியிருந்தது. நிகழ்ச்சித் திட்டமானது வீட்டுத்துறையினரின் உணவு மற்றும் போசாக்கு தேவைப்பாட்டை பூர்த்தி செய்வதற்கு உதவுவது மாத்திரமன்றி நாட்டின் ஒட்டுமொத்த உணவு உற்பத்தியை மாற்றுவதற்கும் துணை புரியும். அரசாங்கமானது வேளாண்மைத் துறை தொடர்பில் உணவுப் பாதுகாப்பை முன்னேற்றல் மற்றும் சூழல் நிலைத்துநிற்கும் தன்மை நிச்சயப்படுத்திக் கொள்ளல் என்பவை தொடர்பில் படிமுறைகளை எடுத்திருந்த அதேவேளை உணவு பாதுகாப்பை அடைந்து கொள்ளல் மீது மாத்திரம் கரிசனை கொள்வதற்கு பதிலாக அனைத்து உணவு வகைகள் தொடர்பிலும் உற்பத்தித் திறனை அதிகரித்தல் என்பதனை நோக்கி விரிவானதொரு அணுகுமுறையை நாடு பின்பற்ற வேண்டியுள்ளது.

**அரசாங்கம் நெல் உற்பத்தியை அதிகரிப்பதற்கும் நெல் விலைகளை உறுதிப்படுத்துவதற்கும் பல்வேறுபட்ட வழிமுறைகளை அறிமுகப்படுத்தியிருந்தது.** வளமாக்கிகளின் மிகையான பயன்பாட்டின் காரணத்தால் நீர் மாசடைதல் போன்ற சுகாதார மற்றும் சூழல் சார்ந்த பிரச்சினைகளை குறைப்பதற்காகவும் பண்ணைத் துறையில் உயர்ந்தளவான நச்சுத்தன்மைவாய்ந்த விவசாய இரசாயணங்களின் பயன்பாட்டை தடுக்கும் நோக்கிலும் 'ஆரோக்கியமானதொரு வேளாண்மை - ஆரோக்கியமானதொரு மக்கள் கூட்டம் - நச்சுத்தன்மையைற்ற நாடு' என்ற பெயரிலான தேசிய நிகழ்ச்சித்திட்டமொன்றை ஆரம்பித்திருந்தது. மூன்று வருட நிகழ்ச்சித்திட்டமானது அரிசியின் பாரம்பரிய வகைகளின் அதிகரித்த பயன்பாடு (3 வருடங்களில் 2016 - 2019 காலப்பகுதியில் 30.0 சதவீதத்திற்கும் மேலாக), இரசாயன வளமாக்கிகள் மற்றும் பூச்சிக் கொல்லிகள் என்பவற்றை இல்லாமல் செய்தல் மற்றும் சேதன வேளாண்மையை மேம்படுத்தல் போன்றவற்றின் மீது கவனம் செலுத்தியிருந்தது. நெற் சந்தைப்படுத்தல் சபையானது 2014/15 பெரும்போக காலப்பகுதியிலான 160,000 மெற்றிக் தொன்களுடன் ஒப்பிடுகையில் 2015/16 பெரும்போகத்திலிருந்து 131,981 மெற்றிக் தொன் கொண்ட நெல் இருப்பை கொள்வனவு செய்திருந்த அதேவேளை, 2015 சிறுபோகத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட 175,270 மெற்றிக் தொன்களுடன் ஒப்பிடுமிடத்து 2016 சிறுபோகத்திலிருந்து 25,447 மெற்றிக் தொன்கள் கொண்ட நெல் மாத்திரமே கொள்வனவு செய்வதற்கு

முடியுமாயிருந்தது. 2016 சிறுபோகத்தில் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லானது இலக்கிடப்பட்ட அளவின் 21.2 சதவீதத்திற்கு சமமானதாகும். இந்த நடவடிக்கையானது குறைவடைந்து அறுவடைக்கு மேலாக விவசாயிகளிடமிருந்து உயர்ந்தளவான விலைகளில் நெல்லை தனியார் துறை நெல் ஆலை உரிமையாளர்களின் ஊக அடிப்படையில் கொள்வனவு செய்தமையாலும் ஏற்பட்டிருந்தது. சரியான நேரத்தில் நெல்லை கொள்வனவு செய்தல் மற்றும் நெல் இருப்புக்களை வெளியிடல் என்பவற்றினூடாக நெல் கொள்வனவு நிகழ்ச்சித் திட்டத்தை நியாயப்படுத்த வேண்டியது அவசியமானதாகும். இது விவசாயிகள் நுகர்வோர்கள் அதேபோன்று நெல் சந்தைப்படுத்தல் சபை போன்ற அனைத்து பங்குதாரர்களுக்கும் நன்மையளிக்கும். அதேவேளை, அரிசி ஆராய்ச்சி நிறுவனமானது வரட்சியை எதிர்க்கக் கூடியதும் வெள்ளத்திற்கு ஏற்றவகையில் மாற்றம் செய்தல் என்பவற்றுடன் 20.0 சதவீதத்திற்கு மேலான சாத்தியமான விளைவு மட்டத்தை உற்பத்தி செய்யக் கூடிய பல்வேறுபட்ட புதிய உயர் விளைச்சலை தரக்கூடிய அரிசி வகைகளை அபிவிருத்தி செய்திருந்தது. அரிசி ஆராய்ச்சி நிறுவனமானது நெல்லை விதைப்பதற்காகவும் தேவைப்படுகின்ற நெல் விதைகள் அதேபோல் ஊழியச் செலவு என்பவற்றை கணிசமாக குறைப்பதற்கும் முன்னேற்றகரமானதொரு முறையொன்றையும் (பரசூட் முறை) அறிமுகப்படுத்தியிருந்தது.

**இலங்கை தேயிலைச் சபை, தேயிலை ஆராய்ச்சி நிலையம், தேயிலை சிறுவுடமை அபிவிருத்தி அதிகாரசபை என்பன உற்பத்தித்திறன், போட்டித்தன்மை மற்றும் தொழில்நுட்பவியல் மேம்பாடு என்பவற்றை முன்னேற்றல் போன்றவற்றின் மீது கவனம் செலுத்தி அவற்றின் அபிவிருத்தி நடவடிக்கைகளைத் தொடர்ந்திருந்த அதேவேளை, 2016இல் தேயிலைத் துறையின் அபிவிருத்திக்காக சிறந்த நடைமுறைகள் பின்பற்றப்படுதலை மேம்படுத்தியிருந்தது.** இலங்கை தேயிலை சபையானது 'இலங்கையின் பொதியிடப்பட்ட தூய சிலோன் தேயிலை' என்ற வர்த்தகக் குறியீட்டின் கீழ் வர்க்கத் தேயிலையை ஊக்குவிப்பதற்கு தந்திரோபாய சந்தை நடவடிக்கைகளை எடுத்திருந்ததுடன் பன்னாட்டு வர்த்தக சந்தைகள் மற்றும் கண்காட்சிகளிலும் பங்குபற்றியிருந்தது. தேயிலைத் தொழிற்சாலைகள் மற்றும் பண்டகசாலைகளில் சிறந்த தயாரிப்பு நடைமுறை நியமங்களை மதிப்பிடல் மற்றும் அமுலாக்கல் போன்ற வேலைகளை இலங்கை தேயிலை சபையானது எடுத்திருந்ததுடன் தேயிலை தொழிற்சாலைகளை மேம்படுத்துவதற்காக சிறந்த தயாரிப்பு நடைமுறைகளின் மதிப்பீடுகளை மேற்கொண்டிருந்தது. அறுவடைக்குப் பின்னரான இழப்பைக் குறைக்கும் வகையில் சராசரி இலை நியமத்தை 33.0 சதவீதத்திலிருந்து 60.0 சதவீதத்திற்கு உயர்த்தும் நோக்கில் இலங்கை தேயிலை சபையால் 'பெஸ்ட் லீவ் 60' நிகழ்ச்சித்திட்டத்தை மேற்கொண்டிருந்ததுடன் விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டம், ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகள் மற்றும் தரத்தை கண்காணித்தல் போன்றவற்றினூடாக தொடர்ச்சியாக அமுல்படுத்தியிருந்தது. உணவிலிருந்தான பாதுகாப்பு இடர் மீதான இடர்பாட்டை குறைக்கும் நோக்கில் 2016 காலப்பகுதியில் தொழிற்சாலைகள் தொடர்ச்சியாக இடர் பகுப்பாய்வு மற்றும் நெருக்கடியான கட்டுப்பாட்டுப் புள்ளிச் சான்றிதழ் என்பவற்றை பெற்றிருந்ததுடன் 40 தொழிற்சாலைகள் இடர் பகுப்பாய்வு மற்றும் நெருக்கடியான கட்டுப்பாட்டு புள்ளி சான்றிதழ்கள் என்பவற்றை பெற்றிருந்தன. தேயிலை தொழிற்சாலை நவீனமயப்படுத்தலின் கீழான மானிய நிகழ்ச்சித்திட்டமானது 21 தொழிற்சாலைகளுக்கு மொத்தமாக ரூ.26.1 மில்லியனை வழங்கியிருந்தது. தேயிலைப் பயிர்ச்செய்கை மற்றும் செயன்முறைப்படுத்தல் தொடர்பில் புதிய தொழில்நுட்பங்களை உருவாக்குதல் மற்றும் அதனை பரவச் செய்தல் தொடர்பிலான தேசிய நிறுவனமான தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் தேயிலை கைத்தொழிலின் தற்போதைய தேவைப்பாட்டை தீர்க்கும் வகையில் 2013-

அட்டவணை 2.8
முக்கிய உணவுப் பண்டங்கள் தொடர்பான உணவு ஐந்தொகை அட்டவணை

| விடயம் | அலகு | 2010 | | | 2015 | | | 2016 (அ) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | உற்பத்தி | இறக்குமதிகள் | தலைக்குரிய கிடைப்பனவு (கி.கி/ஆண்டு) | உற்பத்தி | இறக்குமதிகள் | தலைக்குரிய கிடைப்பனவு (கி.கி/ஆண்டு) | உற்பத்தி | இறக்குமதிகள் | தலைக்குரிய கிடைப்பனவு (கி.கி/ஆண்டு) |
| அரிசி (அ) | மெ.தொ'000 | 3,011 | 126 | 152 | 3,373 | 286 | 175 | 3,094 | 30 | 147 |
| சோளம் | மெ.தொ'000 | 162 | 16 | 9 | 261 | 79 | 16 | 244 | 51 | 14 |
| கோதுமை | மெ.தொ'000 | - | 1,051 | 51 | - | 1,208 | 58 | - | 948 | 46 |
| பெரிய வெங்காயம் | மெ.தொ'000 | 59 | 158 | 10 | 89 | 210 | 14 | 65 | 216 | 13 |
| சீனி | மெ.தொ'000 | 31 | 548 | 28 | 56 | 624 | 32 | 62 | 651 | 34 |
| உருளைக் கிழங்கு | மெ.தொ'000 | 52 | 130 | 9 | 97 | 142 | 11 | 96 | 148 | 12 |
| உடன் மீன் | மெ.தொ'000 | 385 | 14 | 19 | 520 | 34 | 26 | 531 | 39 | 27 |
| பசும்பால் | மில். லீற்றர் | 192 | - | 9 | 305 | - | 15 | 318 | - | 15 |
| தேங்காய் எண்ணெய் | மெ.தொ'000 | 65 | 3 | 3 | 53 | 6 | 3 | 49 | 3 | 2 |

அ) தற்காலிகமானது
ஆ) 1 மெற்றிக்தொன் நெல் = 0.7 மெற்றிக்தொன் அரிசி

மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கைச் சுங்கம்

2017 தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் தந்திரோபாய திட்டமிடலின் அடிப்படையில் ஆய்வு மற்றும் அபிவிருத்தி தந்திரோபாயங்களையும் விரிவாக்கல் நடவடிக்கைகளையும் எடுத்திருந்தது. வானிலை மாற்றம், கேடான தாவர நோய் மற்றும் அனைத்து முக்கிய தேயிலை வளர்ப்புப் பிராந்தியங்களிலும் முக்கியமாகப் பின்பற்றுதல்கள் என்பவற்றுக்கு அதிகரித்த தாக்குப்பிடிக்கும் தன்மையுடன் டி.ஆர்.ஐ. 5000 போன்ற புதிய தேயிலை தொடர்கள் பயிர் முன்னேற்றத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்டன. மீள் நாற்றிடல் நிலங்களில் மண் புனர்வாழ்வு நடைமுறைகள் தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளல் செயன்முறையை வசதிப்படுத்துவதற்கான மணின் தரம் சுட்டெண்ணைப் பரிசோதிப்பதனூடாக மண் கருவூற்று முகாமைத்துவத்தை நோக்கி ஒருங்கிணைக்கப்பட்ட பயிர் முகாமைத்துவம் மற்றும் பாதுகாப்பு அணுகுமுறைகள் சேதங்களை குறைப்பதற்கும் சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் சூழல் சார்ந்த பிரச்சனைகளைக் குறைப்பதற்கும் அறிமுகப்படுத்தப்பட்டது. இயந்திர அறுவடையாளர்கள் மற்றும் கருவிகள் என்பன ஊழிய உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கும் கைத்தொழிலின் நிலைத்துநிற்கும் தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் தேயிலை சிறு உடமையாளர்கள் மத்தியில் அறிமுகப்படுத்தப்பட்டன. சேதனவியல் அடிப்படையில் பயிர்ச்செய்யப்பட்ட பரீட்சிப்பு தொகுதிகளுடன் நிலைத்துநிற்கும் பண்ணை முறைமையானது தொடர்ந்தது. இலங்கை தேயிலைச் சபையுடன் இணைந்து தேயிலை சிறு உடமையாளர் மற்றும் பயிர் புனர்வாழ்வு மானிய நிகழ்ச்சித்திட்டம் மற்றும் தேயிலை மீள்நடல் மானிய நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றை அமுல்படுத்தியிருந்தது. 2016 ஆண்டு முழுவதும் ரூ.48.3 மில்லியன் செலவில் 108 எக்டேயர்கள் புதிதாக பயிரிடப்பட்ட அதேவேளை, மேலுள்ள மானிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூ.484 மில்லியன் செலவில் 741 எக்டோயர்கள் மீள் பயிரிடப்பட்டன. தேயிலை சிறு உடமையாளர் அபிவிருத்தி அதிகார சபையானது தேசிய பசளை மானிய நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தியிருந்ததுடன் தேயிலைக்காக ஒரு எக்டேயருக்கு குறைவாகவும் 20 பேர்ச்சஸ்களுக்கு அதிகமாகவும் என்பவற்றுக்கு இடையில் நிலத்தை சொந்தமாக வைத்திருக்கின்ற தேயிலை சிறு உடமையாளர்களுக்கு எக்டேயர் ஒன்றிற்கு ரூ.15,000 வழங்கப்பட்டது. 2016இல் 83,864 எக்டேயர்களில் தேயிலை பயிர்ச்செய்கை செய்யப்பட்ட நிலத்திற்கென ரூ.1.3 பில்லியன் பெறுமதியான மானியமானது 204,554 நன்மையாளர்களால் பெற்றுக்கொள்ளப்பட்டது.

**இறப்பர் அபிவிருத்தி திணைக்களம் மற்றும் இறப்பர் ஆராய்ச்சி நிறுவகம் என்பன இறப்பரின் உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதற்கும் உலகச் சந்தையில் இறப்பரிற்கு காணப்படுகின்ற தளம்பலான விலைகளில் இருந்தான தாக்கத்தை குறைப்பதற்காக வேண்டி உற்பத்தியினை முன்னேற்றல் மற்றும் புதிய முயற்சிகளை பரிசீலித்தல் என்பவற்றிற்காக அபிவிருத்தித் தந்திரோபாயங்களை சீராக்கியிருந்தது.** இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தின் முக்கிய தந்திரோபாய திட்டமானது தேசிய இறப்பர் உற்பத்தியை தற்போது காணப்படுகின்ற 79,100 மெற்றிக் தொன்களில் இருந்து 2020ஆம் ஆண்டளவில் 200,000 மெற்றிக் தொன்களுக்கு அதிகரிப்பதன் மீது கவனம் செலுத்தியிருந்தது. இந்த இலக்கினை நோக்கி நகர்வடைவதற்கு உற்பத்தித்திறன் முன்னேற்றம் மற்றும் பாரம்பரியமற்ற பிரதேசங்களுக்கு இறப்பர் பயிர்ச்செய்கையை விரிவாக்கல் என்பனவே 2016இல் அமுல்படுத்தப்பட்ட பிரதான தந்திரோபாயங்களாகும். சிறு உடமையாளர்களுக்கான இறப்பரின் மீள் பயிரிடல் மற்றும் இறப்பரின் புதிய பயிரிடல் மீதான மானிய நிகழ்ச்சித்திட்டமானது 2016இலும் தொடரப்பட்டதுடன், ஆண்டு காலப்பகுதியில் 538.0 எக்டேயர்களில் மீள் நடுகையை மேற்கொள்வதற்கு ரூ.193.0 மில்லியனும் 592.5 எக்டேயர்களில் புதிதாக நடுகையை மேற்கொள்வதற்கு ரூ.179.9 மில்லியனும் வழங்கப்பட்டிருந்தது. பாரம்பரியமற்ற பிரதேசங்களுக்கும் இறப்பர் பயிர்ச்செய்கையை விரிவாக்கும் நோக்கில் அம்பாறை, முல்லைத்தீவு மற்றும் வவுனியா போன்ற மாவட்டங்கள் தெரிவுசெய்யபட்டுள்ளன. ஆண்டு காலப்பகுதியில் அம்பாறை மாவட்டத்தில் 212.6 எக்டேயரில் புதிதாக நடுகையிடப்பட்டிருந்தன. இறப்பர் ஆராய்ச்சி நிறுவனமானது 2016 மே மாதத்திலிருந்து இறப்பர் உரமானிய நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்ப்படுத்தி வருவதுடன் 38,472 பயனாளிகளுக்கு ரூ.91.1 மில்லியனை வழங்கியிருந்தது. உலகளாவிய இறப்பர் விலைகளை உறுதிப்படுத்துவதன் மீது பரிந்துரைகளை அபிவிருத்தி செய்வதற்கு இயற்கையானது இறப்பர் உற்பத்தியை மேற்கொள்கின்ற நாடுகள் என்பதனால் நிபுணத்துவம் வாய்ந்த குழு ஒன்று அமைக்கப்பட்டது. இறப்பர் ஆராய்ச்சி நிறுவனமானது 2016இல் இறப்பர் கைத்தொழில் நன்மைக்காக வேண்டி, அதனது ஆய்வு மற்றும் அபிவிருத்தி முயற்சிகளை விரிவாக்கியிருந்தது. குறைவடைந்து செல்லும் இறப்பர் விலைகளுக்கு மத்தியில், இறப்பர் துறைக்கு ஆதரவை வழங்குவதற்காக இறப்பர் ஆராய்ச்சி நிறுவகத்தால் எடுக்கப்பட்ட முக்கிய தீர்மானங்களானது மூல இறப்பரில் பெறுமதி சேர்ப்புக்களை மேம்படுத்தல், குறைந்த அறுவடை செறிவைக் கொண்டுள்ள மூல இறப்பர் போன்றனவற்றில் உற்பத்திச் செலவை குறைப்பதற்கு முறையியல்களை முன்னேற்றல், அதிகரித்த வருமானம் மற்றும் முன்னேற்றமடைந்த இறப்பரின் வளர்ச்சி என்பவற்றுக்காக பயிர்களுக்கிடையிலான முறைமையை மேம்படுத்தல், மற்றும் பங்குபற்றல் காடாக்கல் நிகழ்ச்சித்திட்டங்களில் இறப்பர் பயிர்ச்செய்கையை மேம்படுத்தல், போன்றவற்றை உள்ளடக்கியிருந்தது. ஆண்டின் முக்கிய அய்வு சிறப்பம்சங்களானது ஒட்டுமொத்த வளமாக்கி பிரயோகத்தை குறைக்கும் நோக்கில் இறப்பர்

2

கன்று நாற்றுகளுக்கான பொருத்தமானதொரு மெதுவாக வெளியீடு செய்யப்படும் வளமாக்கியை அடையாளம் காணல், நீண்டகால நிலைத்துநிற்கும் விளைச்சலுக்கு அசேதன வளமாக்கிகளுடன் உயிர்வாயு வளமாக்கிகள் என்பவற்றின் இயைந்த பயன்பாட்டின் ஊடாக இறப்பர் பயிர்ச்செய்கையில் மண் வளமாக்கி முகாமைத்துவத்தை மேம்படுத்தல், சிறு உடமை துறையில் உயர் விளைச்சலை தரக் கூடிய புதிய பதியங்களை பிரபல்யப்படுத்தல், திடீரென ஏற்படக் கூடிய நோயை தடுப்பதற்கான நோய் எதிர்ப்பு இறப்பர் பதியங்களை அடையாளம் காணல் மற்றும் சூழலுடன் நட்புத் தன்மைவாய்ந்த விவசாய முகாமைத்துவ நடைமுறைகளை மேம்படுத்தல் என்பவற்றை உள்ளடக்கியிருந்தது. 'துருசவிய' சமூகத்தின் ஊடாக இறப்பர் சிறு உடமையாளர்கள் ஒன்றிணைந்ததுடன் உயர் தரத்திலான இறப்பர் விதைகளை உற்பத்தி செய்தல் தொடர்பில் அவர்களின் அறிவை முன்னேற்றுவதற்காக பயிற்சியளிக்கப்பட்ட அதேவேளை, இறப்பர் இறப்பர் ஆராய்ச்சி நிறுவகத்தால் குறித்துரைக்கப்பட்ட நியமங்களின் அடிப்படையிலும் உயர் தரத்திலான இறப்பர் விதைகளை பெற்றுக்கொள்ளலாம் என்ற எதிர்பார்க்கைகளுடன் அவர்கள் மத்தியில் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் என்பன பகிர்ந்தளிக்கப்பட்டன.

**தெங்குப் பயிர்ச்செய்கை சபை, தெங்கு ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் தெங்கு அபிவிருத்தி அதிகார சபை என்பன தெங்குப்பணை மற்றும் தெங்கு நிலம் என்பவற்றின் உற்பத்தித் திறனை முன்னேற்றல், தெங்கு பயிர்செய்கையை விரிவாக்குதல் மற்றும் நோயை கட்டுப்படுத்தக் கூடிய வித்துக்களை உற்பத்தி செய்வதற்கும் வெவ்வேறுபட்ட வடிவங்களில் தெங்கு ஏற்றுமதியை மேம்படுத்தல் தொடர்பில் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருத்தல் போன்றவை தொடர்பில் கவனம் செலுத்தியிருந்தது.** 2016 காப்பகுதியில் தெங்கு பயிர்ச்செய்கை சபையானது தெங்கு உற்பத்தி, தெங்கு நிலப்பரப்பு மற்றும் தெங்கு நிலத்தின் உற்பத்தித்திறன் என்பவற்றை அதிகரிப்பதற்கு தந்திரோபாயங்களை அமுல்ப்படுத்தியிருந்தது. தெங்கு பெருந்தோட்டங்களுக்கு வளமாக்கிகளை வழங்குதல், உமி குழிகளை நிறுவுதல் மற்றும் மண் பாதுகாப்பை, குறைந்த செலவிலான குழாய் நீர்ப்பாசனங்களை அமுல்படுத்தல், ஈரப்பதன் பாதுகாப்பு மற்றும் ஊடுபயிர் என்பவற்றின் ஊடாக தெங்குப்பணைகளின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கு மானிய நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. தெங்கு ஆராய்ச்சி நிறுவனமானது தெங்கு அபிவிருத்தி அதிகார சபை மற்றும் தெங்கு பயிர்ச்செய்கை சபை என்பவற்றுடன் இணைந்து இத்துறையின் அபிவிருத்திகளை கண்காணித்திருந்ததுடன் தேங்காய் காய்களின் ஏற்றுமதியை ஊக்குவித்தல், தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் ஏலத்தினை ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் சமையல் எண்ணெய் இறக்குமதி மீதான தீர்வையை அதிகரித்தல் போன்றவை உள்ளடங்கலான கொள்கை பரிந்துறைகளை வழங்கியிருந்தது. தெங்கு ஆராய்ச்சி நிறுவனமானது வெலிகம தென்னோலை பூச்சித்தாக்கல் நோயின் இடைப்பகுதியை தொடர்ச்சியாக பேணியதுடன் வெலிகம தென்னோலை பூச்சித்தாக்கல் நோயினை எதிர்க்கும் வகையில் விதைகளை உற்பத்தி செய்வதற்கும் வெலிகம பகுதியில் விதைத் தோட்டமொன்றை ஆரம்பிப்பதற்கு தெங்கு பயிர்ச்செய்கை சபையிலிருந்து நிலத்தை பெற்றிருந்தது. விரிவாக்கல் நிகழ்ச்சித்திட்டங்கள் பூச்சி மற்றும் நோய் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் நிலத்தின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்காகவும் ஊடுபயிரை நிரூபிப்பதற்குமாக தெங்கு பயிர்ச்செய்கை மாதிரிகளை நிறுவுதல் மற்றும் தெங்கு பயிர்ச்செய்கைகளில் விளங்குவளர்ப்பை ஊக்குவித்தல் என்பவை தொடர்பில் 'கபுறுக' நிகழ்ச்சித்திட்டமானது பலப்படுத்தப்பட்டது. தேங்காய் துருவல் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளவை தொடர்பில் இரண்டு புதிய தொழிற்சாலைகளை நிறுவுவதற்கு ஒப்புதலானது ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. தெங்கு நார் ஆலையர்கள் மற்றும் செயன்முறைப்படுத்துநர்கள் ஆகியோர் சிறந்த தயாரிப்பு நடைமுறைகள் தொடர்பான சாந்றிதழ்களை பெற்றுக் கொள்வதற்கு ஊக்குவிக்கப்பட்டதுடன் தெங்கு கைத்தொழிலை மேலும் இலாபகரமானதாகவும் கவர்ச்சியானதாகவும் மாற்றுவதற்கு 2016ஆம் ஆண்டில் புதிய சந்தை வாய்ப்புக்களும் பரிசீலிக்கப்பட்டன.

**இலங்கையில் வர்த்தகப்படுத்தப்பட்ட சீனி உற்பத்தியானது பல தசாப்தங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டிருப்பினும் இக்கைத்தொழிலானது இன்னமும் பல்வேறுபட்ட கட்டமைப்பு ரீதியான பிரச்சனைகளுடன் பாதிக்கப்பட்டுள்ளது.** சீனிக் கைத்தொழிலுக்கு சிறந்ததொரு சூழலை இலங்கை உருவாக்குதவற்கு முடியாமல் போய்விட்டிருப்பினும், இக்கைத்தொழிலின் அபிவிருத்திக்கு சாதகமானதொரு சட்ட ரீதியான, தாபன ரீதியான மற்றும் ஒழுங்குமுறையான சட்டங்களை உருவாக்க வேண்டியது அவசியமானதாகும். கரும்பின் குறைந்தளவான கிடைப்பனவு மற்றும் விளைச்சல்கள், உயர்ந்தளவான உற்பத்திச் செலவு, வானிலையுடன் தொடர்புடைய தடங்கல்கள், மோசமான மீட்பு வீதம் மற்றும் ஊழிய பிரச்சினைகள் என்பன கைத்தொழிலை மோசமாக பாதித்திருந்தன. இப்பிரச்சினைகளை கருத்திற் கொண்டு, சீனி பயிர்ச்செய்கை மற்றும் செயன்முறைப்படுத்தல் என்பவற்றை அபிவிருத்தி செய்வதற்கு இலங்கையின் சீனி ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் இந்தியாவின் வசந்தடாட சீனி நிறுவனம் என்பவற்றுக்கிடையில் விஞ்ஞான ரீதியலானதொரு கூட்டிணைப்பு நிகழ்ச்சித் திட்டமொன்றை அரசாங்கம் ஆரம்பித்திருந்தது.

அதேவேளை, 2016ஆம் ஆண்டில் சீனி ஆராய்ச்சி நிறுவனமானது வர்த்தக பரிசோதனைக்காக புதிதாக ஐந்து வகைகளை அடையாளம் கண்டிருந்தது. கந்தளாய் சீனி தொழிற்சாலையை அரச-தனியார் கூட்டு ஒழுங்குமுறையாக மாற்றுவதற்கு அரசாங்கத்தினால் ஒழுங்குவசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2017 வரவுசெலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டவாறு, கரும்பு பயிர்ச் செய்கையை உள்நாட்டு விவசாயிகள் மத்தியில் ஊக்குவிப்பதற்கும் விலைகளின் தளம்பல்கள் மற்றும் பூச்சிகொல்லிகள் மற்றும் காட்டு விலங்குகளில் இருந்தான தாக்குதல் காரணமாக ஏற்படும் பயிர்களின் இழப்பு என்பவற்றில் இருந்து ஏற்படக் கூடிய பாதகமான தாக்கங்களிலிருந்து கரும்பு பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளை பாதுகாப்பதற்காக சீனி உறுதித்தன்மை நிதியம் ஒன்றை அமைப்பதற்காக 2017 சனவரி 01ஆம் திகதி சீனி மெற்றிக் தொன் ஒன்றுக்கான குறைந்தபட்ச கொள்வனவு விலையானது ரூ. 5,000 என அமுலாக்கம் செய்யப்பட்டது.

**ஆண்டுகாலப்பகுதியில், கமத்தொழில் திணைக்களத்திற்கு கீழ் காணப்படுகின்ற தாபனங்கள் நாட்டின் உள்நாட்டு வேளாண்மை துறையை முன்னேற்றுவதற்காக அரசாங்கத்தின் கொள்கைகளுடன் இணைந்து செல்லும் வகையில் நிகழ்ச்சித்திட்டங்களை தொடர்ச்சியாக நடாத்தியிருந்தது.** அரிசி ஆராய்ச்சி நிறுவனமானது எக்டேயர் ஒன்றிற்கு 4.5-5.0 மெற்றிக் தொன்கள் கொண்ட சாததியமான விளைச்சலைப் பெற்றுக் கொள்ளக் கூடியதும் பூச்சுக் கொல்லி மற்றும் நோய் என்பவற்றிலிருந்து அதிகம் எதிர்க்கக் கூடியதுமான பிஜீ 252, எல்டீ 253 மற்றும் பீஜீ 374 பெயர் கொண்ட மூன்று புதிய உயர் விலைச்சலை தரக்கூடிய அரிசி வகைகளை அறிமுகம் செய்திருந்தது. இரசாயனத்தின் கட்டுப்பாடானது செலவுத் தன்மையானதும் சூழலை மாசுபடச் செய்யக் கூடுமாகையினால் பூச்சிகொல்லி மற்றும் நோய்களை எதிர்க்கக்கூடியதுமான வகைகளை அபிவிருத்தி செய்தலானது சிறந்ததொரு தெரிவாக காணப்படுகின்றதுடன் அது சூழலுடன் நட்புத்தன்மை கொண்டதாகவும் செலவு வினைத்திறன் கொண்டதாகவும் காணப்படும். ஏனைய களப் பயிர்கள் துறையில், எக்டேயர் ஒன்றிற்கு அண்ணளவாக 5.5-6.5 மெற்றிக் தொன்கள் கொண்ட சராசரி விளைச்சலைத் தரக்கூடிய எம்ஐ சோள கலப்பு 02 என்ற புதிய சோள வகையில் வெளியிடல், முதலாவது அறுவடையிலிருந்து 80.0 சதவீதத்திற்கும் மேலான விளைச்சலை பெற்றுக் கொள்ளக் கூடிய எம்ஐ 7 என்ற புதிய வகை பயறு என்பனவே ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட கணிசமான முன்னேற்றங்களாகும். மேலும், கமத்தொழில் திணைக்களத்திற்கு கீழான விதை நெல் உற்பத்தி நிகழ்ச்சித் திட்டங்களும் 2016இல் கணிசமான முன்னேற்றங்களை காட்டியிருந்தது. அதன்படி, 3,863 மெற்றிக் தொன்கள் கொண்ட பதிவுசெய்யப்பட்ட மற்றும் சான்றிதழிடப்பட்ட விதை நெல், 855.6 மெற்றிக் தொன்கள் கொண்ட பதிவு செய்யப்பட்ட, சான்றிதழிடப்பட்ட மற்றும் வர்த்தக ரீதியான ஏனைய களப் பயிர்களின் விதைகள் மற்றும் 9.8 மெற்றிக் தொன்கள் கொண்ட திட்டமான மரக்கறி விதைகள் என்பன கமத்தொழில் திணைக்களம் மற்றும் ஒப்பந்தம் அடிப்படையிலான வளர்ச்சி என்பவற்றின் கீழ் அரசாங்க விதை பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டன.

**அரசாங்கமானது அண்மைக்காலங்களில் நீர்ப்பாசன வசதிகளை விரிவாக்குவதன் மீது அதிகளவு முதலீடுகளை மேற்கொண்டிருந்தது.** பாரிய பல தொழிற்பாட்டு நீர்ப்பாசன செயற்றிட்டமும் மகாவலி முதன்மை திட்டத்தின் கீழ் காணப்படுகின்ற ஐந்து பெரிய நீர்தேக்கங்களில் இறுதியானதுமான மொரகாகந்த நீர்த் தேக்கமானது 2016இல் பூர்த்தி செய்யப்பட்டது. 460,000 ஏக்கர்களுக்கும் மேலாக பரந்து காணப்படுகின்ற மொரககந்த நீர்த்தேக்கமானது இலங்கையில் நான்காவது பெரிய நீர்த்தேக்கமாகும். பொரககந்த நீர்த்தேக்கத்தின் கலிங்கல் வாயிலானது 2017 சனவரியில் மூடப்பட்டதுடன் முதல் தடவையாக நீர்தேக்கத்திற்கான நீரை நிரப்புவதற்கு இயலச் செய்திருந்தது. அதேவேளை, மொரககந்த நீர்த்தேக்கத்துடன் களுகங்கை நீர்தேக்கமானது இரட்டை செயற்திட்டமாக கட்டப்பட்டதுடன் நீரானது மொரகாகந்தைக்கு ஒன்பது கிலோமீற்றர் தூண் களைக் கொண்ட கால்வாயின் ஊடாக கொண்டுவரப்பட்டது. ஒட்டுமொத்த செயற்திட்டத்தின் குறிக்கோளானது அம்பான் ஆற்றின் படுக்கையிலிருந்து நீரை சேகரித்து அந்நீரை வேளாண்மை தேவைகளுக்காக மாத்தளை, அநுராதபுரம், பொலன்னறுவை மற்றும் திருகோணமலை மாவட்டங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. மேலும், இச் செயற்திட்டமானது 25 மெகாவாற்று மின்சாரத்தை தேசிய தொகுதிக்கு சேர்க்கும் அதேவேளை, 2017 வரவுசெலவுத் திட்டமானது பல்வேறுபட்ட நீர்த்தேக்க நிகழ்ச்சித்திட்டங்களை அபிவிருத்தித் செய்வதற்கு முன்மொழிந்துள்ளது. அதன்படி, தற்போது காணப்படுகின்ற ‘ கத்துள்’ மற்றும் ‘ருகம்’ போன்ற இரண்டு குளங்களை இணைப்பதாகும். மொனராகலை மாவட்டத்தில் காணப்படுகின்ற பல்நோக்கு செயற்திட்டங்களில் ஒன்றான கும்புக்கன் ஓயா நீர்த்தேக்க செயற்திட்டத்திற்காக மட்டக்களப்பு மாவட்டத்தில் நீர்ப்பாசன மற்றும் வெள்ளக் கட்டுப்பாட்டிற்காக பெரியதொரு நீர்த்தேக்கத்தை உருவாக்கல் மற்றும் மன்னார் மாவட்டத்தில் உள்ள தரப்புரம் குளத்தை புனருத்தாபனம் செய்தல் போன்றவற்றிற்காக ரூ.600 மில்லியனானது ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், ஆண்டுகாலப்பகுதியில் யான்

ஓயா செயற்திட்டத்திற்காக ரூ.1 பில்லியனும் கீழ் மல்வத்து ஓயா நீர்ப்பாசன செயற்திட்டத்திற்காக ரூ.300 மில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளன. விவசாய நிலங்களில் இருந்து உடனடித் தகவல்களை சேகரிப்பதற்காக தன்னிச்சையான கண்காணிப்பு முறை ஒன்றை நிறுவும் வகையில் குழுப் பாதுகாப்பு மற்றும் நீர் வள திட்டமிடல் செயற்திட்டத்தை விரிவாக்குதவற்கும், எட்டு மாவட்டங்களை உள்ளடக்கும் வகையிலான பிரதேசங்களில் இருந்தான நீரின் தரம் மற்றும் அளவு என்பவற்றின் மீதான விவசாய இரசாயனங்களின் தாக்ககத்தை கண்காணித்தலை வசதிப்படுத்துவதற்கு ரூ.200 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**விலங்கு உற்பத்தி மற்றும் நியதித் திணைக்களம் கால்நடைத்துறை முதன்மை திட்டத்தின் அடிப்படையில் பாற்பண்ணைத் துறையின் அபிவிருத்திக்கான அரசாங்கத்தின் கொள்கை சட்டங்களுக்கு இணைந்து செல்லும் வகையில் பல்வேறுபட்ட நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்ப்படுத்தியிருந்தது.** உள்நாட்டு பால் உற்பத்தியானது உள்நாட்டு கேள்வியை பூரணமாக பூர்த்தி செய்வதற்கு இன்னமும் முடியாதுள்ள போதிலும், செயற்கையான கருவூட்டல் மத்திய நிலையங்கள், இயற்கை இனப்பெருக்க நிகழ்ச்சித்திட்டங்களுக்கான காளை குட்டிகளின் சந்ததிப் பரிசோதனை நிகழ்ச்சிதிட்டம் மற்றும் மேய்ச்சல் அபிவிருத்தி என்பவற்றை முன்னேற்றுவதன் மூலம் பசுக்கள், எருமை மற்றும் ஆடு என்பவற்றின் சனத்தொகையை இற்றைப்படுத்துவதன் ஊடாக உள்நாட்டு பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கு பல்வேறுபட்ட வழிமுறைகளை மேற்கொள்ளப்பட்டன. கன்று ஈனாத பசுக்களை வளர்க்கும் செயற்திட்டத்தின் ஊடாக செயற்கையாக பிறந்த பெண் பசுக்களுக்கு பாலூட்டுதல் மற்றும் முகாமை செய்யும் வகையில் பண்ணையாளர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டமையானது 2016இலும் தொடர்ந்தது. புத்தள மாவட்டத்திலுள்ள ஆராச்சிக்கட்டுவ, முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள வெலிஓயா, அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள நாச்சதுவ மற்றும் பதுளை மாவட்டத்தில் உள்ள சொரணாதொட போன்ற இடங்களில் நான்கு புதிய கால்நடை அலுவலகங்களை கள கால்நடை பணிகள் முன்னேற்ற நிகழ்ச்சித்திட்டத்தில் நிறுவுவதன் ஊடாக கால்நடை அபிவிருத்திக்கான நிறுவன ரீதியான உதவிகள் பலப்படுத்தப்பட்டன. குறிப்பாக தேசிய கால்நடை அபிவிருத்தி சபையானது பாவிக்கப்படாத நிலத்தில் அல்லது குறைந்தளவு பாவிக்கப்பட்ட நிலத்தில் அரச தனியார் கூட்டு ஒழுங்குமுறையினூடாக பின்னோக்கிய ஒருங்கிணைப்பைக் கொண்டுள்ள தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களுக்கு உதவுதவற்காக பாற்பண்ணை அபிவிருத்தி வலயங்களை நிறுவுவதற்கு அரசாங்கம் ஊக்கமளித்திருந்தது. நாட்டிற்குள் பால் நிரம்பலை அதிகரிப்பதற்கு இறக்குமதி செய்யப்பட்ட பால் உற்பத்தி செய்யும் பசு இனங்களில் இருந்து இடைவெளி நிதியிடல் திட்டத்தினூடாக ஒவ்வொருவருக்கும் பத்து பசுக்களை வழங்குவதனூடாக சுயதொழில் புரிகின்ற பண்ணையாளர்களுக்கு உதவியாக வழங்கப்பட வேண்டியுள்ளது. பன்னாட்டு சந்தையில் விலைகள் அதிகரித்துள்ள போதிலும், ரூ.295இற்கு 400 கிராம் நிறையுடைய பால்மாவின் விலையை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான தீர்மானமானது உள்நாட்டு பால் உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர் ஆகிய இருவகையாளர்களுக்கும் உதவும் வகையில் தொடரப்பட்டது. சோளத்தின் உள்நாட்டு உற்பத்தியானது பற்றாக்குறையாக காணப்படுகின்ற போது கோழி இறைச்சி ஏற்றுமதி மீதான தள்ளுபடியாக திரும்ப வழங்கப்படவுள்ள செஸ் கொடுப்பனவிற்கு உட்பட்ட வகையில் கோழி உணவிற்கு உற்பத்திக்கு பிரதானமான உள்ளீடாக பயன்படுத்துகின்ற சோளத்தை ஆலை உரிமையாளர்கள் இறக்குமதி செய்வதற்கான அனுமதியை அரசாங்கமும் முன்மொழிந்திருந்தது. வெளியிலிருந்தான முறைமைகளில் முதலீட்டை மேற்கொள்வதற்கு தனியார் துறை முதலீட்டாளர்கள் ஊக்குவிக்கப்பட்ட அதேவேளை, இது உற்பத்தித்திறனை முன்னேற்றுவதற்கான விரிவாக்கங்கள் பணிகளையும் வழங்கக் கூடும்.

**சட்ட ரீதியற்ற, அறிக்கையிடப்படாத மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தப்படாத மீன்பிடி நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட வழிமுறைகளின் விளைவாக 2015 சனவரியில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட ஒன்றறை வருடங்களுக்கு மேலாக ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கான ஏற்றுமதி செய்யப்படுகின்ற மீன் ஏற்றுமதிகளைத் தடுப்பதற்காக இலங்கைக்கு எதிராக அமுலாக்கப்பட்ட தடையானது 2016 யூன் 17 இலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் நீக்கப்பட்டது.** கட்டப்பாட்டு வழிமுறைகளை அமுல்ப்படுத்துவதில் உள்ள குறைபாடுகளை தீர்ப்பதற்கு இலங்கையின் தோல்வி, உயர் கடல் தொகுதி மீதான போதுமானமற்ற தடைகள். அதேபோன்று பன்னாட்டு மற்றும் பிராந்திய மீன்பிடி விதிகளுக்கு அமைவாக இணங்கிச் செல்வதிலான தோல்வி என்பவற்றின் காரணமாக மீன் உற்பத்திகள் ஏற்றுமதியின் மீது தடையானது கொண்டுவரப்பட்டது. மீன்பிடி கைத்தொழிலானது அதிகளவில் மூலதன செறிவுடையதாக கொண்டபோதிலும், மூலதனத்தின் உட்பாய்ச்சலானது விடுக்கப்பட்ட மட்டத்திற்கு காணப்படவில்லை. இக்குறைபாட்டை கருத்திற்கொண்டு, கடற்தொழில் மற்றும் நீர்வாழ் மூலவளங்கள் அபிவிருத்தி அமைச்சு மீன்பிடி தொகுதி மற்றும் மீன்பிடி இழுவை என்பவற்றின் நவீனமயப்படுத்தலுக்கு உதவுவதற்கு கைத்தொழில் துறைக்கு வெவ்வேறுபட்ட மானியங்களை தொடர்ச்சியாக

வழங்கியிருந்தது. உற்பத்தியாளர் மானிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், 2015இல் வெளியிடப்பட்ட 990 மீன்பிடி இழுவை அலுககுள் மற்றும் 253 பாரம்பரிய கைத்தொழில்கள் என்பவற்றுடன் ஒப்பிடுகையில் 2016இல் 13,150 மீன்பிடி இழுவை அலகுகளும் 664 பாரம்பரிய கைத்தொழில்களும் வெளியிடப்பட்டன. பாரியளவான மீன்பிடி கப்பல்கள் கிடைக்காமை என்ற பிரச்சினையை அடையாளம் கண்டு 55 அடிக்கு மேலான படகுகளை உற்பத்தி செய்கின்ற தயாரிப்பாளர்களுக்கு 50.0 சதவீதமான மானியத்தை வழங்குதவற்கு அரசாங்கம் தீர்மானித்திருந்ததுடன் பன்னாட்டு சந்தையில் உயர்ந்தளவான விலையை கவரும் வகையில் மீன்பிடியாளர்கள் தரம்வாய்ந்த மீன்களை பிடிப்பதற்கு இயலுமாயிருந்தது. 2017 வரவுசெலவுத் திட்டமும் பீன்பிடி துறையை மேம்படுத்துவதற்கு பல்வேறுபட்ட வழிமுறைகளையும் முன்மொழிந்திருந்தது. அதன்படி, தொழிற்பாட்டு வினைத்திறனை முன்னேற்றல் மற்றும் அறுவடைக்குப் பின்னரான இழப்பினை குறைத்தல் போன்ற நோக்கத்தில் பல நாட்கள் பயணம் செய்யும் படகில் புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதற்கு ஊக்குவிக்கின்ற வகையில் கற்தார மீன்பிடி துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கும் நங்கூரமிடுவதற்கும் ரூ.100 மில்லின் ஒதுக்கீடு செய்யபட்டிருந்தது. மேலும், ஹம்பாந்தோட்டை, மட்டக்களப்பு மற்றும் யாழ்ப்பாணம் உள்ளிட்ட 10 கரையோர மாவட்டங்களில் அதேபோன்று நாட்டின் கடற்கரை பிரதேசங்களிலும் வீடமைப்பு மற்றும் வாழ்வாதார அபிவிருத்திகளின் மீது கவனம் செலுத்தி மீன்பிடி கிராமங்களை முன்னேற்றுவதற்கு ரூ.1,200 மில்லியனானது ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஏற்றுமதிப் பெறுமதி சேர்ப்பு உற்பத்திகளின் ஊடாக ஏற்றுமதி வருவாயை அதிகரிப்பதற்கான சாத்யப்பாட்டை அடையாளம் கண்டு மன்னார் மாவட்டத்தில் மீன் வளர்ப்பு கைத்தொழில் தொடர்பில் ரூ.500 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நன்னீர் மீன்பிடி கைத்தொழிலை அபிவிருத்தி செய்தல், போசாக்கு பற்றாக்குறை பிரச்சினையை தீர்த்தல், கைத்தொழில்களை மேம்படுத்தல் மற்றும் வேலைவாய்ப்புக்களை உருவாக்கல் போன்றவற்றிற்கான ‘வெவக் சகித்த - கமக் நிகழ்ச்சித்திட்டம்’ இன் கீழ் 100 ஒருங்கிணைக்கப்பட்ட நன்னீர் மீன்பிடி கிராமங்களை அமைப்பதற்கு ரூ.300 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இலங்கை வங்கியுடன் இணைந்து மின்பிடி நீர்வளங்கள் அபிவிருத்தி அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் ‘தியவர திரிய’ கடன் திட்டத்தின் கூட்டம் II இன் கீழ் 2016ஆம் ஆண்டில் 62 விண்ணப்பதாரர்களுக்கு ரூ.42.2 மில்லியன் வெளியிடப்பட்டிருந்தது. நன்னீர் மீன்பிடி மற்றும் பண்ணை மீன்வளர்ப்புத் துறை என்பவற்றை அபிவிருத்தி செய்வதற்கு உள்ளார்ந்த தன்மையை அடையாளம் கண்டு நன்னீர் இறாலின் பிந்திய லார்வாக்கள் 2016இல் 39.6 மில்லியன் தேசிய அலங்கார மீன்பிடி அதிகார சபையின் குஞ்சு பொரிப்பகங்கள் மற்றும் தனியார் குஞ்சு பொரிப்பகங்கள் போன்றவற்றில் உற்பத்தி செய்யப்பட்டிருந்தன. அதேவேளை, 38.01 மில்லியன் கொண்ட நன்னீர் இறாலின் பிந்திய லார்வாக்ககள் மற்றும் 64.3 மில்லியன் கொண்ட மீன் குஞ்சுகள் என்பன நீர் தாங்கிகளில் இருப்பாக வைக்கப்பட்டன. தேசிய அலங்கார மீன்பிடி அதிகார சபையானது தரம் மற்றும் தொகை ஆகிய இரண்டின் அடிப்படையிலும் உள்நாட்டு மீன் உற்பத்திகளை அதிகரிக்கும் நோக்கில் உணவு உற்பத்தி தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் (2016-2018) பல்வேறுபட்ட நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்ப்படுத்தியிருந்தது. வெண்ணிறப்புள்ளி நோயினால் அழிந்து போயிருந்த இறால் பண்ணைக் கைத்தொழிலை வளப்படுத்துதற்கு கடந்த சில வருடங்களாக பல்வேறுபட்ட நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட்டன. அதன்படி, இறால் குஞ்சு பொரிப்பகங்களை ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் நன்னீர் இறால் பிந்திய லார்வாக்களின் பரிசோதனை மற்றும் குஞ்சு இருப்புக்கள் என்பன தொடர்ந்தன. மேலும், இறால் நோயை தவிர்ப்பதற்காக இறால் பண்ணையாளர்களுக்கு பதுளுஓயாவிலுள்ள இறால் பண்ணை கண்காணிப்பு மற்றும் விரிவாக்கல் அலகில் பணிகள் வழங்கப்பட்டு வந்துள்ளன. கிழக்கு மாகாணத்தில் இறால் பண்ணைக்கு உதவும் நோக்கில் மட்டக்களப்பில் இறால் குஞ்சு பொரிப்பகமொன்று நிறுவப்பட்டுள்ளதுடன் இவ் இறால் பண்ணையானது அரச தனியார்க் கூட்டு ஒழுங்குமுறையாக முகாமை செய்யப்பட்டது. தேசிய அலங்கார மீன்பிடி அதிகார சபையானது யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் மன்னார் போன்ற இடங்களில் கடல் பண்ணைகளையும், தனியார் துறையினரால் தெவன்பிட்டி, மன்னார் தெற்கு விரிகுடா, அம்புபுரம், வலைப்படு மற்றும் நாச்சிக்குடா போன்ற இடங்களில் கடல் அட்டை வளர்த்தல் போன்றவற்றுக்கு வசதியளித்திருந்தது. முன்னணி தனியார் துறை கம்பனியொன்று வர்த்தக அளவிலான கடல் பாசி பண்ணையை வடக்கு மாகாணத்தில் உள்ள ஏறத்தாழ 1,000 பண்ணையாளர்களின் பங்குபற்றுதலுடன் ஆரம்பித்திருந்தது. தேசிய அலங்கார மீன்பிடி அதிகார சபை மற்றும் வியட்னாம் என்பவற்றுக்கு இடையில் கைச்சாத்திடப்பட்ட ஞாபகார்த்த புரிந்துணர்வின் கீழ் தனியார் குஞ்சு பொரிப்பகம் ஒன்றில் கடல் அட்டை இனமானது நிபுனத்துவமானவர்களுக்கு வழங்கப்பட்டதுடன் 2016ஆம் ஆண்டில் 435,000 கடல் அட்டை குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டதுடன் 61.4 மெற்றிக் தொன்கள் அறுவடை செய்யப்பட்டது.

## கைத்தொழில்

**கைத்தொழில் தொடர்பான பெறுமதிகூட்டல் செயற்பாடுகள் 2015இல் பதிவுசெய்யப்பட்ட 2.1 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இல் 6.7 சதவீதமாகக்**

2

**குறிப்பிடத்தக்களவிற்கு வளர்ச்சியடைந்தன.** கட்டவாக்கம், சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல், தயாரிப்பு, மின்வலு, நீர் மற்றும் கழிவுகளை சுத்திகரித்தல் என்பனவற்றை உள்ளடக்கிய கைத்தொழில் தொடர்பான செயற்பாடுகள் ஒட்டுமொத்த வளர்ச்சிக்குச் சாதகமாகப் பங்களித்தன. கட்டடவாக்கம் மற்றும் சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் என்பன 2015இல் பதிவுசெய்த சுருக்கத்திலிருந்து மீண்டு கணிசமான வளர்ச்சியை இவ்வாண்டுப்பகுதியில் பதிவுசெய்தன. இதற்கும் மேலாக, தயாரிப்பு நடவடிக்கைகளும் 2016இல் சாதகமாக வளர்ச்சியடைந்தன. மேலும் மின்வலு, நீர் மற்றும் கழிவுகளைச் சுத்திகரிக்கும் செயற்பாடுகள் அவற்றின் சாதகமான வளர்ச்சியை தொடர்ந்தன. இதேவேளை கைத்தொழில் துறையுடன் தொடர்பான வியாபாரத் தோற்றப்பாடு அளவீட்டின் துணைச் சுட்டெண்கள் பெரும்பாலும் ஆண்டுமுழுவதும் சாதகமாகவே காணப்பட்டன.


## சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல்

**சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் செயற்பாடுகள் 2015இன் 5.2 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2016இல் பெறுமதிகூட்டல் நியதிகளில் 14.4 சதவீதத்தால் வளர்ச்சி அடைந்தன.** கட்டடவாக்கச் செயற்பாடுகளில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க மீட்சியானது சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் செயற்பாடுகளை ஊக்கப்படுத்தியது. மேலும், இவ்வளர்ச்சியானது கனிப்பொருள் ஏற்றுமதிகள் அளவுச் சுட்டெண்ணில் ஏற்பட்ட 2015இன் 48.1 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2016இல் 7.9 சதவீத வளர்ச்சியில் பிரதிபலிக்கப்பட்டது. இதற்கும் மேலாக இரத்தினக்கல் ஏற்றுமதி 2015இன் 17.1 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் அளவு நியதிகளில் 8.4 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்தது. ருடைல் மற்றும் சேர்கோன் இன் உற்பத்தி இவ்வாண்டில் அதிகரித்த வேளையில் இல்மனைட்டின் உற்பத்தி சுருக்கமடைந்தது. மறுபக்கம், வளமாக்கித் தயாரிப்பின் கேள்வி குறைவடைந்ததன் காரணமாக பொசுப்பேற்றின் உற்பத்தி இவ்வாண்டில் சுருக்கமடைந்தது.

## தயாரிப்பு


**தயாரிப்புச் செயற்பாடுகளின் பெறுமதிகூட்டலானது 2015இன் 4.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இல் குறைந்த வேகத்தில் 1.7 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்தது.** இக்குறைந்த வளர்ச்சிக்கு, முக்கியமாகத் தயாரிப்பு வகையான உணவு, குடிபானம் மற்றும் புகையிலை உற்பத்திகளின் தயாரிப்பு பெறுமதிகூட்டல் நியதிகளில் 2015இன் 3.7 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இன் 2.5 சதவீதச் சுருக்கமே காரணமாகும். மேலும், இவ்வாண்டில் ஏனைய உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்திகள் மற்றும் புடவைகள் உற்பத்தி, அணியும் ஆடைகள் மற்றும் தோல் மற்றும் தொடர்பான உற்பத்திகள் என்பன முறையே 13.1 சதவீதம் மற்றும் 0.2 சதவீதத்தால் சுருக்கமடைந்தன. எனினும், ஏனைய தயாரிப்புத் துணை வகைகள் சாதகமாகக் காணப்பட்டதோடு, இறப்பர் மற்றும் பிளாத்திக்கு பொருட்கள் தயாரிப்பின் 17.9 சதவீத வளர்ச்சி, அடிப்படை உலோகங்கள் மற்றும் உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகளின் 28.7 சதவீத வளர்ச்சி மற்றும் பொறி மற்றும் இயந்திர உற்பத்திகளின் 14.1 சதவீத வளர்ச்சி என்பன தயாரிப்புச் செயற்பாடுகளுக்கு சாதகமாக பங்களிப்புச் செய்தன. மாதந்தோறும் இலங்கை மத்திய வங்கியால் தொகுக்கப்படும் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்ணின் நடத்தையை கருத்தில் கொள்ளும் போது இது ஏப்பிறல் மற்றும் மே மாதங்களைத் தவிர ஆண்டு முழுவதும் விரிவாக்கம் அடைந்து காணப்பட்டது. சராசரியாக அனைத்துத்

வரைபடம் 2.3
**கைத்தொழில்களில் மொத்தப் பெறுமதிசேர்ப்பு (2010 நிலையான விலைகளில்)**




மூலம்: குடித்தொகை மற்றும் புள்ளிவிபரத்தினைக்களம்

வரைபடம் 2.4
**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (அ)**




(அ) கொ.மு.சுட்டெண்ணானது புலனுணர்வு அளவீட்டு அடிப்படையிலான கடந்த மாதத்துடன் ஒப்பிட்டு மாதாந்த அபிவிருத்திகளை வெளிக்காட்டும் விதத்தில் அமைந்தது ஆகும். இந்த வியாபித்தல் சுட்டெண்ணானது 0 மற்றும் 100ற்கு இடையிலான பெறுமதியினை கொண்டிருப்பதோடு பொதுவாக நடுநிலையான 50ற்கு மேலான சுட்டெண் பெறுமதியானது ஒரு விரிவாக்கத்தைக் குறிக்கும் வேளையில் 50ற்கு கீழான சுட்டெண் பெறுமதியானது பொருளாதார நடவடிக்கைகளில் சுருக்கத்தினையும் குறிக்கின்றது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

துணைச்சுட்டெண்களான உற்பத்தி, புதிய கட்டளைகள், கொள்வனவு இருப்புகள், தொழில்நிலை மற்றும் நிரம்பலர் வழங்கல் நேரம் என்பன இவ்வாண்டில் விரிவாக்கமடைந்து காணப்பட்டன. இதேவேளை மாதந்தோறும் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் தொகுக்கப்படும் கைத்தொழில் உற்பத்தி சுட்டெண் (2015=100) 2016இல் 3.3 சதவீதத்தால் அதிகரித்தது.

## தொழிற்சாலை கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்[3]

**பலயீனமான வெளிநாட்டுக் கேள்வி மற்றும் கட்டுப்படுத்தப்பட பன்னாட்டு பண்டங்களின் விலைகள் அதனுடன் இணைந்ததான பாதகமான வானிலை நிலைமைகளால் உந்தப்பட்ட நிரம்பல்பக்க தடங்கற்கள் என்பவற்றின் காரணமாக தயாரிப்பு உபதுறையின் மிகப் பெரிய பங்களிப்பாளரான தொழிற்சாலை கைத்தொழில் வெளியீடு 2016இல் 2.7 சதவீத வீழ்ச்சியைப் பதிவுசெய்திருந்தது.** உற்பத்தி தொடர்பில் தயாரிப்புத் துறையின் போக்கினை வெளிப்படுத்துகின்ற தொழிற்சாலை கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் 2016இல் கலப்பான செயலாற்றத்தைக் காட்டியிருந்தது. உணவு உற்பத்திகள், அணியும் ஆடைகள், குடிபானங்கள், புகையிலை உற்பத்திகள், இரசாயன மற்றும் இரசாயன உற்பத்திகள், உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் மற்றும் மின்கருவிகள் போன்ற முக்கிய உபதுறைகளின் உற்பத்தி மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தன. இருந்தபோதிலும், புடவை, உலோகமல்லா ஏனைய கனிம உற்பத்திகள், இறப்பர் மற்றும் பிளாத்திக் உற்பத்திகள், சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள், தோல் மற்றும் அதனுடன் தொடர்புடைய உற்பத்திகள் மற்றும் அடிப்படை உலோக உற்பத்திகள் என்பவற்றின் வெளியீடு 2016இல் முன்னேற்றமடைந்திருந்தது.


**தொழிற்சாலைக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணில் மிகப் பெரிய துணைத் துறையாகக் காணப்படுகின்ற உணவு உற்பத்திகளின் துணைத் துறையானது 2016 காலப்பகுதியில் 3.2 சதவீதம் கொண்ட சுருக்கத்தைக் காட்டியிருந்ததுடன் 2015இல் அவதானிக்கப்பட்ட நேர்க்கணிய செயலாற்றத்தை மீள்திரும்பல் செய்திருந்தது.** பால் உற்பத்திகள், பதனிடப்படுத்தப்பட்டதும் பாதுகாக்கப்பட்டதுமான இறைச்சி உற்பத்திகள், மரக்கறி மற்றும் விலங்கு எண்ணெய் உற்பத்திகள் மற்றும் பெறுமதிசேர்க்கப்பட்ட தேயிலை என்பவற்றின் தயாரிப்பானது ஆண்டு காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்திருந்தது. எனினும், வெதுப்பக உற்பத்திகள், சீனி, மக்கரோனி மற்றும் நூடில்ஸ், தயார்செய்யப்பட்ட உணவுகள் மற்றும் சமையல் பாத்திரம் என்பவற்றின் தயாரிப்பு ஆண்டுப்பகுதியில் ஓர் அதிகரிப்பைப் பதிவுசெய்திருந்தன. ஆரோக்கியமான உணவுகளின் உலகளாவிய விற்பனையானது 2017இல் ஐ.அ.டொலர் 1 றில்லியனை அடையுமென மதிப்பிடப்பட்டுள்ளதுடன் நுகர்வோர்கள் ஆரோக்கியமான உணவுத் தெரிவுகள் தொடர்பில் அதிகரித்த தேடலானது உலகளாவிய போக்கில் காணப்படுவதன் காரணத்தால் இது மேலும் வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது. கடல் வளங்கள், பழங்கள் மற்றும் மரக்கறிகள் போன்றவற்றின் அபரிதமான தன்மையுடன் உலகச் சந்தையில் பொதியிடப்பட்ட உணவுகளுக்கான அதிகரித்த கேள்வியின் நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கு இலங்கையானது பொதியிடப்பட்ட உணவுகள் மீதான வாய்ப்புக்களை பரிசீலிக்க வேண்டும்.

**குடிபான உபதுறையின் பாரிய வகையான மதுபான உற்பத்தியின் குறைவின் மிக முக்கிய காரணத்தால் குடிபான உபதுறையானது 13.4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது.** வெள்ளப்பெருக்குக் காரணமாக பாரியளவிலான பியர் தயாரிப்பாளர்களின் நடவடிக்கைகளின் மீதான தடங்கல்களே மதுபான உற்பத்தியின் இவ்வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாகும். சுவையூட்டப்பட்ட பால் உற்பத்திகளும் ஆண்டுப்பகுதியில் ஓர் பின்டைவை அனுபவித்திருந்தன. எனினும், 2016இன் இறுதிப்பகுதியில் காணப்பட்ட வரட்சிநிலைமைகளின் காரணத்தால் ஏற்பட்ட உயர்ந்த கேள்வியால் மென்பானங்கள், சுத்திகரிக்கப்பட்ட நீர் மற்றும் போத்தலில் அடைக்கப்பட்ட நீர் என்பவற்றின் உற்பத்தி ஆண்டுப்பகுதியில் முன்னேற்றமடைந்திருந்தது.

**புகையிலை உற்பத்திகள் துணைத் துறை 2016 காலப்பகுதியில் 3.2 சதவீத வீழ்ச்சியைப் பதிவுசெய்திருந்தது.** 2015இன் இறுதிப்பகுதியில் கலால் தீர்வைகளின் அதகரிப்பின் காரணமாக அதிகரித்த சிகரெட் விலைகள் மற்றும் 2016இல் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விலை அதிகரிப்பு என்பவற்றின் காரணமாக ஏற்பட்ட குறைந்தளவான நுகர்வோர் கேள்வி என்பனவே பிரதான காரணமாகும். வர்த்தகக் குறிகாட்டிக்கேற்ற வகையில் 2016ஆம் ஆண்டு சிகரெட்டின் விலைகள் 45 தொடக்கம் 100 வரையான சதவீதங்களுக்கிடையில் அதிகரித்திருந்தது. 2016 நவெம்பரில் ஏற்பட்ட இறுதி அதிகரிப்பானது புகையிலை உற்பத்திகள் மீதான 15 சதவீத பெறுமதி சேகரிக்கப்பட்ட வரியின் பிரயோகித்தலின் காரணமாக ஏற்பட்டது. உயர்ந்தளவான சிகரெட் விலைகள் போலியான சிகரெட்டுக்கள் அல்லது பீடி போன்ற இழிவான பதிலீடுகள் தொடர்பில் அதிகரித்த கேள்விக்கு இட்டுச்செல்லக்கூடுவதுடன்

3 தொழிற்சாலைக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணின் நிறைகள் 2010இனை அடியாண்டாகக் கொண்டு ஒவ்வொரு கைத்தொழிலுக்குமென ஒதுக்கப்பட்டுள்ளதுடன் இது பன்னாட்டு நியமக் கைத்தொழில் வகைப்படுத்தலின் திருத்தம் 4இனை பயன்படுத்தி கணிக்கப்படுகின்றது. அதேவேளை, தெரிவு செய்யப்பட்ட அடியாண்டு 2015 உடன் ஒப்பிடுகையில் கைத்தொழில் உற்பத்திகளின் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கூடையின் அடிப்படையில் குறிப்பிட்டதொரு காலப்பகுதியில் கைத்தொழில் உற்பத்திகளில் ஏற்படும் குறுங்கால மாற்றங்களை அளவிடுவதற்கான கூட்டு குறிக்காட்டியாக கைத்தொழில் உற்பத்தி சுட்டெண்ணை தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் தொகுத்துள்ளது. 2017இலிருந்து தேசிய கணக்கீட்டினை தொடுத்தல் நோக்கத்திற்காக கைத்தொழில் உற்பத்தி சுட்டெண் பயன்படுத்தப்படுவது எதிர்பார்க்கப்பட்டுள்ளது. அதன்படி, ஆண்டறிக்கை 2017இன் தயாரிப்பு துறை தொடர்பான பகுப்பாய்வானது கைத்தொழில் உற்பத்தி சுட்டெண்ணை பயன்படுத்தி மேற்கொள்ளப்படவுள்ளது.

வரைபடம் 2.5
தொழிற்சாலைக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (2010 = 100)




மூலம்: இலங்கை மத்திய வங்கி

கடுமையான சுகாதாரம் சம்பந்தமான நோய்களினையும் ஏற்படுத்தும். இலங்கைச் சுங்கமானது 2016இல் கைப்பற்றப்பட்ட ஏறத்தாழ நான்கு மில்லியன் சட்ட ரீதியற்ற சிகரெட்டுக்களுடன் ஒப்பிடுமிடத்து 2017இன் முதல் இரண்டு மாதங்களில் இலங்கைச் சுங்கமானது பத்து மில்லியனுக்கு மேலான சட்ட ரீதியற்ற சிகரெட்டுக்களை கையகப்படுத்தியிருந்தது. பீடியின் உற்பத்தியை கட்டுப்படுத்துவதற்கானதொரு வழிமுறையாக புகையிலை இறக்குமதி மீதான இறக்குமதித் தீர்வையானது அதிகரிக்கப்பட்ட போதிலும் இலங்கையிலுள்ள பீடித் தயாரிப்பாளர்கள் புகையிலைக்கான உள்நாட்டு பதிலீடுகள் மீது தங்கியிருந்தனர். இது நாட்டில் அதிகாரமளிக்கப்படாத மற்றும் சட்ட ரீதியற்ற புகையிலை உற்பத்திகள் என்பவற்றின் பரம்பலைக் கட்டுப்படுத்துவதற்குக் கடுமையான வழிமுறைகள் பின்பற்றப்படல் வேண்டுமென்பதை இது எடுத்துக்காட்டுகின்றது.

**புடவை துணைத் துறையின் வெளியீடு 2016 காலப்பகுதியில் ஏறத்தாழ 2.6 சதவீதத்தால் வளர்ச்சியடைந்திருந்தது.** இவ்வுப துறையின் வளர்ச்சியானது புடவைகளுக்கான உள்நாட்டுச் சந்தைக் கேள்வி அதிகரிப்பின் காரணமாக மிகப் பிரதானமாக உந்தப்படுத்தப்பட்டிருந்தது. 2016இல் இலங்கைக்கான புடவைகள் மற்றும் ஆடைகளின் இறக்குமதி தொடர்பில் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 2.7 பில்லியன் செலவிடப்பட்டிருந்தது. உள்நாட்டு கைத்தறித்தலின் தயாரிப்பு மற்றும் புடவைகளை உற்பத்தி செய்கின்ற தொழிற்சாலைகள் ஆகிய இரண்டினதும் இயலளவை முன்னேற்றுவதற்கான சாத்தியப்பாட்டை பரீட்சிக்க வேண்டியதன் தேவைப்பாட்டை இது அடையாளப்படுத்துகின்றது. சில ஆடை ஏற்றுமதியாளர்களுக்கு தனிச்சிறப்பு வாய்ந்த மூலப்பொருட்கள் தேவைப்படுவதன் காரணத்தால் உயர் பெறுமதி சேர்க்கப்பட்ட புடவைகளை உற்பத்தி செய்வதன் மீது கைத்தொழிலானது கவனம் செலுத்தக்கூடியதுடன் கைத்தொழில் துறையில் காணப்படும் பின்னோக்கிய இணைப்புக்களில் இருந்தான நன்மைகளை அடைந்துகொள்வதற்கு ஆடைக் கைத்தொழிலுக்கு உதவக்கூடும். அத்தகைய முயற்சிகள், உள்நாட்டு கைத்தொழில் நடவடிக்கைகளை மேம்படுத்துகின்ற அதேவேளை நாட்டின் வெளிநாட்டுச் செலாவணியைச் சேமிப்பதற்குப் பங்களிப்புச் செய்யக்கூடும்.

**தொழிற்சாலை கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணில் இரண்டாவது பெரிய உப துறையாக காணப்படுகின்ற அணியும் ஆடைகள் துணைத் துறை மெதுவானதொரு சுருக்கத்தை காட்டியிருந்ததுடன் 2016 காலப்பகுதியில் 2.4 சதவீத வீழ்ச்சியை பதிவுசெய்திருந்தது.** பாரம்பரிய சந்தைகளான ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போன்றவற்றிலிருந்தான ஏற்றுமதிக்கான கேள்வியின் வீழ்ச்சியே இவ்உப துறையின் மோசமான செயலாற்றத்திற்கு முக்கிய காரணமாகும். எனினும், கனடா, சீனா, அவுத்திரேலியா மற்றும் ஐக்கிய அரபு இராட்சியம் போன்ற பாரம்பரியமற்ற சந்தைகளுக்கான ஆடை ஏற்றுமதிகளின் வளர்ச்சியானது 2016இல் அதிகரிக்கப்பட்டது. ஜி.எஸ்.பி+ வரிச்சலுகையின் சாத்தியமான மீள் கிடைத்தளமானது ஐரோப்பிய ஒன்றியத்திற்கான அதிகரித்த ஏற்றுமதிகளுடன் நாட்டின் ஆடை கைத்தொழில் அபிவிருத்தியை நோக்கி கணிசமமான

அட்டவணை 2.9
தொழிற்சாலைக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (2010 = 100)

| பிரிவு | 2015 (அ) | 2016 (ஆ) | மாற்றம் (மூ) 2014/15 (அ) | 2015/16 (ஆ) |
|---|---|---|---|---|
| 1 உணவு உற்பத்திகள் (23.7%) | 107.3 | 103.9 | 4.9 | -3.2 |
| 2 குடிபானங்கள் (8.1%) | 123.1 | 106.6 | 10.1 | -13.4 |
| 3 புகையிலை உற்பத்திகள் (8.4%) | 95.4 | 92.4 | 8.9 | -3.2 |
| 4 புடவை (1.6%) | 131.0 | 134.4 | -1.4 | 2.6 |
| 5 அணியும் ஆடைகள் (23.1%) | 173.4 | 169.2 | 16.0 | -2.4 |
| 6 தோல் மற்றும் தொடர்பான உற்பத்திகள் (0.8%) | 86.4 | 107.0 | -10.9 | 23.8 |
| 7 தளபாடம் தவிர்ந்த மரம் மற்றும் மர உற்பத்திகள் (0.1%) | 121.7 | 129.0 | 11.7 | 6.0 |
| 8 தாள் மற்றும் தாள் உற்பத்திகள் (0.1%) | 126.6 | 126.6 | 0.0 | 0.0 |
| 9 அச்சுப் பதிப்பு மற்றும் பதிவுசெய்யப்பட்ட ஊடகத்தின் மீள் தயாரிப்பு (0.7%) | 112.4 | 112.4 | 0.0 | 0.0 |
| 10 சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள் (2.2%) | 82.6 | 84.3 | -3.9 | 2.1 |
| 11 இரசாயனம் மற்றும் இரசாயன உற்பத்திகள் (6.3%) | 88.3 | 77.4 | 7.5 | -12.4 |
| 12 மருந்தாக்கற் பொருட்கள், மருத்துவ இரசாயனவியல் மற்றும் தாவரவியல் உற்பத்திகள் (0.1%) | 142.2 | 145.4 | -0.4 | 2.3 |
| 13 இறப்பர் மற்றும் பிளாத்திக்குப் பொருட்கள் (10.5%) | 131.3 | 138.5 | -2.2 | 5.4 |
| 14 ஏனைய உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்திகள் (7.2%) | 118.8 | 132.0 | 15.4 | 11.1 |
| 15 அடிப்படை உலோகங்கள் (1.0%) | 115.0 | 148.0 | 1.8 | 28.7 |
| 16 பொறி மற்றும் இயந்திரம் தவிர்ந்த உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் (3.8%) | 109.8 | 72.9 | 13.0 | -33.6 |
| 17 இலத்திரனியல் சாதனங்கள் (2.3%) | 130.6 | 118.4 | 31.3 | -9.3 |
| **தொழிற்சாலைக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்** | **125.4** | **122.0** | **9.2** | **-2.7** |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
குறிப்பு: 1) தொழிற்சாலைக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணுக்கான (2010=100) நிறையிடல் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளன.
2) கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் என்பது 2013இல் தொழிற்சாலை கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் என மீளப்பெயரிடப்பட்டுள்ளது.

## சிறப்புக்குறிப்பு 03
## தயாரிப்புத் துறை அபிவிருத்தி உபாயத்தை நோக்கி

**வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்வதற்கான தயாரிப்பு**

இலங்கை 1978இல் பொருளாதார தாராளமயமாக்கல் முதல் தேசிய பொருள்வளம் மற்றும் மேம்படுத்தப்பட்ட வாழ்க்கைத் தரம் என்ற அடிப்படையில், கணிசமான பொருளாதார மற்றும் சமூக முன்னோற்றத்தை எய்தியுள்ளது. எவ்வாறாயினும், மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் ஒப்பிடும்போது ஏற்றுமதிகள் வீழ்ச்சியடைந்திருந்த வேளையிலும், கடந்த சில ஆண்டுகளின் பொருளாதார வளர்ச்சியானது ஏறத்தாழ 3லிருந்து 5 சதவீத மட்டங்களில் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. உற்பத்தித்திறனனை மேம்படுத்துகின்ற அதேவேளையில் உயர் பெயறுமதிசேர்க்கப்பட்ட உற்பத்திகளின் உற்பத்தியை நோக்கி படிவளர்ச்சியுறுதல் மற்றும் உள்நாட்டு மற்றும் பன்னாட்டு சந்தைகள் இரண்டிலும் போட்டித்தன்மையினைத் தொடர்தல் ஆகியவற்றின் இயலாமையினால் கடந்த இரு தசாப்தகாலமாக பொருளாதார வளர்ச்சிக்கு தயாரிப்புத் துறையின் பங்களிப்பு தொடர்ந்தும் குறைவாகக் காணப்பட்டது. 20ஆம் நூற்றாண்டின் நடுக்காலப்பகுதியில் பலமான கைத்தொழில் கொள்கைகளை அமுல்படுத்துவதன் ஊடாக ஏனைய நாடுகளினால் அடையப்பட்ட வேகமான அபிவிருத்தியானது, நாடொன்றின் தயாரிப்புத் துறையானது பொருளாதாரம் மற்றும் சமூக உருமாற்றல் செயன்முறையில் உறுதியான ஊக்குவிக்கும் பங்கினை வகிக்கமுடியும் என்பதனை எடுத்துக் காட்டுகின்றது. தயாரிப்புத் துறையின் அபிவிருத்தியானது வறுமை மற்றும் பிராந்தியங்களுக்கிடையிலான ஏற்றத் தாழ்வின் ஒழிப்பு, தரமான தொழில் வாய்ப்புக்களின் உருவாக்கல், ஏற்றுமதி வருவாயின் அதிகரிப்பு அதேபோன்று வளர்ச்சிக்கு ஆதரவளிக்கும் பொருளாதாரத்தின் தொழில்நுட்ப உள்ளாற்றல்கள் மற்றும் உற்பத்தித்திறன் உள்ளாற்றல்கள் என்பனவற்றின் அபிவிருத்தி போன்றவற்றிற்குப் பங்களிப்புச் செய்யலாம். ஆகவே, வெளிநாட்டு உதவிகள் மற்றும் அரசாங்கப் பொதுநல மாற்றல்களில் நம்பிக்கைகொண்ட இலங்கையின் பொருளாதாரப் பாதையின் இச்சந்தியில் தொடர்ந்தும் நிலைத்திருக்கமுடியாது, வேகமான நிலைத்திருக்கும் அபிவிருத்தியினை அடைந்து கொள்வதற்காக பொருளாதாரத்தினை வழிநடத்துவதற்கு தயாரிப்புத் துறையை மீள் உயிர்தெழுப்ப முக்கியமான தேவையொன்று காணப்படுகின்றது.

அட்டவணை சி.கு. 3.1
மொத்த உள்நாட்டு உற்பத்தியின் துறைவாரியான பகுப்பாய்வு

%


| ஆண்டு | வேளாண்மை | கைத்தொழில் | பணிகள் | தயாரிப்பு (கைத்தொழிலின் ஒரு பகுதி) |
|---|---|---|---|---|
| 1978 | 26 | 24 | 50 | 19 |
| 1980 | 24 | 24 | 52 | 18 |
| 1985 | 26 | 26 | 49 | 18 |
| 1990 | 23 | 27 | 50 | 17 |
| 1995 | 20 | 30 | 50 | 14 |
| 2000 | 19 | 28 | 53 | 16 |
| 2005 | 17 | 27 | 56 | 16 |
| 2010 | 12 | 29 | 59 | 17 |
| 2015 [1] | 8 | 26 | 57 | 16 |
| 2016 [1] | 7 | 27 | 56 | 15 |

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

1. தேசிய கணக்குகள் 2008 தரம் முறைமைக்கேற்ப அடிப்படை விலையில் சேர்க்கப்பட்ட மொத்த பெறுமதியின் அடிப்படையில் இந்த சதவீதங்கள் கணிக்கப்பட்டன. வேளாண்மை, கைத்தொழில்கள், பணிகள் மற்றும் வரிகளுக்கு அடிப்படை விலையில் மொத்த பெறுமதி சேர்க்கையின் கூட்டுத்தொகையிலிருந்து உற்பத்திகள் மீதான மாணியங்கள் கழித்தது என்பது சந்தை விலைகளிலான மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு சமமாகும்.

கைத்தொழில் மயமாக்கல் மூலம் அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்கு மாறாக, இலங்கை ஓர் வேளாண்மைமயமான சமுதாயத்திலிருந்து ஓர் சேவை-அடிப்படையிலான பொருளாதாரமாக வேகமாக மாறியுள்ளது. வேளாண்மைத் துறையின் பங்கின் வீழ்ச்சி மற்றும் சேவைகள் துறை மற்றும் தயாரிப்புக் கைத்தொழில் அல்லாத துறைகளின் (அதாவது, கட்டவாக்கம், சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல், மின், நீர் மற்றும் கழிவு முகாமைத்துவம்) கணிசமான அதிகரிப்பு என்பவற்றுடன் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் துறைவாரியான பகுப்பாய்வு மாற்றமடைந்துள்ளது (அட்டவணை சி.கு.3.1). கடந்த 15 ஆண்டுகளின் பெரும்பாலான ஆண்டுகளில் தயாரிப்புத் துறையின் வளர்ச்சி வீதமானது மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வீதத்தினை விட குறைவாக காணப்பட்ட வேளையிலும் (வரைபடம் சி.கு. 3.1) மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தயாரிப்புத் துறையின் பங்கு 1978 முதல் குறைவாகவும் மந்தமாகவும் காணப்பட்டது (அட்டவணை சி.கு.3.1). இதன் விளைவாக, கடந்த சில ஆண்டுகளாக இலங்கையால் பதிவுசெய்யப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி வீதங்களானது வர்த்தகபடுத்த இயலாத சேவைகள் மற்றும் கட்டடவாக்கத்திலிருந்து உருவாகி, வளர்ச்சியை 3 முதல் 5 சதவீத மட்டங்களுக்கு மட்டுப்படுத்தியது.

வரைபடம் சி.கு. 3.1
மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் அதன் பகுதிகளின் வளர்ச்சி வீதங்கள்




மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரங்கள் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

தயாரிப்புத் துறையை முன்னேற்றுவதற்கு இலங்கையானது 1978இல் பொருளாதார தாராளமயமாகலிற்குப் பின்னர், 1978இல் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மற்றும் ஏற்றுமதி பதனிடல் வலையத்தினை நிறுவுதல், அரசின் தொழில்முயற்சிகளின் தனியார்மயமாக்கல் 1990ஆம் ஆண்டு 46ஆம் இலக்க கைத்தொழில் மேம்படுத்தல் சட்டத்தின் கீழ் 1991இல் கைத்தொழில்மயப்படுத்தல் ஆணைக்குழுவினை நிர்மாணித்தல், 1990களில் ‘200 ஆடைத் தொழிற்சாலைகள் செயற்றிட்டம்’ என்பதை நடைமுறைபடுத்தல், 1995 இல் கைத்தொழில் கொள்கை அறிக்கையின் அறிவித்தல், ‘உற்பத்திதிறன் தசாப்தம் 1997 - 2006’ இன் அறிமுகப்படுத்தல் மற்றும் 2015இல் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் அபிவிருத்திக்கான தேசிய கட்டமைப்பினை வடிவமைத்தல் போன்ற கொள்கை வழிமுறைகளை உள்ளடக்கிய பல வழிமுறைகளை மேற்கொண்டது. எனினும், அண்மைக்காலங்களில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளில் இலங்கையின் தொழிற்சாலை கைத்தொழிலின் போட்டித்தன்மையை பேணுவதில் இவ் வழிமுறைகளின் தாக்கம் குறைவாகக் காணப்பட்டதுடன் அணியும் ஆடைகள்,

2

உணவு உற்பத்திகள் மற்றும் இறப்பர் உற்பத்திகள் மற்றும் குறைந்த தொழில்நுட்ப செறிவான பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிலாளர் செறிவான தொழில்முயற்சிகள் ஆகிய தயாரிப்பு நடவடிக்கைகள் தொடர்ந்தும் அதிக கவனத்தைக் கொண்டிருந்தன. குறிப்பாக 2000ற்குப் பின்னர், அதிமலிவான தொழிலாளர்களை உடைய நாடுகளுக்கான அணியும் ஆடைத் தயாரிப்பில் மலிவான தொழிலாளர்களிலிருந்தான போட்டித்தன்மையிலான நன்மைகளை இலங்கை இழந்தபோது தயாரிப்புத் துறையின் வளர்ச்சியின் மூலம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியானது குறைந்தளவில் ஆதரவளிக்கப்பட்டது. அணியும் ஆடைத் தயாரிப்பின் செழிப்பான சகாப்தத்தின்போது, இலங்கையானது வேறு உற்பத்தி வகைகளினுள் பன்முகப்படுத்துவதற்கான அல்லது அதிதொழில்நுட்ப செறிவு, உயர் பெறுமதி சேரல் மற்றும் சிக்கலான உற்பத்திகளை நோக்கி தயாரிப்பினை நகர்த்துவதற்கான வினைத்திறனான உபாயமிடலை தவறியது. இவ்வபிவிருத்தி கட்டமானது கல்வியியலில் ”உரிய காலத்திற்கு முந்திய கைத்தொழில்மயமாக்கலின் திரும்புதல்” என்ற கோட்பாட்டை ஒத்ததாகும். இது மூலதன உட்பாய்ச்சல்கள், பன்னாட்டு உதவி, பணவனுப்பல்கள் மற்றும் பண்ட விலை அதிகரிப்புக்களை அடிப்படையாகக்கொண்டு கைத்தொழில்மயமாக்கலில் ஓர் “முந்திய - தொடக்கம்” இல்லாத மற்றும் திறந்த பொருளாதாரங்களை கொண்ட நாடுகளின் வளர்ச்சியில் அழுத்தத்தை ஏற்படுத்தும் உலக மயப்படுத்தல் அழுத்தங்களால் விளைவிக்கப்படுகின்றன என காட்டப்பட்டதுடன், இது ஓர் பணிகள் அடிப்படையிலான பொருளாதாரம் மூலம் மெதுவான வளர்ச்சி மட்டுமே சாத்தியமானது என்பதையும் காட்டுகின்றது.[2] இலங்கையானது ஓர் பிந்திய நுழைபவராயினும்கூட தயாரிப்புத் துறையை அபிவிருத்திசெய்து உலகலாவிய பெறுமதிச் சங்கிலிகளுடன் ஒருங்கிணைவது தொடர்பான அவசரமான ஒப்பிய பொறுப்பை மேற்கொள்ளவேண்டும் என்பதை இது மேலும் வலியுறுத்துகிறது.

**பன்னாட்டு அனுபவம்**

1950 களின் காலப்பகுதியில் இலங்கையின் பொருளாதாரப் பின்னணியை ஒத்த பல நாடுகள், 20வது நூற்றாண்டின் நடுப்பகுதியில் தயாரிப்பு ஏற்றுமதிகளை அதிகரிக்கும் நோக்கில் அவர்களின் தயாரிப்பு துறைகளின் உற்பத்தி இயலளவை மேம்படுத்துவதற்காக அரசாங்கத்தினால் வழிநடாத்தப்பட்ட கொள்கை வழிமுறைகளை மேற்கொண்டிருந்தன. ஆசியாவில் உள்ள நாடுகள் அரசாங்கத்தினால் வழிநடாத்தப்பட்ட கைத்தொழில் கொள்கையைப் பின்பற்றுவதில் யப்பானின் வழிகாட்டலுடன் அதனைத் தொடர்ந்து ஆரம்பத்தில் தென்கொரியா, ஹொங்கொங், தாய்வான் மற்றும் சிங்கப்பூர் (“நான்கு புலிகள்”) மற்றும் பின்னரான காலப்பகுதியில் சீனா, இந்தோனேசியா மற்றும் மலேசியா போன்ற நாடுகள் உள்ளிட்ட ஏனைய பல நாடுகளும் “பொன்வாத்துக்களின் பறக்கும் போக்கு” (வீ.வடிவமான கூடாரம்) என்ற வகையினை பின்பற்றியிருந்தன. இந்நாடுகளின் அபிவிருத்தி செயன்முறையில் சேவைகள் துறைகளானது பின்னரான காலப்பகுதியில் மேலும் விரிவாக்கப்பட்டன. அவற்றின் இலத்தின் அமெரிக்க நட்பு நாடுகளாவன பிரேசில், சிலி, பெரு மற்றும் மெக்சிக்கோ என்பனவாகும். இவ்வனைத்து நாடுகளும் தற்போது மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் சமூக அபிவிருத்திகளில் இலங்கையை விஞ்சியுள்ளன.

மேலே குறிப்பட்ட நாடுகள் அவற்றின் அபிவிருத்தி செயன்முறையின் ஆரம்பத்தில் தெளிவாக குறித்துரைக்கப்பட்ட “கைத்தொழில் கொள்கைகளை” பின்பற்றின. சுயபூர்த்தி விவசாயத்தை கொண்ட பெருமளவான நாடுகள் நில மறுசீரமைப்பு மற்றும் ஏனைய வேளாண்மை நுட்பங்களின் ஊடாக வேளாண்மைத் துறையின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கான கொள்கைகளையும் ஒரே நேரத்தில் பின்பற்றியிருந்தன. ஆகவே, இது பாரம்பரிய துறைகளின் மிகையான ஊழியர்களை நவீனமயமான தயாரிப்புத் துறை முழுமையாக ஈர்த்துக்கொள்ளலின் “லெவிசியனின் திரும்பற்புள்ளி”[3] வரைக்கும் வேளாண்மைத் துறையின் குறை தொழில்நிலை ஊழியர்களை தயாரிப்புத் துறைக்கு மாற்றி பாரியளவான வேளாண்மை உற்பத்திகள் தோன்றின. இந்நாடுகளில் அநேகமானவை அவற்றின் அபிவிருத்தியின் முதலாவது கட்டத்தில் தைக்கப்பட்ட ஆடை போன்ற குறைந்தளவான பெறுமதி சேர்ப்புக்களைக் கொண்ட நுகர்வுப் பொருட்களைத் தயாரித்திருந்தன. எனினும் முன்னைய கட்டத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்பதிறன்களுடன் சிக்கலான உற்பத்திப் பொருட்களுக்கு முன்னேற்றமடைந்திருந்தன. யப்பான் தவிர்ந்த ஏனைய நாடுகள் அந்நாடுகளின் சிறப்புப் பொருளாதார வலயங்களுக்குள் தயாரிப்புத் தொழிற்சாலைகளை நிறுவுவதற்கு முன்னேற்மடைந்த நாடுகளிலிருந்து நேரடி முதலீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கான தந்திரோபாயங்களைப் பின்பற்றியிருந்தன. இதேவேளையில், உள்நாட்டு சிறிய தொழில்முயற்சிகள் பெரும் தொழில்முயற்சிகளாக மாறும்வேளையில் இவைக்கு ஆதரவு வழங்கப்பட்டு, கொட்டுதலிடமிருந்து (விலைகுறைந்த இறக்குமதிகள் மூலமான போட்டி) பாதுகாக்கப்பட்டன. தயாரிப்புத் துறையில் இடம்பெற்ற தொழில்நுட்ப அபிவிருத்தியானது ஏனைய துறைகளான பணிகள் மற்றும் வேளாண்மை வியாபாரம் போன்றவற்றின் தொழில்நுட்ப அபிவிருத்திகளுக்கு இட்டுச்சென்றிருந்தது. இந்நாடுகளில், மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு தயாரிப்புத் துறையின் பங்களிப்பு கணிசமாக அதிகரித்ததுடன் தற்பொழுதும் (அட்டவணை 2) மிக உயர்வாக காணப்படுகின்ற அதேவேளை பண்ட ஏற்றுமதிகளில் பெருமளவான சதவீதமானது தயாரிப்பு ஏற்றுமதிகளாகும். தற்போது, வியட்நாம் மற்றும் பிலிப்பைன்ஸ் போன்ற கீழ் - நடுத்தர வருமானம் கொண்ட நாடுகள் கைத்தொழிலாக்கத்தினூடாக அதேமாதிரியான வளர்ச்சி பாதையைத் தொடருவதற்கு

அட்டவணை சி.கு. 3.2
**தேர்ந்தெடுக்கப்பட்ட நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு தயாரிப்புத் துறையின் சதவீத பங்களிப்பு**

%

| | 1975 | 1980 | 1985 | 1990 | 1995 | 2000 | 2005 | 2010 | 2013 | 2015 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இலங்கை | 13.1 | 18.3 | 18.2 | 17.4 | 20.4 | 15.8 | 16.3 | 17.3 | 15.7[2] | 15.4[2] |
| யப்பான் | வி.கி. | 27.2 | 27.5 | 25.9 | 21.5 | 20.4 | 19.1 | 18.9 | 17.7 | வி.கி. |
| கொரிய குடியரசு | 20.3 | 22.8 | 25.2 | 25.0 | 25.3 | 29.0 | 28.3 | 30.7 | 31.0 | 29.5 |
| சீனக் குடியரசு (தாய்வான்) | வி.கி. | வி.கி. | 35.1 | 31.2 | 25.6 | 25.7 | 27.9 | 29.0 | 28.6 | 29.9 |
| சீன மக்களின் குடியரசு | 37.6 | 39.9 | 34.4 | 32.3 | 33.4 | 31.8 | 32.1 | 31.5 | 29.7 | வி.கி. |
| தாய்லாந்து | 18.7 | 21.5 | 21.9 | 27.2 | 26.5 | 28.6 | 29.8 | 31.1 | 27.7 | 26.9 |
| இந்தோனீசியா | 10.3 | 14.0 | 16.4 | 22.3 | 24.1 | 27.7 | 27.4 | 22.0 | 21.0 | 20.8 |
| மலேசியா | 18.7 | 21.9 | 19.7 | 24.2 | 26.6 | 30.9 | 27.5 | 23.4 | 22.8 | 22.8 |
| வியெத்னாம் | வி.கி. | வி.கி. | 20.5 | 12.3 | 15.0 | 17.1 | 18.8 | 12.9 | 13.3 | 13.7 |
| பிலிபீன்ஸ் | 25.7 | 25.7 | 25.2 | 24.8 | 23.0 | 24.5 | 24.1 | 21.4 | 20.4 | 20.1 |
| இந்தியா | 15.2 | 16.2 | 16.0 | 16.2 | 17.3 | 15.3 | 15.4 | 17.5 | 16.5 | 16.2 |

மூலங்கள் : உலக அபிவிருத்திக் குறிகாட்டிகள், உலக வங்கி
தேசிய புள்ளிவிபரங்கள், சீனக் குடியரசு (தாய்வான்)
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

2. Rodrik, Dani. "Premature deindustrialization." Journal of Economic Growth 21.1 (2016): 1-33.
3. Lewis, W. Arthur. "Economic development with unlimited supplies of labour." The Manchester School of Economics and Social Studies 22.2 (1954): 139-191.

கடுமையான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. வேளாண்மையிலிருந்து பணிகள் துறைக்கான இந்தியாவின் மாற்றமானது 2014இல் ஆரம்பிக்கப்பட்ட "இந்தியாவில் தயாரித்தல்" என்ற பெரியளவிலான பிரச்சாரத்தினூடாக தயாரிப்புத் துறையை அபிவிருத்தி செய்வதற்கான அர்ப்பணிப்பை மேற்கொண்டிருந்தது.

நுகர்வோர் பொருட்சந்தையில் நிலவிய பணவீக்கம், உலகளாவிய கேள்வியினால் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக ஏற்பட்ட பேரினப் பொருளாதார தளம்பல்கள், தெரிவுசெய்யப்பட்ட கைத்தொழில்களின் தோல்வி மற்றும் ஏனையவை காரணமாக சில மேலே குறிப்பிடப்பட்ட நாடுகள் அவற்றின் கைத்தொழில் கொள்கைகளை பேணுவதற்கான கடினத்தன்மையை அனுபவித்திருந்தன. எனினும், அவற்றின் தயாரிப்புத் தளங்களின் தொடர்ச்சியாக இயைந்து செல்லுவதன் காரணமாக நீண்டகாலத்தில் விரைவான பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியை அடைந்துகொள்வதில் வெற்றியடைந்திருந்தன. இலக்கிடப்பட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி, ஆய்வு மற்றும் அபிவிருத்தி, மனித வளங்களின் இயலளவு கட்டியெழுப்பல் மற்றும் பரந்தளவான இறைத்தூண்டுதல்கள் உள்ளடங்கலாக அரசாங்கத்திலிருந்தான கவனம் செலுத்தப்பட்டது மற்றும் அர்ப்பணிக்கப்பட்ட கொள்கை ஆதரவுகள் ஒட்டுமொத்த தயாரிப்பு வெளியீடுகளை ஆதரித்தது. அபிவிருத்திக்கு தயாரிப்புத் துறையின் முக்கியத்துவம் பற்றியும், கொள்கை நடவடிக்கை மூலம் இடையிட்டு கைத்தொழில்மயமாக்கலை அரசு ஆதரவளிக்கவேண்டிய தேவைப்பாடு தொடர்பான ஓர் அபிவிருத்திப் பாடத்தை இலங்கைக்கு இது வழங்குகிறது.

**அத்தியாவசியமான உபாயங்களை நடைமுறைப்படுத்தல்**

கைத்தொழில் உற்பத்தியை அதிகரிப்பதற்கு பல்வேறு வழிமுறைகளை அடுத்தடுத்து வந்த இலங்கை அரசுகள் நடைமுறைப்படுத்தின. அண்மைக்காலத்தில், புதிய விரைவுப் பாதைகளுடன் பிரதேச பகுதிகளிலும் அம்பாந்தோட்டை துறைமுகத்தை அண்மித்த பகுதிகளிலும் கைததொழில் வலயங்களை நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இத் திட்டங்கள், உட்கட்டமைப்பு அபிவிருத்தி, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, மனித வளத்தின் திறனை மேம்படுத்தல் மற்றும் புதிய சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை நிறுவுதல் தொடர்பான பல்வேறுபட்ட அரச முகவர்களால் நடைமுறைபடுத்தப்படவுள்ள ஏனைய சகல திட்டங்களுடன் இணைந்து வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கவர்வதற்கும் தயாரித்தலை அதிகரிப்பதற்கும் உதவிபுரியும். அதேவேளையில், அபிவிருத்திக்கு கொள்கை ஆதரவின் முக்கியத்துவத்தை அங்கீகரித்து, அரசாங்கம் பொதுவான அபிவிருத்திக் கொள்கையொன்றை நிறுவுவதோடு வர்த்தகம் மற்றும் ஏற்றுமதி தொடர்பான கொள்கைகளை உருவாக்குகின்றது. எனினும், முழுமையான தயாரிப்புத் துறைக்கு முறையான முக்கியத்துவத்தை வழங்குகின்ற அதே வேளையில் அதன் கட்டமைப்பு சார்ந்த பிரச்சனைகளை தீர்க்கும் மற்றும் தயாரிப்பு நடவடிக்கைகளை அதிகரிக்கும் அரசின் சகல முயற்சிகளையும் உள்ளடக்கிய அரசின் முழு அபிவிருத்தி செயற்றிட்டத்துடன் இசைவாக்கும் தயாரிப்புத் துறை அபிவிருத்தி உபாயமொன்றிற்கான தேவைப்பாடொன்று காணப்படுகின்றது.

ஆகவே, தயாரிப்புத் துறைக்கு ஓர் பரந்தளவிலான ஆதரவை செயற்றிறனுடன் வழங்குவதற்கும் கட்டமைப்பு சார்ந்த பிரச்சனைகளை தீர்ப்பதற்கும், ஓர் நடைமுறை சாத்தியமான தயாரிப்புத் துறை அபிவிருத்தி உபாயத்தின் நிறுவுதல் அவசியமாகும். சகல பங்கேற்பாளார்களுடன் ஒருங்கிணைக்கப்பட்ட செயன்முறையூடாக அபிவிருத்தி செய்யப்பட்ட இத்தகைய தெளிவாக தெரிவிக்கப்பட்ட ஓர் கொள்கையானது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு தொலைநோக்குடனான திசையை வழங்குவதற்கு அரசின் ஓர் கருவியாகவும் விளங்கலாம். இந்த தயாரிப்புத் துறை அபிவிருத்தி உபாயமானது இலங்கையின் ஒட்டுமொத்த அபிவிருத்தி உபாயங்களின் ஒரு பகுதியாக காணப்பட வேண்டும். வர்த்தகக் கொள்கை மற்றும் ஏற்றுமதி உபாயங்கள் என்பன தயாரிப்புத் துறை அபிவிருத்தி உபாயம் மூலம் கைத்தொழில்மயமாக்கல் முயற்சிகளின் ஒரு பகுதியாக காணப்பட வேண்டியதுடன் இந்த அபிவிருத்தி செயன்முறை சர்வதேச வர்த்தகத்தை தூண்டும் வகையிலிருக்கவேண்டும். மேலும், இந்த உபாயமானது வேளாண்மைத் துறை மற்றும் பணிகள் துறை என்பவற்றுடன் தயாரிப்புத் துறைக்கு இடையிலான இடைத்தொடர்பினை உருவாக்குதல் வேண்டும். முக்கியமாக வேளாண்மைத் துறையின் உற்பத்தித் திறன் முன்னேற்றமானது மிகக்குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஊழியத்தை தயாரிப்புத் துறைக்கு பரிமாற்றுவது மட்டுமின்றி உணவு மீதான செலவிடத்தக்க வருமானத்தின் வீழ்ச்சி மற்றும் ஏனைய பண்டங்கள் மீது செலவிடத்தக்க உண்மை வருமானத்தின் அதிகரிப்பு என்பனவற்றின் விளைவால் தயாரிக்கப்பட்ட உற்பத்திகளுக்கு பொருளாதாரத்திற்குள்ளே கேள்வியை அதிகரிக்கச் செய்யும்.

தயாரிப்புத் துறை அபிவிருத்தி உபாயமானது உள்நாட்டு முதலீட்டாளர்கள் அதேபோன்று வெளிநாட்டு முதலீட்டாளர்களின் தேவைப்பாட்டினை ஆணித்தரமாக கருத்திற் கொள்ளல் வேண்டும். அதேபோன்று பாரியளவான நிறுவனங்கள் அதேபோன்று நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளின் தேவைப்பாடுகளையும் கருத்தில்கொள்ள வேண்டும். உள்நாட்டு சேமிப்புக்கள் குறைவாக இருப்பதனாலும் இறைவெளி மட்டுப்படுத்தப்பட்டிருப்பதனாலும் வெளிநாட்டு நேரடி முதலீடு அவசியமானதாகும். வெளிநாட்டு நேரடி முதலீடுகள் இலங்கையின் குறைந்த தொழில்நுட்ப அறிவினைத் தீர்ப்பதற்கான ஓர் வழிமுறையாகவும் விளங்குகின்றது. இலங்கையின் ஆற்றலை வளர்க்க முனையும் தொழில்நுட்ப செறிவான உயர்ந்த பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளானது பொதுவாக உலகளாவிய பெறுமதிச் சங்கிலி மூலமாக உற்பத்தி வழிமுறையின் ஒவ்வொரு நிலைக்கும் ஒவ்வொரு அமைவிடத்தினாலும் கிடைக்கும் நன்மைகளை முழுமையாக பயன்படுவதற்காக, உற்பத்தி வழிமுறையின் வேறுபட்ட நிலைகள் உலகத்தில் வேறுபட்ட இடங்களில் தயாரிப்பாளர்கள் தளமமைத்து தயாரிக்கப்படுகின்றன. இத்தகைய உலகளாவிய அபிவிருத்தி காணப்பட்ட போதும் கடந்த பத்து வருடங்களில் இலங்கைக்காக பெருமளவான வெளிநாட்டு நேரடி முதலீடுகளானது கட்டுமானத் துறையின் மீதான முதலீடு மற்றும் இலங்கையின் சந்தையை பெற்றுக் கொள்வதற்கான முதலீடு என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது. ஆகையால், எதிர்கால தயாரிப்புத் துறை அபிவிருத்தி உபாயமானது ஏற்றுமதியை மையமாகக்கொண்ட வெளிநாட்டு நேரடி முதலீடுகளை கவருவதற்கான உபாயங்களை உள்ளடக்கவேண்டும்.

வெளிநாட்டு நேரடி முதலீடுகளை கவருவதற்கு தயாரிப்புத் துறை அபிவிருத்தி உபாயமானது வெளிநாட்டு நேரடி முதலீட்டு பாய்ச்சல்களை தீர்மானிக்கின்ற காரணிகளை அடையாளம் காணவேண்டியதுடன் வெளிநாட்டு முதலீட்டுக்கான சாதகமான சூழல் ஒன்றினையும் உருவாக்குதல் வேண்டும். மூல நாடுகள் மற்றும் பெறுநர் நாடுகளுடன் தொடர்புடைய முறையே தள்ளல் மற்றும் ஈர்ப்புக் காரணிகள் என்பவற்றின் காரணமாக வெளிநாட்டு நேரடி முதலீட்டுப் பாய்ச்சல்கள் இடம்பெறுகின்றன. பொதுவாக தள்ளல் காரணிகளானவை குறைந்த செலவிலான ஊழியம், மூலப்பொருட்கள், சந்தைகளுக்கான அணுகும் வழிகள், போட்டித்தன்மை வாய்ந்த நாணயமாற்று வீதங்கள், குறைந்தளவான வரி அமைப்பு, கைத்தொழிற்சாலைகளை நிறுவுவதற்கான நிலத்தின் கிடைப்பனவு என்பவற்றை

உள்ளடக்குகின்றது. வெளிநாட்டு நேரடி முதலீட்டிற்கான சாதகமான சூழலை உருவாக்குகின்ற காரணிகளாவன அரச நிறுவனங்களின் உறுதியான ஆதரவு, வினைத்திறனான ஏற்பாட்டியல், குறைந்தளவான வர்த்தகத் தடைகள், பல்கூட்டு பொருளாதாரங்கள் மற்றும் குறைந்த செலவுடையதும் உயர்ந்த வினைத்திறனுடையதுமான மனித மூலவளங்கள் என்பனவாகும். உலகளாவிய பெறுமதி சங்கிலி உற்பத்தியாளர்கள் உற்பத்திக்கூறுகளை ஒரு அமைவிடத்திலிருந்து இன்னொரு அமைவிடத்திற்கு விரைவாகவும் வினைத்திறனாகவும் போக்குவரத்து செய்யவேண்டியிருப்பதனால் வீதி மற்றும் கடல் போக்குவரத்துக்களின் வினைத்திறன், துறைமுகங்களுக்கான அணுகும்வழி, சுங்கத் தீர்வைகளின் வேகம், களஞ்சியசாலைகள் மற்றும் குறைந்தளவான தீர்வை மற்றும் தீர்வையல்லா தடைகள் என்பன முக்கியமானதாகும். கடந்த காலங்களில் முன்னேற்றம் கண்ட நாடுகளிலுள்ள நிறுவனங்கள் மலிவான ஊழியம் மற்றும் இயற்கை வளங்கள் என்பவற்றை அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் தேடும்நோக்கில் முதலீடுகளை மேற்கொண்டிருந்தன. (வடக்கு - தெற்கு வெளிநாட்டு நேரடி முதலீடுகள்) எனினும், கடந்த தசாப்தத்தில் சீனா, மலேசியா, இந்தியா மற்றும் ருசியா போன்ற தோற்றம் பெற்றுவரும் சந்தைப் பொருளாதாரங்களின் ஒரேமாதிரியான பொருளாதாரங்கள் மீதான முதலீடானது தெற்கு-தெற்கு வெளிநாட்டு நேரடி முதலீடானது அதிகரித்துச் சென்றுள்ளது. அத்தகைய நாடுகள் சந்தையை அணுகும்தன்மை மற்றும் மூலப்பொருட்கள் என்பவற்றின் மீது அதிகளவில் கவனம் செலுத்தியதுடன் முன்னேற்றம் கண்ட நாடுகளின் நிறுவனங்களைக் காட்டிலும் நிறுவனங்களின் தரம் பற்றி வெவ்வேறுபட்ட எண்ணங்களைக் கொண்டுள்ளன. ஆகையால் இலங்கையானது வெவ்வேறுபட்ட வெளிநாட்டு நேரடி முதலீட்டு மூலங்களுக்கான தேவைப்பாடுகளை நிறைவேற்றவேண்டியுள்ளது.

உள்நாட்டு தயாரிப்பாளர்களின் இயலுமையின் அபிவிருத்தியானது நெருக்கடி மிகுந்ததாக இருப்பதனால் நீண்டகாலத்தில் பொருளாதாரத்தின் தயாரிப்புத் தளத்தை முன்னேற்றுவதற்கு வெளிநாட்டு நேரடி முதலீட்டினால் மாத்திரம் முடியாது. வெளிநாட்டு முதலீட்டார்களால் வேண்டப்படுகின்ற துணைநிலை பணிகளை உள்நாட்டு நிறுவனங்கள் வழங்கவேண்டியிருப்பதுடன் வெளிநாட்டு முதலீட்டாளர்களிடமிருந்தான தொழில்நுட்பப் பரிமாற்றல்களை ஈர்த்துக்கொள்வதற்கான இயலுமையை அபிவிருத்தி செய்யவேண்டியுமுள்ளது. குறிப்பாக தேயிலை மற்றும் ஆடைத் துறைகளில் காணப்படுகின்ற சில இலங்கைக் கம்பனிகள் உலக சிறப்புவாய்ந்த நியமங்களை அடைந்துகொண்டிருப்பினும் அதிகளவான நிறுவனங்கள் குறைந்தளவான உற்பத்தித் திறன் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட வளார்ச்சியினால் பாதிக்கப்பட்டுள்ளன. இலங்கை மத்திய வங்கியால் தொகுக்கப்படுகின்ற தொழிற்சாலைக் கைத்தொழில்களின் இயலுமைப் பயன்பாடு மீதான தரவுகள் 2011 தொடக்கம் 2016 வரையான காலப்பகுதியில் கையகத்தக்க இயலளவின் 83 சதவீதத்திற்கு மேலாகக்கூட பயன்படுத்தப்படவில்லை என்பதனை எடுத்துக்காட்டுகின்றது. அதேவேளை, வேலைசெய்கின்ற ஊழியர்படையின் விகிதாசாரத்தின் அடிப்படையில் கைத்தொழில் துறை அதேபோன்று வேளாண்மைத் துறையில் சேர்க்கப்படும் பொருளாதார பெறுமதியென்பது 1981 தொடக்கம் 2016 வரை படிப்படியாக வீழ்ச்சியடைந்து, நாட்டின் மொத்த பெறுமதி சேர்க்கையின் விகிதாசாரத்தை உற்பத்தி செய்வதற்கு தொழிற்படையின் அதிகரித்துச்செல்லும் விகிதாசாரம் பயன்படுத்தப்பட்டது என்று எடுத்துக்காட்டியது. இது ஊழியர் உற்பத்தித் திறனானது கைத்தொழில் துறை மற்றும் வேளாண்மைத் துறை ஆகிய இரண்டிலுமான படிப்படியான வீழ்ச்சியை எடுத்துக்காட்டுகின்றது. இதே வேளையில், இலங்கை தயாரிப்புத் துறை நிறுவனங்களின் மொத்த காரணி உற்பத்தி திறன் வீழ்ச்சியடைந்தமையை 1990 தொடக்கம் 2010 வரையான நிறுவன செயலாற்றத்தை ஆய்வுசெய்த கல்விசார் ஆய்வுகள் அடையாளம் காட்டியுள்ளது.[4] ஆகையால் குறைந்தளவான உற்பத்தித்திறனைக் கொண்ட வேளாண்மைத் துறை அதேபோன்று பணிகள் துறைக் கூறுகள் (சில்லறை வர்த்தகம், தனியார் பணிகள் மற்றும் அரச பணிகள் போன்றன) என்பனவற்றில் காணப்படும் குறைந்தளவில் பயன்படுத்தப்பட்ட ஊழியர்களை தயாரிப்புத் துறைக்கு பகிர்ந்தளிப்பதற்கான வழிமுறைகளை அடையாளம் கண்டுகொள்வதற்கான தயாரிப்புத் துறை அபிவிருத்தி உபாயங்கள் அவசியமாகும். வேளாண்மைத் துறையிலிருந்து ஊழியர்களை மாற்றுவதற்கு சிறியளவிலான வேளாண்மையிலிருந்து பாரியளவிலான வேளாண்மை - வியாபாரத்திற்கு மாற்றியமைக்கும் நோக்கிலான கொள்கைகள் முக்கியமானதாகும். வேலையாட்களின் நிபுணத்துவத்தின் மேம்பாடு, முகாமைத்துவ வழக்கங்கள் மற்றும் மீளமைத்தலுக்கான தடைகளின் தளர்த்தல் மூலமாக தயாரிப்புத் துறையில் மொத்த காரணிகளின் உற்பத்தித்திறனை மேம்படுத்தக்கூடிய கொள்கைகளை முன்னெடுக்கவேண்டும்.

அதே வேளையில், இலங்கையில் மிக நீண்டகாலமாக வளர்ச்சியடையாமலோ அல்லது வெளியேறாமலோ பாரிய எண்ணிக்கையில் காணப்படுகின்ற சிறிய நிறுவனங்கள் ஊழியம் மற்றும் ஏனைய வளங்கள் குறைந்த உற்பத்தித் திறன் வாய்ந்த நடவடிக்கைகளில் செறிந்து காணப்படுகின்றதை உலக வங்கியினால் நடாத்தப்பட்ட ஆய்வு வெளிப்படுத்தியுள்ளது.[5] வளர்ச்சியடையாத சிறிய தொழில்முயற்சிகள் உற்பத்தி அல்லது புத்தாக்கச் செயன்முறை அல்லது தரமான வேலைவாய்ப்புக்களின் வழங்கல் என்பவற்றில் ஈடுபடுத்தினால், இவை நாட்டினது நீண்ட கால உற்பத்தித்திறன் மேம்பாட்டின் வளர்ச்சிக்கு பங்களிப்பதில்லை. இவ்வாய்வானது 19 வேலையாட்களுக்கு கீழான எண்ணிக்கையைக் கொண்டுள்ள நிறுவனங்கள் இலங்கையில் 76 சதவீதமான தொழில்முயற்சிகளுக்கு பங்களிக்கின்ற அதேவேளை இது, இந்தியா, சீனா, பங்களாதேஷ், பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ் மற்றும் வியட்நாம் போன்ற நாடுகளைக் காட்டிலும் மிகவும் உயர்ந்தளவான சதவீதமாகும். மேலும், 25 வருடங்கள் அல்லது அதற்கு மேலான வயதைக் கொண்டுள்ள நிறுவனங்கள் 5 வருடங்கள் அல்லது அதற்குக் குறைவான வயதைக் கொண்ட நிறுவனங்களின் வயதைக்காட்டிலும் 50 தொடக்கம் 90 சதவீதம் மாத்திரமே உயர்வானதாகும். அளவுத் திட்டச்சிக்கனங்கள், நிதியியல் வசதிகளுக்கான அணுகும்தன்மை, சிறந்த தரம்வாய்ந்த முகாமையாளர்களின் கவர்வதற்கான இயல்பு, சந்தை அணுகுதலின் சிறந்த வலையமைப்புக்களின் பேணல் மற்றும் மேம்பட்ட பதிவுருப் பேணல் போன்றவையற்றினால் பாரியளவான நிறுவனங்கள் அதிகளவான உற்பத்தித் திறனைக் கொண்டுள்ளன.[6] ஆகையால், நிதியியல் வசதிகளுக்கான அணுகும்தன்மை, பௌதீகம் சார்ந்த பிணைய அடிப்படையிலான கடன் வழங்கலை விட செயற்றிட்டம் செய்யத்தக்கமை அடிப்படையிலான கடன் வழங்கல், வேலைவாய்ப்பின் முடிவுறுத்தலைப் பாதிக்கின்ற ஊழியர்களின் விதிமுறைகள், மோசமான கணக்கீடு மற்றும் பதிவேட்டின் பயன்பாடு, நிறுவனங்களின் செயற்பாட்டு நடடிவடிக்கைகளின் விரிவாக்கத்தை தடைசெய்யும் பாரியளவான நிறுவனங்களின் மீதான வரிகள் என்பவற்றின் மூலம் நடுத்தர அளவிலான

4. Chandrasiri, Sunil, and Nuwan Indika. "Industrial Productivity for Sustained Growth: The Case of Sri Lankan Manufacturing Industries". **Way Forward For Sustained Growth.** A D V de S Indrarathna, S Widanagama and A Wijesinghe. Colombo: Sri Lanka Economic Association, 2014. 139-164. Print.
5. Varela, Gonzalo, Antonio Martuscelli, and Apoorva Gupta. "Improving competitiveness is about raising productivity rather than keeping costs low". **South Asia's Turn: Policies to Boost Competitiveness and Create the Next Export Powerhouse.** Gladys Lopez-Acedevo, Denis Medvedev and Vincent Palmade. The World Bank, 2017. 17-35. Web. 28 Mar. 2017.
6. Altenburg, Tilman, and Wilfried Lütkenhorst. **Industrial policy in developing countries: Failing markets, weak states.** Edward Elgar Publishing, 2015.

தொழிற்முயற்சிகள் வளர்ச்சியடைவதற்கான தடைகளை நீக்கவேண்டியது அவசியமானதாகும். சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் உற்பத்தி அபிவிருத்தி தேவைப்பாடுகளை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனங்கள் இனங்காணும் வேளையில் இவையின் கண்டுபிடிப்புக்களை சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் பயன்படுத்தும் வகையிலான ஓர் வலுவான ஒருங்கிணைப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனங்களுக்கும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கிடையிலே உருவாக்கப்படவேண்டும். உள்நாட்டு கைத்தொழிலாளர்களின் தயாரிக்கப்பட்ட ஏற்றுமதிகளை அதிகரிப்பதற்காக இலங்கையிலுள்ள கனிமங்கள், மூலிகைகள் மற்றும் ஏனைய இயற்கை வளங்களை பயன்படுத்தக்கூடிய வழிகளை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனங்கள் புத்தாய்வு செய்யவேண்டும், எனின் இவ்வகையான வளங்களில் பெருமளவானவை தற்போது பச்சையான அல்லது குறைந்த பெறுமதி சேர்க்கப்பட்ட வடிவில் ஏற்றுமதிசெய்யப்படுகின்றன. உள்நாட்டுத் தயாரிப்பை மேம்படுத்துவதற்கும் ஏற்றுமதிகளை நோக்கி துறையை இயலச்செய்வதற்கும் பெரியளவிலான தொழில்முயற்சிகளாக விருத்தியாகும்வரைக்கும் சிறிய தொழில்முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதும் அவைகளை குவித்திலிருந்து (மலிவான இறக்குமதிகளிலிருந்து) பாதுகாப்பது அவசியமாகும். இருப்பினும், ஆரோக்கியமானதொரு போட்டித்தன்மையினை கைத்தொழிலுக்குள் ஊக்குவிக்கப்படவேண்டும் மற்றும் மிக உற்பத்தித் திறன் வாய்ந்த பயன்பாடுகளை நோக்கி வெளியேறல் அல்லது மீளமைக்கும் நிறுவனங்களிலிருந்தான வளங்களின் வினைத்திறனான மீள்ஒதுக்கீட்டினை அனுமதிக்கும் கடன்தீர்க்கவியலாமை மற்றும் தொழில்நிலை முற்றுகை ஒழுங்குவிதிகள் வேண்டும்.

தயாரிப்புத் துறையின் அபிவிருத்திக் கொள்கையானது குழு அடிப்படையிலான கைத்தொழில் கொள்கைகள் மற்றும் வெளியக அளவுத்திட்ட சிக்கனங்களுக்கான வாய்ப்புக்களை மேம்படுத்தவேண்டும்.

தயாரிப்புத் துறை அபிவிருத்திக் கொள்கையானது கைத்தொழில் கொள்கைகள் அடிப்படையிலான கொத்தணியை ஊக்குவிப்பதுடன் திரண்ட பொருளாதாரத்திற்கான வாய்ப்புக்களையும் உயர்த்துதல் வேண்டும். ஒரே மாதிரியான தயாரிப்பாளர்கள் புவியியல் ரீதியில் ஒவ்வொருவருக்கும் அண்மித்த வகையில் காணப்படுவதுடன் அவற்றின் துணைநிலைச் சேவைகளை வழங்குபவர்கள் அவர்களைச் சுற்றி கொத்தணியாகக் காணப்படுவதன் ஊடாக இவை எய்தப்படுகின்றன. அதன் பின்னணியில், அரசாங்கமானது கவனம் செலுத்தப்பட்ட உட்கட்டமைப்பு, இறை ஊக்குவிப்புக்கள் மற்றும் ஊழியர்களுக்கான வசதிகள் என்பவற்றை அதிக கவனத்துடன் வழங்கமுடிகின்ற அதேவேளை நிறுவனங்கள் உள்ளீடுகள், ஏனையவர்களுடனான இடைத்தொடர்புகள், ஊழியர்களின் அதிகரித்த எண்ணிக்கை மற்றும் மூலதனப் பொருட்களை அணுகும் தன்மை என்பவற்றினூடாக அளவுத்திட்ட சிக்கனங்களை அடைந்து கொள்ளமுடியும். பாரியளவான நிலப்பரப்புக்களின் வழங்கலானது தொழிற்சாலைகளை இயலச்செய்வதுடன் அவர்களின் துணைநிலைச் சேவை வழங்குநர்கள் இணைந்து கொத்தணியாக இருப்பதானது வெளிநாட்டு நேரடி முதலீட்டைக் கவருவதற்கான முக்கியமான ஈர்ப்பு காரணிகளாகும். மிகவும் குறைவான நகரமயமாக்கலைக் கொண்ட பிரதேசங்களில் கைத்தொழில் நிலையங்களை நிறுவுவதன் ஊடாக அரசாங்கமானது நாட்டின் பல பிரதேசங்களுக்கு கைத்தொழில் மயமாக்கத்தின் நன்மைகள் சென்றடைவதற்கு உதவமுடியும். தற்போது திட்டமிடப்பட்ட புதிய கைத்தொழில் வலயங்களின் செயற்றிறனான நடைமுறைப்படுத்தல் இது தொடர்பாக கணிசமாக பங்களிக்கும்.


இலங்கையில் சராசரி தொழிற்சாலை வேலையாட்களின் எழுத்தறிவு வீதம் மற்றும் கல்வி மட்டம் என்பன போட்டி நாடுகளைவிட உயர்வானதாக இருக்கின்றபோதிலும் அவையின் சிக்கலான பண்டங்களை உற்பத்தி செய்வதற்கு தொழில்நுட்ப ஆற்றல் மற்றும் புத்தாக்க இயலளவு என்பன குறைவாகக் காணப்படுகின்றது. எனவே, இரண்டாந்தர மற்றும் மூன்றாந்தர கல்வி மட்டங்களிலுள்ள பல மாணவர்களுக்கு தொழில்நுட்பம் மற்றும் தொழிற்பயிற்சிகளை அதேபோன்று விஞ்ஞான மற்றும் பொறியியல் தகைமைகள் வழங்கப்படுவதுடன் கைத்தொழில் சார்ந்த அனுபவங்களும் வழங்கப்பட வேண்டும். மேலும், சமூகத்தில் காணப்படுகின்ற விரும்பத்தகாத ஊக்குவிப்புக்கள் இளைஞர்கள் அரசதுறை வேலைவாய்ப்புக்களைத் தேடுவதற்கு இட்டுச் செல்வதுடன் தயாரிப்புத் துறையிலிருந்தும் விலகிச் செல்கின்ற அதேவேளை கைத்தொழிற்சாலை ஊழியர்களுக்கு எதிரான சமூக இழுக்கானது சரிசெய்யப்படல் வேண்டும்.

தயாரிப்புத் துறை அபிவிருத்தி உபாயமென்பது ஏற்றுமதி பண்டங்களின் உற்பத்திக்கான குறைந்த எண்ணிக்கையான கைத்தொழில்களை ஊக்குவிப்பதற்கான உபாயமாக கருதக்கூடாது. தென்கொரியா போன்ற நாடுகள் வெற்றியாளர்களை தெரிந்தெடுத்தல் என்பதில் வெற்றியடைந்திருப்பினும் இப்படி நடந்த அநேகமான நாடுகள் மிக நீண்டகாலமாக அத்தகைய பாதுகாப்புடன் தொடர்ச்சியாக மேற்கொள்ளவேண்டியிருந்தது. அரசாங்கமானது உலகளாவிய சந்தையைப் பொறுத்தமட்டில் எதிர்காலத்தில் நடுத்தர மற்றும் நீண்டகாலத்தில் உயர்ந்தளவில் செயலாற்றும் செய்யக்கூடிய கைத்தொழில்களை எதிர்வுகூறுவதற்கான குறைந்தளவான இயலுமையைக் கொண்டிருப்பதாலும் நிறுவனங்கள் வருமானம் தேடல் நடவடிக்கையை தவிர்ப்பதற்காகவும் அத்தகைய அணுகுமுறைகள் தவிர்க்கப்படல் வேண்டும். ஆகையால் அரசாங்கத்தின் கவனமானது அனைத்துத் துறைகளுக்கும் தெளிவான, நிலையான பரந்த அடிப்படையிலான கொள்கைகள் என்பவற்றின் ஊடாக தற்போதுள்ள மற்றும் எதிர்கால பங்குதாரர் அனைவருக்கும் பரந்த அடிப்படையிலான உதவிகள் வழங்குதல் மீது கவனம் செலுத்தவேண்டிய அதேவேளை தனியார் துறைக்கு சாதகமான சூழலை உருவாக்குவதற்கு நிச்சயப்படுத்திக் கொள்ளவேண்டும். தயாரிப்புத் துறை அபிவிருத்தி உபாயமானது ஒருமுகப்படுத்தப்பட்டதாகக் காணப்பட வேண்டியதுடன் பாதிக்கக்கூடிய எண்ணக்கருக்கள் அனைத்தையும் உள்ளடக்கவேண்டும். இந்த உபாயத்தின் வெற்றியென்பது, முன்மொழியப்பட்ட நடவடிக்கைகளின் உரிய நேரத்திலான நடைமுறைபடுத்தலால் நிர்ணயிக்கப்படும்.

பங்களிப்பை வழங்குமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது. எனினும், நாடொன்று உயர் நடுத்தர வருமானம் பெறும் நாடு என்ற வகையினை அடைந்து மூன்று வருடங்கள் அந்த நிலைமையில் காணப்படுமாயின் ஜி.எஸ்.பி+ வரிச் சலுகையானது நிறுத்திவிடப்படும். எறிவு செய்யப்பட்ட தற்போதைய வளர்ச்சி வீதங்களின் அடிப்படையில் இலங்கையானது நடுத்தர காலத்தில் இந்த நிலையை அடைந்துவிடக் கூடும். ஆகையால், சிறியதொரு காலப்பகுதிக்குள் ஜி.எஸ்.பி+ இன் முழுமையான சாத்தியமான நன்மைகளை அனுபவித்துக் கொள்வதற்கு கைத்தொழிலானது தயார்நிலையில் காணப்படவேண்டியது முக்கியமானதாகும். அதேநேரம், உள்நாட்டு ஆடை ஏற்றுமதியாளர்களுக்கு உதவும் வகையில் தற்போது காணப்படுகின்ற உற்பத்திக்கான ஏற்றுமதி

2

வரைபடம் 2.6
**தொழிற்சாலைக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணின் உள்ளடக்கம் - 2016**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

சேருமிடங்களை பண்முகப்படுத்துதல் தொடர்பில் சாத்தியமான பங்கு நாடுகளுடன் வர்த்தக உடன்படிக்கைகளின் ஓர் விரிவாக்கத்தை மேற்கொள்ளவேண்டியது அவசியமானதாகும். மேலும், கைத்தொழில் முகங்கொடுத்துள்ள ஊழியர்களின் பற்றாக்குறை பிரச்சனையை தீர்க்கும் வகையில் குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் போன்ற நெடுந்தொலைவிலுள்ள பிரதேசங்களில் கைத்தொழில் மீள் அமைவிடங்களை ஊக்குவித்தலானது அவசியமானதொன்றாகும். மேலும், இலங்கையின் நிலையானது உயர்தரம் வாய்ந்த நிரம்பலாளர் என்ற வகையில் இலங்கையானது தளபாடங்கள் உட்கட்டமைப்பு, புவியியல் அமைவிடம் மற்றும் உயர் திறனுடைய ஊழியப்படை போன்றவற்றின் நன்மைகளை கருத்திற்கொண்டு அதனை பிராந்தியத்தில் ஆடை வர்த்தக மையமாக நிலைப்படுத்துவதற்கு கருத்திற்கொள்ளல் வேண்டும்.

**தோல் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்களின் உற்பத்தி 2016இல் 23.8 சதவீத சாதகமான வளர்ச்சியை காட்டியிருந்தது.** இத்துணைத் துறையானது உள்நாட்டுச் சந்தையில் பாதணிகள் மற்றும் முடிவுறுத்தப்பட்ட தோல் உற்பத்திகள் என்பனவற்றுக்கான புதுப்பிக்கப்பட்ட கேள்வி என்பனவற்றால் நேர்கணியமாக பாதித்திருந்ததுடன் அதனூடாக 2014 இலிருந்து அறிக்கையிடப்பட்ட எதிர்க்கணிய செயலாற்றத்தை மீள் திருப்பியிருந்தது.

**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன சுத்திகரிப்பின் உற்பத்தியை மாத்திரம் வெளிப்படுத்துகின்ற சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்தி துணைத் துறையானது 2016 காலப்பகுதியில் 2.1 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** 2015இல் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு காரணங்களுக்காக பல வாரங்களால் நிறுத்திவைக்கப்பட்டிருந்த சுத்திகரிப்பு செயன்முறையுடன் 2016 காலப்பகுதியில் எவ்விதமான தடங்களும் இன்றி தொடர்ச்சியான சுத்திகரிப்பு செயன்முறையானது இவ்வதிகரிப்பிற்கு பங்களித்திருந்தது. 2016 சனவரியில் ஐக்கிய அமெரிக்காவால் ஈரான் மீது விதிக்கப்பட்டிருந்த வர்த்தக கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதுடன் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் சுத்திகரிப்பானது ஈரானிய மசகு எண்ணையை சுத்திகரிப்பதற்கு மிகவும் பொருத்தமானதாக காணப்படுவதன் காரணத்தால் 2017ஆம் ஆண்டில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் சுத்திகரிப்பு செயன்முறையின் வினைத்திறனானது அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்பட்டுள்ளது.


**இரசாயண மற்றும் இரசாயண உற்பத்திகள் துணைத் துறையின் வெளியீடு குறைந்தளவான வளமாக்கி உற்பத்திகளின் முக்கிய காரணத்தால் 2016இல் 12.4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது.** ஆண்டின் இரண்டாவது அரைவாசிப் பகுதியில் வேளாண்மை நடவடிக்கைகளை பாதித்திருந்த வரட்சி நிலைமையுடன் இணைந்ததான 2016இன் ஆரம்பத்தில் வளமாக்கி மானிய நிகழ்ச்சித்திட்டத்தின் மீள் திருத்தத்தின் காரணத்தால் ஏற்பட்ட குறைந்தளவான கேள்வி என்பனவே குறைந்தளவான வளமாக்கி உற்பத்திகளுக்கான முக்கிய காரணங்களாகும். எனினும், கட்டுமான நடவடிக்கைகளில் இருந்தான அதிகரித்த கேள்வியால் தூண்டப்பட்ட அதிகரித்த நிறப்பூச்சு மற்றும் மரப்பூச்சு துணைத்துறையின் வெளியீடு ஆண்டு காலப்பகுதியில் இரசாயனம் மற்றும் இரசாயன உற்பத்திகளின் துணைத்துறையின் வளர்ச்சிக்கு நேர்க்கணியமாக பங்களித்திருந்தன.

**தொழிற்சாலை கைத்தொழில் உற்பத்தி சுட்டெண்ணில் மூன்றாவது பெரிய துணைத் துறையாக காணப்படுகின்ற இறப்பர் மற்றும் பிளாத்திக் உற்பத்திகளின் துணைத் துறையானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து 2016 காலப்பகுதி முழுவதும் ஆரோக்கியமான செயலாற்றத்தை காட்டியிருந்தது.** துணைத் துறையானது 2015இல் அவதானிக்கப்பட்ட 2.2 சதவீதம் கொண்ட சுருக்கத்திலிருந்து கணிசமானளவு முன்னேற்றமடைந்ததுடன் 5.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியை அறிக்கையிட்டிருந்தது. கெட்டியான டயர் மற்றும் விமானங்களுக்கான டயர் என்பனவற்றுக்கான ஐக்கிய அமெரிக்கா, ஜேர்மனி, பிரேசில் போன்ற முக்கிய நாடுகளில் இருந்தான அதிகரித்த ஏற்றுமதி கேள்வி இவ்வளர்ச்சிக்கு பங்களித்திருந்தது. ஐக்கிய அமெரிக்காவிற்கான இலங்கையின் இறப்பர் ஏற்றுமதி தொடர்பில் 2016இல் விதிக்கப்பட்ட எதிரீட்டு தீர்வையானது ஏற்றுமதி அளவுகளில் கணிசமான தாக்கத்தை உண்டுபண்ணமாட்டாது என எதிர்பார்க்கப்பட்டுள்ளது. ஏனெனில் எதிரீட்டு தீர்வையானது விதிக்கப்பட்டிருப்பினும் கைத்தொழிலானது போட்டியினை மேற்கொள்வதற்கான

தற்போதைய இலாப எல்லையானது போதுமானதாகும். டயர்களுக்கான உலகளாவிய கேள்வியானது எரிபொருள் வினைத்திறன் தொடர்பில் அதிகரித்த கவனத்துடன் உந்தப்படும் என எதிர்பார்க்கப்பட்டுள்ளதுடன் மிகுந்த - எரிபொருள் வினைத்திறன் டயர்களுக்கான அதிகரித்த கேள்விக்கு இட்டுச்செல்லும். அதன் விளைவாக, டயர் தொழில்நுட்பம் தொடர்பில் ஆய்வு மற்றும் அபிவிருத்தி மற்றும் புத்தாக்கம் மீதான அதிகரித்த முதலீடானது உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளது. எனினும், எதிரீட்டு தீர்வையானது இலங்கையில் புதிய டயர் தொழிற்சாலைகளை நிறுவுவதற்கு விருப்பம் கொண்டுள்ள புதிய முதலீட்டாளர்களை ஊக்கமிழக்கச் செய்தல்கூடும். ஆகையால் இத்தகைய தோற்றம் பெற்றுவரும் நாடுகளில் இருந்தான வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் உள்நாட்டு ரயர் தயாரிப்பாளர்களுக்கு சாத்தியப்பாடொன்று காணப்படுகின்றது. ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பா போன்ற சந்தைகளுக்கான அதிகரித்த ஏற்றுமதிகளுடன் இறப்பர் கையுறைகளின் தயாரிப்பும் கணிசமாக விரிவாக்கமடைந்திருந்ததுடன் இறப்பர் மற்றும் பிளாத்திக்கு துணைத் துறையின் வளர்ச்சிக்கு ஆதரவு வழங்கியிருந்தது.

**உலோகமல்லா ஏனைய கனிய உற்பத்திகள் துணைத் துறையானது 2016 காலப்பகுதியிலும் அதனது வளர்ச்சி உத்வேகத்தைத் தொடர்ந்ததுடன் 11.1 சதவீத வளர்ச்சி வீதத்தையும் பதிவு செய்திருந்தது.** கட்டுமானத் துறையின் அதிகரித்த கேள்வியின் தூண்டுதலால் சீமெந்து உற்பத்தியின் வளர்ச்சியயானது இச்செயலாற்றத்தை நோக்கியமான பிரதான பங்களிப்பு காரணியாகும். மேலும் கூரைத்தகடுகள் மற்றும் களிமண்ணிலான ஓடுகள் என்பனவற்றின் தயாரிப்பும் 2016இல் கணிசமானளவு விரிவாக்கப்பட்டிருந்தன. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கேள்வியின் முன்னேற்றங்களுடன் ஆய்வுக்குரிய காலப்பகுதியில் பீங்கான் மற்றும ஏனைய இரசாயன

வரைபடம் 2.7
**தொழிற்சாலை கைத்தொழில் உற்பத்தி சுட்டெண்ணின் முக்கிய பிரிவுகளின் ஆண்டுக்காண்டு வளர்ச்சி**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

உற்பத்திகளின் தயாரிப்பு சிறிதளவால் அதிகரித்திருந்தது. எனினும், இயந்திரங்களில் புதுப்பித்தல் காலப்பகுதியில் இலங்கையில் கண்ணாடியை உற்பத்தி செய்கின்ற தனியான தொழிற்சாலைகளில் தற்காலிகமான இயலளவு வீழ்ச்சியின் காரணமாக கண்ணாடி உற்பத்திகளின் தயாரிப்பானது வீழ்ச்சியடைந்தது. உணவு, பானங்கள் மற்றும் மருந்தாக்கங்கள் என்பன தொடர்பில் கண்ணாடி பொதியிடல் கைத்தொழிலானது அண்மைய ஆண்டுகளில் அடையப்பெற்றிருந்த வலிமையான வளர்ச்சி உத்வேகத்தை தொடருமென எதிர்பார்க்கப்பட்டுள்ள போதிலும் இக்கைத்தொழிலின் உற்பத்தியுடன் தொடர்புடைய உயர்ந்தளவான எரிபொருள் செலவினமானது உள்நாட்டு மற்றும் உலகச் சந்தையில் வளர்ச்சியடைந்துசெல்லும் கேள்வியின் நன்மைகளை பெற்றுக்கொள்வதற்கு இலங்கையின் இயலுமையை தடுத்திருந்தது.

**அடிப்படை உலோக உற்பத்திகள் துணைத் துறையானது 2015 உடன் ஒப்பிடுகையில் 2016 காலப்பகுதியில் 28.7 சதவீத வளர்ச்சியை பதிவுசெய்ததன் ஊடாக சாதகமான வளர்ச்சியை காட்டியிருந்தது.** கட்டுமானத் துறையிலிருந்தான உயர்ந்தளவான கேள்வி இத் துணைத்துறையின் அதிகரித்த வெளியீட்டிற்கு இட்டுச் சென்றிருந்தது. கட்டுமான கைத்தொழில் துறையானது அதனது வளர்ச்சி உத்வேகத்தை தொடருமென எதிர்பார்த்துள்ளதுடன் அதன் விளைவாக அடிப்படை உலோக துணைத்துறையும் எதிர்காலத்தில் வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

**கப்பல் கட்டுமானம் மற்றும் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் என்பனவற்றை பிரதானமாக உள்ளடக்கிய உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் துணைத்துறை 33.6 சதவீதம் கொண்ட சுருக்கத்தை பதிவுசெய்திருந்தது.** மசகு எண்ணெய் விலைகளின் வீழ்ச்சியின் காரணமாக கரைகடந்த எண்ணெய் அகழ்வு நடவடிக்கைகள் வீழ்ச்சியடைந்ததுடன் எண்ணெய் அகழ்வு கப்பல்களுக்கான குறைந்த கேள்விகளுக்கு இட்டுச் சென்றிருந்தது. இது ஆண்டு காலப்பகுதியில் கப்பல் கட்டுமான நடவடிக்கைகளை பாதித்திருக்கக்கூடும். எனினும், இலங்கையின் தந்திரோபாய அமைவிடம், உயர்ந்தளவில் பயிற்றப்பட்ட திறன்வாய்ந்த ஊழியப்படை மற்றும் வேலையாட்களின் தரம் என்பவற்றின் காரணமாக ஆசிய பிராந்தியத்தில் கப்பல் தயாரிப்பிற்கான ஒரு மையமாக மாற்றம் பெறுவதற்கு அதிகளவான சாத்தியப்பாட்டை கொண்டுள்ளது.

**மின்சார கருவிகள் உபதுறையானது 2016 காலப்பகுதியில் அண்ணளவாக 9.3 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது.** இத்துணைத் துறையின் கட்டுப்படுத்தப்பட்ட செயலாற்றமானது எதியோப்பியா, உகன்டா மற்றும் நேபாளம் போன்ற முக்கிய ஏற்றுமதி சேருமிடங்களில் இருந்தான மின்மாற்றிகளுக்கான

2

கேள்வியின் வீழ்ச்சியின் காரணமாக ஏற்பட்டிருந்தது. கைத்தொழிலானது அதிகளவு பன்முகப்படுத்தப்பட்டுள்ளதுடன் உயர் மற்றும் கீழான தொழில்நுட்பம் வாய்ந்த உற்பத்திகளின் பாரிய வீச்சை தயார் செய்கின்றது. எனினும், உற்பத்தியுடன் இணைந்ததான உயர் எரிபொருள் செலவுகள் தரப்பட்ட நிலையில், இலத்திரனியல் கருவிகள் தொடர்பில் உலகளாவிய செலவு தலைமையாக விளங்குகின்ற சீனா மற்றும் தாய்வான் மற்றும் வியட்நாம் போன்ற நாடுகளில் இருந்து கடுமையான போட்டியை இலங்கையின் ஏற்றுமதி முகங்கொடுத்துள்ளது. எனினும், புதிய பன்னாட்டு சந்தைகளை அணுகுதல் மற்றும் உற்பத்திக் கூறுகளை பன்முகப்படுத்தல் போன்றவை தொடர்பில் கைத்தொழிலால் எடுக்கப்பட்ட வழிமுறைகள் எதிர்காலத்தில் கைத்தொழிலை ஊக்குவிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## கைத்தொழில் கொள்கைகள் மற்றும் நிறுவன ரீதியான உதவி

**அரசாங்கம் அதனது ஏற்றுமதியை நோக்கியதான கைத்தொழில் தந்திரோபாயங்களுக்கு இணங்கிச்செல்லும் வகையில் உலகளாவிய பெறுமதி சங்கிலியுடன் மேலும் ஒருங்கிணைந்து செல்வதற்கு அதனது போட்டித்தன்மையை உயர்த்துவதன் ஊடாக பிராந்தியத்தில் ஏற்றுமதியால் வழிநடாத்தப்பட்ட பொருளாதார மையத்தை கொண்ட நாடு என்ற வகையில் இலங்கையை மாற்றும் நோக்கில் பல்வேறுபட்ட கொள்கை நடவடிக்கைகளின் அமுலாக்கலின் ஊடாக கைத்தொழில் துறையின் வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி என்பவற்றுக்கு தொடர்ச்சியாக ஆதரவு வழங்கியது.** கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு பிராந்திய மட்டங்களில் முதலீட்டை மேம்படுத்தல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல் என்பனவற்றின் ஊடாக பிராந்திய கைத்தொழில் மயமாக்களுக்கு தொடர்ச்சியாக வசதியளித்திருந்தது. அதன்படி, கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சானது நாடு முழுவதிலும் 18 மாவட்டங்களில் 32 கைத்தொழில் பேட்டைகளிலான உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற்கொண்டது. மேலும், அமைச்சானது ரைகமவில் புதிய கைத்தொழில் தோட்டம் என்பது தொடர்பில் ஆரம்ப வேலைகளை ஆரம்பித்திருக்கிறது. திருகோணமலை (கட்டம் II) மற்றும் மட்டக்களப்பு கைத்தொழில் தோட்டங்களுடன் தொடர்புடைய உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளின் பெரும்பாலானவை 2016இல் நிறைவு செய்யப்பட்டுள்ளன. மன்னார் கைத்தொழில் தோட்டம் தொடர்பிலான அபிவிருத்தி நடவடிக்கைகள் நிறைவுசெய்யப்பட்டுள்ளதுடன் அவசியமான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதுடன் வெலிஓயா கைத்தொழில் தோட்டமானது மேலும் முன்னேற்றமடைந்தது.

**தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகார சபையானது குறிப்பாக இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளின் அபிவிருத்தி, வளர்ச்சி மற்றும் போட்டித் தன்மை என்பவற்றிற்கு தொடர்ச்சியாக ஆதரவினையும், வசதிபடுத்தலினையும் வழங்கியது.** மாவட்ட மற்றும் பிரதேச செயலக மட்டங்களில் காணப்படுகின்ற தொழில் முயற்சியாளர்களுக்கு வியாபார அபிவிருத்தி பணிகளை வழங்குவதற்காக பொருத்தமான பொறிமுறை ஒன்றை உருவாக்குவதற்கு மாவட்ட மற்றும் பிராந்திய தொழில் முயற்சி சம்மேளங்களின் நடவடிக்கைகள் மேலும் தொடரப்பட்டன. நிரம்பலார்கள் என்றவகையில் சிறப்பு அங்காடி சங்கிலிகளுடான சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாண்மைகளை ஒருங்கிணைக்கும் நோக்கில் தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகார சபையானது சந்தை இணைப்பு நிகழ்ச்சித்திட்டங்களுடன் தெரிவு செய்யப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு தொழில்நுட்ப ரீதியான பயிற்சிகளை தொடர்ச்சியாக வழங்கியிருந்தது. பிராந்திய தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம், மகளிர் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் மற்றும் உபாதிதாரி விவசாய உதாணய நிகழ்ச்சித்திட்டம் என்பனவற்றினூடாக பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதனூடாக தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகார சபை தொழில் முயற்சியாளர்களுக்கு இடையில் இயவளவைக் கட்டியெழுப்புவதற்கு தொடர்ச்சியாக உதவியிருந்தது. மேலும் இலங்கை வயம்ப பல்கலைக்கழகம் மற்றும் தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை என்பவற்றின் இணைந்த செயற்றிட்டமாக மாகந்துறையில் அடைகாப்புப் கருவி மற்றும் தொழில்நுட்ப பரிமாற்றல் மத்திய நிலையம் ஒன்றை நிறுவுவதற்கு எதிர்பார்த்துள்ளது. இலங்கை வயம்ப பல்கலைக்கழகம், ஆய்வு நிறுவனங்கள் என்பவற்றின் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் அப்பிரதேசங்களில் காணப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட புதுமையான வியாபார எண்ணங்களுடன் இணைந்தவகையில் அடைக்காப்புக் கருவி மற்றும் தொழில்நுட்ப பரிமாற்றல் மத்திய நிலையமானது தேவையான இயந்திரங்கள் மற்றும் கருவிகள் என்பவற்றுடன் அதனை ஆரம்பிப்பதற்கான வசதியினை ஏற்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளது.

**ஏற்றுமதி அபிவிருத்தி சபையானது குறிப்பாக ஆடைகள், ஆபரணங்கள், இறப்பரை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகள், பாதனிகள் மற்றும் தோல் உற்பத்திகள் போன்ற உள்நாட்டுக் கைத்தொழில் உற்பத்திகளை பன்னாட்டுச் சந்தையில் அவற்றின் போட்டித்தன்மையை மேம்படுத்தும் நோக்கில்**

**வர்த்தக கண்காட்சிகள், ஏற்றுமதியாளர்களின் சம்மேளனங்கள், தொழில்நுட்ப மற்றும் நிதியியல் உதவி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வர்த்தக பிரதிநிதிகளை அனுப்புதல் போன்றவற்றை தொடர்ச்சியாக ஒழுங்குபடுத்தியிருந்தது.** ஏற்றுமதி அபிவிருத்தி சபையானது எதிர்காலத்தில் இலங்கையின் உற்பத்திகளை மேம்படுத்தும் நோக்கில் புதிய உற்பத்திகள் மற்றும் புதிய சந்தைகளை அடையாளம் காண்பதற்காக பல்வேறுபட்ட பன்னாட்டு பங்குதாரர்களுடன் தற்பொழுது பணிபுரிந்து வருகின்றது.

**வரவு செலவு திட்டம் 2016 அறிமுகப்படுத்தப்பட்ட பல்வேறுபட்ட கொள்கை முன்மொழிவுகள் ஆண்டுகாலப்பகுதியில் அமுல்படுத்தப்பட்டிருந்தன.** பிராந்திய கைத்தொழில் மயமாக்களை மேம்படுத்தும் நோக்கில் கைத்தொழில் மட்டும் வர்த்தக அமைச்சானது ரய்கமவில் புதியதொரு கைத்தொழில் தோட்டத்தை நிறுவுதல் தொடர்பிலான அதனது ஆரம்ப வேலையை ஆரம்பித்திருந்தது. மேலும் குறிப்பாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான ஒப்பந்தகாரர்களை ஊக்கிவிக்கும் நோக்குடனும் கட்டடவாக்கம் கைத்தொழிலை மேம்படுத்தும் வகையிலும் 2016ஆம் ஆண்டு காலப்பகுதியில் கட்டுமான கைத்தொழிலுக்கான உத்தரவாதம் கொடுக்கப்பட்ட நிதித் தீர்வையானது நீக்கப்பட்டது. மேலும், 2017 காலப்பகுதியில் விஞ்ஞானம் தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க நிகழ்ச்சித்திட்டம் மற்றும் தேசிய தொனிப்பொருள் ஆய்வு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் தேசிய விஞ்ஞான மன்றத்தின் தொழில்நுட்ப உதவி நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றவற்றை இணைக்கின்றதொரு இடமான புத்தாக்கல் வேகப்படுத்தல் ஒன்றை நிறுவுவதற்கு குறிப்பிட்ட சில ஆரம்பகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

**பொருளாதாரத்திற்கு கைத்தொழில் துறையின் பங்களிப்பு மற்றும் உள்நாட்டு பெறுமதி சேர்ப்புக்களை மேம்படுத்துவதற்கும் வரவுசெலவுத்திட்டம் 2017 பல்வேறுபட்ட கொள்கை முன்மொழிவுகளை உள்ளடக்கியிருந்தது.** சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளின் தேர்ச்சி மற்றும் உற்பத்தித்திறன் முன்னேற்றம் என்பன வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுகளின் முக்கிய விடயமாக காணப்பட்டன. பல்வேறுபட்ட கைத்தொழில்களில் திறன் பற்றாக்குறையை நீக்குவதற்கு அரசினால் நடைமுறைப்படுத்தப்படும் தொழிற்பயிற்சி நிறுவனங்கயின் ஊடாக அவசியமான தொழிற்பயிற்சியை வழங்கும் நோக்கில் புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டமொன்று முன்மொழியப்பட்டிருந்தது. மேலும், 10,000 இளைஞர்களுக்கு 3 மாத வாழ்க்கைச் செலவு கொடுப்பனவொன்று முன்மொழியப்பட்ட அதேவேளை ஆடைகள், சுகாதார பராமரிப்பு மற்றும் கட்டுமான கைத்தொழில்கள் போன்றவற்றில் தனியார் துறையினால் பயிற்சியளிக்கப்பட்டன. பல அடையாளப்படுத்தப்பட்ட கைத் தொழில்களின் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள் அவற்றின் வியாபாரத்தை விரிவாக்குவதற்கு கொடுகடன் உத்தரவாத நிகழ்ச்சித்திட்டம் மற்றும் மானியம் வழங்கப்பட்ட வட்டி வீதங்கள் என்பன வழங்கப்படவுள்ளன. வியாபாரங்களின் உற்பத்தித்திறனை மேலும் அதிகரிப்பதற்கு உயர் தொழில்நுட்பம் வாய்ந்த தன்னிச்சையான பொறிகள் மற்றும் கருவிகள் என்பவற்றின் இறக்குமதி மீது 75 சதவீதம் கொண்ட துறைமுகம் மற்றும் வா ர்தி அபிவிருத்தி தீர்வையானது முன்மொழியப்பட்டிருந்தது. வகைப்படுத்தல், சாயமிடல் மற்றும் முடிவடையும் தருவாயில் உள்ள அலகுகள் என்பவற்றை உள்ளடக்கும் வகையில் ஆடைகள் தொகுதியொன்றை உருவாக்குவதற்கும் முன்மொழியப்பட்டிருந்ததுடன் இத்தகைய வியாபார முயற்சிகளிலான முதலீடுகளுக்கு முதலீட்டு நிவாரணங்களை வழங்குவதன் ஊடாக அரசாங்கமானது உதவிசெய்வதற்கு எதிர்பார்த்துள்ளது. கட்டுமான கைத்தொழிலை மேலும் ஊக்குவிப்பதற்கு முன் உருவமைக்கப்பட்ட கட்டமைப்புக்கள் மீது பிரயோகிக்கத்தக்கதான 25 சதவீதம் கொண்ட செஸ் இன் நீக்கமும் முன்மொழியப்பட்டிருந்தது.

**கைத்தொழில் துறையின் உற்பத்தித்திறன் அதிகரிப்பை நோக்கியதான விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் என்பவற்றிலிருந்தான பங்களிப்பை உயர்த்துவதற்கு வரவுசெலவுத் திட்டம் 2017இல் பல்வேறு முன்மொழிவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.** கைத்தொழில் துறைக்குள் தொழில்நுட்பத்தின் உட்புகுதலானது உயர் பெறுமதி சேர்க்கப்பட்ட பொருட்களின் தயாரிப்பதற்கு வழிநடத்தப்பட்டிருந்ததுடன் உயர் வருமான மட்டங்களிற்கும் இட்டுச் சென்றிருந்தது. இதன்படி, வர்த்தக மயப்படுத்தல் மற்றும் இறுதிக்கட்ட நிதிப்படுத்தல் என்பவற்றுக்கு உதவும் நோக்கில் புத்தாக்கம் வேகப்படுத்தல் நிதியமானது அதனது பணியை தொடருவதற்கு நிதியங்களை ஒதுக்கீடு செய்வதன் ஊடாக மேலும் பலப்படுத்தப்பட்டது. முக்கியமாக மருந்தாக்கள் கைத்தொழில் மற்றும் மரபு ரேகை போன்றவற்றில் ஈடுபட்டுள்ள கம்பனிகளுக்கு வசதிகளை வழங்குகின்ற உயர் தொழில்நுட்பவியல் புத்தாக்க பூங்கா ஒன்று அரச - தனியார் பங்குடமையின் அடிப்படையில் நிறுவுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. மின்னியந்திரங்களில் ஆரம்பித்த கம்பனிகளுக்கு உதவுகின்ற உயர் மின்னணு வடிவமைப்பிற்கான மத்திய நிலையம், நனோ தொழில்நுட்பத்தின் இலங்கை நிறுவகம், ரொபோ பிரயோகத்தலின் சிறப்பு மத்திய நிலையம் என்பன நிதியங்களின் ஒதுக்கீடு ஊடாக மேலும் பலப்படுத்தப்பட்டன. வரி ஊக்குவிப்புக்களின் ஊடாக, ரொபோக்கள், சைப்னெடிக்ஸ், மின்னனு கைத்தொழில்களுக்கு உதவுவதற்கு மேலும் முன்மொழியப்பட்டது. சர்வதேச

2

நியமங்களுக்கு ஏற்ற வகையில் 2017 மாச்சு மாதத்தில் தேசிய விஞ்ஞான மத்திய நிலையமொன்றை நிறுவுவதற்கு அமைச்சர்களின் அமைச்சரவையானது அனுமதி வழங்கியிருந்ததுடன் ஜேறாமாகமவில் உள்ள பிட்டிபான என்ற இடத்தில் ஏழு ஏக்கர் கொண்ட நிலப்பரப்பானது ஏற்கனவே பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. இதனை அடைந்து கொள்வதற்கு பொருத்தமான முகவர் நிலையங்களில் இருந்து ஆலோசனைப் பணிகள், தொழில்நுட்பவியல் மற்றும் நிதியியல் உதவிகள் என்பவற்றைப் பெற்றுக்கொள்வதற்கானதொரு அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தை செயற்குழுவும் ஒப்புதலளிக்கப்பட்டது.

**பொருளாதரத்தில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சி துறையின் பங்களிப்பை அடையாளம் கண்டதுடன் நிதியத்திற்கான சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளின் அனுகும் தன்மையை மேம்படுத்துவதற்கு 2017 வரவுசெலவுத் திட்டமானது வங்கிகள் அவற்றின் மொத்த கடன் சொத்துப்பட்டியலில் குறைந்தது 10 சதவீதமானது சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும் என்ற வேண்டுகோளை கொண்ட முன்மொழிவையும் உள்ளடக்கியிருந்தது.** அதன்படி, அடையாளம் காணப்பட்ட வெவ்வேறுபட்ட துறைகளுக்கு கொடுகடனை பகிர்ந்தளிப்பதற்காக வரவுசெலவுத் திட்டம் 2017இல் ஒப்புதலளிக்கப்பட்ட தேசிய கொள்கையை அமுல்படுத்தும் நோக்கில் மத்திய வங்கியானது 2017 பெப்புருவரியில் அனைத்து அனுமதிபெற்ற வர்த்தக வங்கிகளையும் பொருத்தமான வழிமுறைகளை எடுக்குமாறு வேண்டியிருந்தது. வேளாண்மை, மீன்பிடி, கால்நடை வளர்ப்பு, மலர்ச்செடி வளர்ப்பு, தோட்டக்கலை, இலேசான பொறியியல், அச்சிடல், சுற்றுலா, கைவினைப் பொருட்கள் மற்றும் ஆடைத்துறைகள் போன்றவற்றில் குறிப்பாக ஈடுபட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கு உதவும் வகையில் சலுகைக் கடன் நிகழ்ச்சித்திட்டமொன்றும் முன்மொழியப்பட்டது. மேலும், சுயகைத்தொழில்கள் மற்றும் கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்காகவும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கு உதவுவதற்கும் 'சுவசக்தி தேசிய கடன் நிகழ்ச்சித்திட்டம' என்ற சிறப்புவாய்ந்த கடன் நிகழ்ச்சித்திட்டமொன்றை இலங்கை வங்கியானது அறிமுகம் செய்திருந்தது.

**வர்த்தக சங்கங்கள் மற்றும் கழகங்கள் என்பன இயலளவை கட்டியெழுப்பும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், வர்த்தக கண்காட்சிகள் மற்றும் வர்த்தக பிரதிநிதித்துவம் என்பனவற்றின் ஊடாக கைத்தொழில் துறையின் அபிவிருத்திக்கு தொடர்ச்சியாக உதவியிருந்தன.** இணைந்த ஆடைகள் கழகத்தின் சம்மேளமானது மும்பாயின் வோல்டெக்ஸ் எக்சிபின் மற்றும் புரமோஷன் பிறைவட் லிமிடெட் என்பதனுடன் இணைந்து நூல், துணி, புடவை துணைப் பொருட்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பணிகள் என்பவற்றை மட்டும் கவனம் செலுத்தியிருந்த தெற்காசியாவின் சர்வதேச கண்காட்சியானது 'இன்டெக்ஸ் சவுத் ஏசியா 2016' இனை ஒழுங்குசெய்திருந்தது. துணி மற்றும் ஏனைய துணைப் பொருட்கள் என்பவற்றுக்கான புதிய மூல வழிமுறைகளை வழங்குவதன் ஊடாக கைத்தொழிலுக்கு இது நன்மையளித்திருந்தது. சமூக மற்றும் ஊழியர்களின் பணவீக்கம் என்பவற்றுக்கான சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அளவீட்டு கருவியொன்றை அறிமுகம் செய்வதற்கு நிலைத்துநிற்கும் ஆடைகள் கூட்டணியினால் ஆரம்பிக்கப்பட்ட சமூக மற்றும் ஊழியர்களின் தொடர்புடை செயற்றிட்டமொன்றில் இணைந்த ஆடைகள் கழகத்தின் சம்மேளனமும் பங்குபற்றியிருந்தது. இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையுடன் இணைந்து சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளின் ஆடைகள் துறை கம்பனிகள் அவற்றின் இணங்குவிப்பு நியமங்கள் தொடர்பில் முன்னேற்றத்தை மேற்கொள்வதற்கு இணைந்த ஆடைகள் கழகத்தின் சம்மேளனமானது உதவிளை வழங்கியிருந்தது. மேலும், கைத்தொழின் போட்டித்தன்மையை மேலும் முன்னேற்றும் நோக்கில் ஆடைகள் மற்றும் புடவைகள் என்பவற்றுக்கான இலங்கை நிறுவகத்துடன் சேர்ந்து இணைந்த ஆடைகள் கழகத்தின் சம்மேளனமானது இலங்கையின் ஆடைகள் கைத்தொழிலுக்கு புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதற்கு உதவியிருந்தது. மேலும், கைத்தொழில்களுக்கான இலங்கை தேசிய சங்கம், வர்த்தக சங்கம் மற்றும் இலங்கை கைத்தொழில் சம்மேளனம், தேசிய வர்த்தகச் சங்கம் என்பன இலங்கையில் வர்த்தகம் மற்றும் முதலீடுகளை மேம்படுத்துவதற்கு பல்வேறுபட்ட வர்த்தக பிரதிநிதித்துவம், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வர்த்தக மாநாடு போன்றவற்றுக்கு தொடர்ச்சியாக உதவியிருந்தது.

## மின்வலு, நீர் மற்றும் கழிவுகளைச் சுத்திகரித்தல்

**மின்வலு, நீர் மற்றும் கழிவுகளை சுத்திகரித்தல் செயற்பாடுகளின் பெறுமதிகூட்டலானது 2015இன் 8.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இல் 10.0 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** இத்துறையின் மிகமுக்கிய பங்களிப்பாளராக விளங்கும் மின்வலு, வாயு, நீராவி மற்றும் குளிரூட்டி வழங்கல் செயற்பாடுகள் பெறுமதிகூட்டல் நியதிகளில் 2015இன் 5.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இல் 8.4 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தன. இவ்வளர்ச்சியானது, மின்வலு உருவாக்கத்தில் 2015இல் பதிவுசெய்யப்பட்ட 5.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டு 8.1

சதவீத வளர்ச்சியால் பிரதிபலிக்கப்படுகிறது. நீர்மின்வலு உருவாக்கமானது 2016இன் பெரும்பாலான காலங்களில் நிலவிய நீண்ட பாதகமான வரட்சி நிலைமைகளால் பாதிக்கப்பட்டு 2015இன் 35.0 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இல் 29.0 சதவீதத்தால் சுருக்கமடைந்தது. இதேவேளை 2015இன் 38.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இல் 13.6 சதவீதத்தினால் நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட மின்வலு உருவாக்கம் வளர்ச்சியடைந்திருக்கையில் எரிபொருள் எண்ணெய்யை அடிப்படையாகக் கொண்ட மின்வலு உருவாக்கம் 2015இன் 47.1 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இல் 96.1 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து குறிப்பிடத்தக்க விரிவாக்கத்தை காட்டியது. மேலும், நீர்சேகரிப்பு, சுத்திகரித்தல் மற்றும் வழங்கல் செயற்பாடுகளின் பெறுமதிகூட்டல் 2015இன் 4.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இல் 7.9 சதவீதத்தால் அதிகரித்தது. தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் பகிர்ந்தளிக்கப்பட்ட நீரின் அலகுகள் 2015இல் பதிவுசெய்யப்பட்ட 5.7 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இல் 12.0 சதவீதம் கொண்ட அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது. தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையில் நுகர்வோர்களின் மொத்த கணக்குகளின் எண்ணிக்கை 2015இல் பதிவுசெய்யப்பட்ட 6.6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 7.1 சதவீதத்தால் 2016இல் அதிகரித்து நீருக்கான அதிகரித்த தொடர்ச்சியான கேள்வியை வெளிப்படுத்தியிருந்தது. இதேவேளை, கழிவு நீர் அகற்றல், கழிவுகளைச் சுத்திகரித்தல் மற்றும் வெளியேற்றச் செயற்பாடுகள் 2015இன் 24.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2016இல் பெறுமதிகூட்டல் நியதிகளில் 17.8 சதவீத குறிப்பிடத்தக்க வளர்ச்சிப் பதிவுசெய்தன.

## கட்டடவாக்கம்

**கட்டடவாக்கச் செயற்பாடுகள் பெறுமதிகூட்டல் இவ்வாண்டுப்பகுதியில் மீட்சியடைந்து 2015இன் 2.7 சதவீத சுருக்கத்திலிருந்து 2016இல் 14.9 சதவீத குறிப்பிடத்தக்க வளர்ச்சியினைப் பதிவுசெய்தது.** கொழும்பு பன்னாட்டு நிதியியல் நகரம், தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் நீட்டல், கொழும்பு வெளிச்சுற்று வட்ட நெடுஞ்சாலையின் 3ஆம் கட்டச் செயற்றிட்டம் மற்றும் வளர்ந்துவரும் கூட்டுறுதி தொடர்மாடி மனைகள் போன்ற பாரியளவிலான கட்டடவாக்கச் செயற்றிட்டங்கள் கட்டடவாக்கச் செயற்பாடுகளின் விரிவாக்கத்திற்குப் பங்களித்தன. இவ்வளர்ச்சியானது சீமெந்து உற்பத்தி மற்றும் சிமெந்து இறக்குமதி அதிகரிப்பில் பிரதிபலித்ததுடன் 2015இல் 5.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இல் 25.3 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்தது. இதன்படி உள்ளூர் சிமெந்து உற்பத்தியும் சிமெந்து இறக்குமதியும் 2016இல் முறையே 17.8 சதவீதத்தினாலும் மற்றும் 29.5 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்தன. இதேவேளை, கட்டடவாக்கப் பொருட்களின் இறக்குமதி அளவுச் சுட்டெண் மற்றும் மூலதன பொருட்கள் 2016இல் முறையே 22.9 சதவீதம் மற்றும் 20.0 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து கட்டடவாக்கச் செயற்பாடுகளின் சாதகமான அபிவிருத்திகளைக் சுட்டிக்காட்டின. மேலும், கட்டடவாக்கச் செயற்பாடுகளுக்காக, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் 2015இன் 36.1 சதவீத வளர்ச்சிக்கு மேலாக 2016இல் 26.9 சதவீத குறிப்பிடத்தக்க வளர்ச்சியை அடைந்தது. இதில் தனிப்பட்ட வீடமைப்பு நிர்மாணத்துக்கு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளால் வழங்கப்பட்ட கொடுகடன் 27.1 சதவீதத்தால் 2016இல் வளர்ச்சியடைந்து வீட்டுமனை கட்டடவாக்கச் செயற்பாடுகளின் அதிகரிப்பைப் பிரதிபலிக்கிறது. மேலும், கூட்டுறுதி தொடர்மாடி மனைகள் அபிவிருத்தி அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட வீட்டுமனைகளின் எண்ணிக்கை 2015இன் 29.5 சதவீத சுருக்கத்திலிருந்து மீட்சியடைந்து 2016இல் 24.5 சதவீதமாக அதிகரித்தது. கூட்டுறுதி தொடர்மாடி மனைச் சந்தையில் வளர்ந்துவரும் இப்போக்கினை அவதானித்த இலங்கை மத்திய வங்கி கட்டடவாக்க நடவடிக்கைகளின் பிந்திய அபிவிருத்திகளின் உறுதித்தன்மையினை நெருக்கமாகக் கண்காணிப்பதற்காக மாதந்தோறும் கொழும்பு மாவட்டத்திற்கான கூட்டுறுதி தொடர்மாடி மனை விலைச்சுட்டெண்ணினை தொகுக்க ஆரம்பித்தது.

## பணிகள்

**மொத்த உள்நாட்டு உற்பத்தியின் முக்கிய பங்கிற்கு கூட்டாக வகைகூறும் பணிகள் தொடர்பான பொருளாதார நடவடிக்கைகள் 2015இன் 5.7 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இல் பெறுமதிகூட்டல் நியதிகளில் 4.2 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தன.** பெரும்பான்மையான பணிச் செயற்பாடுகள் 2016இல் வளர்ச்சிக்குச் சாதகமாக பங்களித்தபோதும் அவை கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறைவான வேகத்தில் காணப்பட்டன. இப்பதிவு செய்யப்பட்ட வளர்ச்சிக்கு, நிதியியல் பணிகளின் நடவடிக்கைகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க விரிவாக்கம் களஞ்சியப்படுத்தல் நடவடிக்கைகள் உட்பட பொருட்கள் மற்றும் பயணிகளின் போக்குவரத்தில் காணப்பட்ட அபிவிருத்திகளுடன் சேர்ந்து பெருமளவிற்கு உதவியளித்தது. மேலும், மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகச் செயற்பாடுகள், பொது நிர்வாகப் பணிகள், உண்மை சொத்துக்கள், கல்வி, ஏனைய தனியாள் பணிகள், காப்புறுதி, வீட்டுடமை செயற்பாடுகள்,

தொலைத்தொடர்பூட்டல், மனித நலச் செற்பாடுகள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த செயற்பாடுகள் என்பன பணிகள் செயற்பாடுகளின் விரிவாக்கத்திற்கு சாதகமாகப் பங்களித்தன. எனினும், தொழில்சார்நிபுணத்துவப் பணிகள் இவ்வாண்டில் சுருக்கமடைந்தன. பணிகள் நடவடிக்கையில் ஏற்பட்ட வளர்ச்சியைப் பிரதிபலிக்கின்ற மாதந்தோறும் மத்திய வங்கியால் தொகுக்கப்படும் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் ஆண்டு முழுவதும் விரிவாக்கத்தைக் காட்டியது. புதிய வியாபாரங்கள், வியாபார நடவடிக்கைகள், தொழில்நிலை மற்றும் நடவடிக்கைகளுக்கான எதிர்பார்ப்பு என்பனவற்றின் துணைச்சுட்டெண்கள் இவ்வாண்டில் அதிகரித்த போதிலும், நிலுவையிலுள்ள பணிகள் துணைச் சுட்டெண் குறைவடைந்தது. மேலும், பணிகள் செயற்பாடுகளின் இவ்வபிவிருத்திகளானவை வியாபாரத் தொழிற்பாட்டு அளவீட்டின் பணிகள் துறைகளுக்கான துணைச் சுட்டெண்ணிலும் பிரதிபலித்தன. அதற்கமைய, வியாபார நிலைமை, கேள்வி மற்றும் விற்பனைத் துணைச் சுட்டெண்கள் இவ்வாண்டில் சராசரியாக நடுநிலைக்கு மேல் நிலையில் காணப்பட்டன.

## மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம்

**பெறுமதிகூட்டல் நியதிகளில் மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தக நடவடிக்கைகள் 2015இன் 5.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2016இல் 2.5 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்தன.** இம்மெதுவடைவானது, ஏற்றுமதி மற்றும் இறக்குமதி அளவுச் சுட்டெண்களிலும் பிரதிபலித்தது. மேலும், வேளாண்மை வெளியீட்டில் ஏற்பட்ட வீழ்ச்சியும் தயாரிப்பு வெளியீட்டின் குறைவடைந்த வேகமும் வர்த்தகச் செயற்பாடுகளை தடுத்தது. இறக்குமதி அளவுச் சுட்டெண் 2015இன் 10.6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இல் 7.9 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இவ்வாண்டில் இடைநிலைப்பொருட்கள் மற்றும் முதலீட்டுப்பொருட்களின் இறக்குமதிகள் அதிகரித்த வேளையில் நுகர்வுப்பொருட்களின் இறக்குமதி சுருக்கமடைந்தது. அதற்கமைய, இடைநிலைப்பொருட்கள் இறக்குமதி அளவுச் சுட்டெண் 2016இல் 10.8 சதவீத வளர்ச்சியினைப் பதிவுசெய்தமைக்கு எரிபொருள், புடவை மற்றும் அணியும் ஆடைகளின் இறக்குமதி வளர்ச்சியே முக்கிய காரணமாகும். மேலும், முதலீட்டுப்பொருட்கள் இறக்குமதி அளவுச் சுட்டெண் 2015இன் 13.6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இல் 20.0 சதவீத வளர்ச்சியினைத் தொடர்ந்தும் கொண்டிருந்தது. இவ்வளர்ச்சியானது, போக்குவரத்துக் கருவிகளுக்கான இறக்குமதிகளில் காணப்பட்ட சுருக்கத்திற்கிடையிலும் முக்கியமான பொறிமுறை மற்றும் கருவி, கட்டடப் பொருட்களின் கணிசமான அதிகரிப்பினால் உதவப்பட்டது. எனினும், நுகர்வுப்பொருட்கள் இறக்குமதி அளவுச் சுட்டெண் உணவு, குடிபானம் மற்றும் ஏனைய நுகர்வுப்பொருட்கள் வகைகளின் ஏற்றுமதி குறைவினால் 2015இன் 24.1 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இல் 12.0 சதவீதத்தால் சுருக்கமடைந்தது. இதேவேளை, ஏற்றுமதி அளவுச் சுட்டெண் வேளாண்மை ஏற்றுமதிகளின் சுருக்கத்தாலும், கைத்தொழில் ஏற்றுமதிகளின் மெதுவடைவாலும் 2015இன் 4.6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இன் 0.7 சதவீதத்தால் குறைவடைந்தது.

## போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல்

**களஞ்சியப்படுத்தல் செயற்பாடுகள் உட்பட பொருட்கள் மற்றும் பயணிகளின் போக்குவரத்தின் பெறுமதிகூட்டல் 2015இன் 5.0 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இல் 4.1 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** இது தொடர்பாக, போக்குவரத்துப் பணிகளால் தொழிற்படுத்தப்பட்ட பயணிகளின் கிலோமீற்றர்களில் மெதுவான போக்குகளானது அவதானிக்கப்பட்டது. தனியார் துறை மற்றும் இலங்கைப் போக்குவரத்துச் சபையால், தொழிற்படுத்தப்பட்ட பயணிகள் கிலோமீற்றர்களின் மொத்த எண்ணிக்கை 2015இல் பதிவுசெய்யப்பட்ட 6.1 சதவீத மற்றும் 19.6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இல் முறையே மெதுவடைந்த வேகத்தில் 2.0 சதவீதம் மற்றும் 6.1 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. மேலும், இலங்கைப் புகைவண்டிப் பகுதியால் தொழிற்படுத்தப்பட்ட பயணிகள் கிலோமீற்றர்கள் 2015இன் 8.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இல் 0.1 சதவீத மெதுவடைந்த வளர்ச்சியைப் பதிவு செய்தன. எனினும், இவ்வாண்டின் சிறிலங்கன் எயார்லையின்ஸினால் பறக்கப்பட்ட பயணிகள் கி.மீற்றர்கள் 2015இன் 0.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இல் 0.8 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தன. இதேவேளை, இலங்கைத் துறைமுகங்களால் கையாளப்பட்ட கொள்கலன் போக்குவரத்து (இருபது அடிக்குச் சமமான அலகுகள்) மற்றும் சரக்கு 2015இல் அறிக்கையிடப்பட்ட முறையே 5.7 சதவீதம் மற்றும் 4.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இல் முறையே 10.6 சதவீதத்தாலும் மற்றும் 11.5 சதவீதத்தாலும் வளர்ச்சியடைந்தன. மேலும், இலங்கைப் புகைவண்டிப் பகுதியால் தொழிற்படுத்தப்பட்ட சரக்குத் தொன் கி.மீற்றர்கள் 2015இன் 0.3 சதவீத சுருக்கத்திலிருந்து மீண்டு 2016இல் 7.6 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்தன. இதற்கு மேலாக, சிறிலங்கன் எயர்லைன்ஸினால் பறக்கப்பட்ட சரக்குத் தொன் கி.மீற்றர்கள் 2015இன் 7.5 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2016இல் 5.0 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தன. இதேவேளை, அஞ்சல் மற்றும் பொருட்களை எடுத்துச்செல்லும் செயற்பாடுகள் 2015இல் பதிவுசெய்யப்பட்ட 0.1 சதவீதச் சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2016இல் மீண்டு 5.1 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தன. இந்த

மீட்சியானது அஞ்சல் திணைக்களத்தால் கையாளப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தபால்களின் அதிகரிப்பில் பிரதிபலிக்கப்பட்டது.

### தங்குமிடம் மற்றும் உணவுப் பணிச் செயற்பாடுகள்

**தங்குமிடம், உணவு மற்றும் குடிபானப் பணிகள் 2015இன் 1.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இன் 4.0 சதவீதத்தால் விரிவடைந்தன. சுற்றுலா தொடர்பான நடவடிக்கைகளைக் கருத்தில் கொள்ளும்போது, இவ்வாண்டில் சுற்றுலா வருகைகள் 2015இன் 17.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இல் மெதுவடைந்து 14.0 சதவீத வளர்ச்சியை பதிவுசெய்தது.** பிராந்தியங்களினுள், அநேகமான சுற்றுலா வருகைகளுக்கு மேற்கு ஐரோப்பா வகைகூறியதுடன் அதனைத் தொடர்ந்து தெற்கு ஆசியா காணப்பட்டது. வதிவிட நாட்டைப் பரிசிலனையில் கொள்ளும்போது, இந்தியா சுற்றுலா மூலத்தில் முதலாம் இடம் வகிப்பதோடு அதைத் தொடர்ந்து சீனா இரண்டாவதாக வந்து சுற்றுலா வருகைகளின் வளர்ச்சிக்கு தொடர்ந்தும் பங்களித்தன. இதேவேளை, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையால் ஒப்புதலளிக்கப்பட்ட தரமிடப்பட்ட சுற்றுலாவிடுதி நிறுவனங்களின் அறையில் தங்கும் வீதம் 2015இன் 74.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2016இல் 74.8 சதவீதமாக வளர்ச்சியடைந்தது. மேலும், சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் இவ்வாண்டில் தனது விரிவாக்கத்தைத் தொடர்ந்து 18.0 சதவீத வளர்ச்சியுடன் ஐ.அ.டொலர் 3.5 பில்லியனாக அதிகரித்தன. உணவகங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகளுக்கான கேள்வி அதிகரிப்பானது தனியார் நுகர்வு செலவினத்தின் அதிகரிப்பில் பிரதிபலிக்கப்பட்டதுடன் இது தங்குமிடம் மற்றும் உணவு பணிச்செயற்பாடுகளின் வளர்ச்சிக்கு பங்களித்தது.

### தகவல் மற்றும் தொடர்பூட்டல்

**தகவல் மற்றும் தொடர்பூட்டல் செயற்பாடுகளின் பெறுமதிகூட்டல் 2015இன் 10.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இல் 8.0 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** தொலைத்தொடர்புச் செயற்பாடுகள் 2015இல் பதிவுசெய்யப்பட்ட 10.1 சதவீத வளர்ச்சிக்கு மேலாக 2016இல் 8.3 சதவீத வளர்ச்சியினைப் பதிவுசெய்து பெறுமதிகூட்டல் நியதிகளில் இப்பிரிவினுள் இந்த வளர்ச்சிக்குப் பெருமளவிற்கு ஆதரவளித்தது. கையடக்கத் தொலைபேசி வாடிக்கையாளர்கள் மற்றும் நிலையாகப் பொருத்தப்பட்ட கம்பி இணைப்புக்கள் மேலும் அதிகரித்ததுடன் நிலையாகப் பொருத்தப்பட்ட கம்பியல்லா இணைப்புக்களில் தொடர்ந்த சுருக்கம் காணப்பட்டது. இதற்கு மேலாக, செல்லிட மற்றும் இணையத்தள பணிகள் இவ்வாண்டில் உயர்ந்தளவில் விரிவடைந்தன. தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சித்திட்டமிடல் ஆலோசனை மற்றும் அது தொடர்பான செயற்பாடுகள் பெறுமதிகூட்டல் 2015இன் 14.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இல் 7.1 சதவீதத்தால் விரிவாக்கமடைந்தன. மேலும், நிகழ்ச்சித்திட்டமிடல் மற்றும் ஒலிபரப்புச் செயற்பாடுகள் மற்றும் கட்புல/ செவிப்புல தயாரிப்புச் செயற்பாடுகள் பெறுமதிகூட்டல் நியதிகளில் 2015இன் 4.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இல் 7.7 சதவீத வளர்ச்சியை பதிவுசெய்தன.

### நிதியியல், காப்புறுதி மற்றும் வீடுகளின் சொத்துடமை உள்ளிட்ட உண்மைச் சொத்துச் செயற்பாடுகள்

**நிதியியல், காப்புறுதி மற்றும் வீடுகளின் சொத்துடமை உள்ளிட்ட உண்மைச் சொத்து செயற்பாடுகள் பெறுமதிகூட்டல் நியதிகளில் 2015இன் 13.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இல் 8.4 சதவீதத்தால் விரிவாக்கமடைந்தன.** இந்த பிரிவினுள் இருக்கும் அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளும் இவ்வாண்டில் தொடர்ந்து வளர்ச்சியடைந்தாலும், 2015 உடன் ஒப்பிடுகையில் குறைந்த வேகத்திலேயே வளர்ச்சியடைந்தன. இவ்வளர்ச்சிக்குப் பங்களிக்கும் விதத்தில் நிதியியல் பணிகள் மற்றும் துணை நிதியியல் பணிகள் 2015இன் 17.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இல் 12.4 சதவீத ஆரோக்கியமான வளர்ச்சியை அடைந்தன. வங்கித்தொழில் மற்றும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்கள் 2015இன் 21.1 சதவீதம் மற்றும் 30.6 சதவீதம் கொண்ட தொடர்பான வளர்ச்சி வீதங்களுடன் ஒப்பிடுகையில் 2016இல் முறையே 17.5 சதவீதம் மற்றும் 20.1 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தன. இதற்கிடையில், வங்கித்தொழில் மற்றும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் வைப்புத்தளம் 2015இல் பதிவுசெய்யப்பட்ட முறையே 15.3 சதவீதம் மற்றும் 16.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2016இல் முறையே 16.5 சதவீதம் மற்றும் 10.5 சதவீதத்தாலும் வளர்ச்சியடைந்தது. இதன் விளைவாக, வங்கிகள் மற்றும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மொத்தக் கடன்களும் வைப்புத் தளமும் 2015இன் முறையே 17.9 சதவீதம் மற்றும் 24.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இல் முறையே 17.0 சதவீதத்தாலும் மற்றும் 16.6 சதவீதத்தாலும் வளர்ச்சியடைந்தன. காப்புறுதி, மீள்காப்புறுதி மற்றும் ஓய்வூதிய நிதியிடும் செயற்பாடுகளின் பெறுமதிகூட்டல் 2015இல் பதிவுசெய்யப்பட்ட 9.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இல் 8.5 சதவீதத்தால் விரிவாக்கம் அடைந்தது. காப்புறுதித் தொழிலால் உழைக்கப்பட்ட கட்டுப்பணம் மற்றும் கோரல்கள் 2015இன் 16.6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இல் 15.1 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து காப்புறுதி வியாபாரச் செயற்பாடுகளில் அதிகரிப்பைப் பிரதிபலித்தன. மேலும், வீடுகளின் சொத்துடமை

உள்ளிட்ட உண்மைச் சொத்துச் செயற்பாடுகள் 2015இன் 10.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இல் 4.2 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தன.

### தொழில்சார் பணிகள் மற்றும் ஏனைய தனியாள் பணிச் செயற்பாடுகள்

2

**தொழில்சார் பணிகள் மற்றும் ஏனைய தனியாள் பணிச் செயற்பாடுகளிலான பெறுமதிகூட்டல் 2015இல் பதிவுசெய்யப்பட்ட 1.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இல் 0.7 சதவீதத்தால் விரிவடைந்தது.** புடவை கழுவுதல் மற்றும் சுத்திகரித்தல் செயற்பாடுகள், கலைகள், பொழுதுபோக்கு மற்றும் களியாட்டம், சிகையலங்காரம் மற்றும் ஏனைய அழகுச் சிகிச்சை மற்றும் இறுதிச் சடங்கு தொடர்பான செயற்பாடுகள் உள்ளடக்கும் இப்பிரிவினுள் வரும் மிகப்பெரிய துணைச் செயற்பாடான ஏனைய தனியாள் பணிச் செயற்பாடுகள் பெறுமதிகூட்டல் நியதிகளில் 2015இன் 3.6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் ஆண்டுப்பகுதியில் 1.3 சதவீத மெதுவடைந்த வளர்ச்சியைப் பதிவுசெய்தன. எனினும், தொழில்சார், விஞ்ஞான, தொழில்நுட்ப, நிருவாக மற்றும் ஆதரவளிக்கும் பணிச் செயற்பாடுகளுக்குள் உள்ளடங்கும் கட்டடக்கலை மற்றும் பொறியியற் செயற்பாடுகள், தொழில்நுட்பப் பரிசோதனை மற்றும் பகுப்பாய்வு, விஞ்ஞான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, விளம்பரம் மற்றும் சந்தை ஆராய்ச்சி, சட்ட மற்றும் கணக்கீட்டுச் செயற்பாடுகள் பெறுமதிகூட்டல் நியதிகளில் கடந்த ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 7.4 சதவீத சுருக்கத்திற்கு மேலாக 2016இல் 3.1 சதவீதத்தால் சுருங்கின.

### பொது நிருவாகம், பாதுகாப்பு, கல்வி, மனித நலம் மற்றும் சமூகப் பணிச் செயற்பாடுகள்

**பொது நிருவாகம், பாதுகாப்பு, கல்வி, மனித நலம் மற்றும் சமூகப் பணிச் செயற்பாடுகள் பெறுமதிகூட்டல் நியதிகளில் 2015இன் 3.6 சதவீத வளர்ச்சியை ஒப்பிடுகையில் 2016இல் 4.9 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** இந்தப் பிரிவினுள் பெரும்பங்கைக் கொண்டுள்ள பொது நிருவாகம், பாதுகாப்பு மற்றும் கட்டாய சமூக பாதுகாப்புச் செயற்பாடுகளின் பெறுமதிகூட்டல் நியதிகளில் 2015இன் 6.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இல் 5.2 சதவீதத்தால் விரிவாக்கமடைந்து இவ்வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்தன. இதேவேளை, கல்விப் பணிகளின் பெறுமதிகூட்டல் 2015இன் 8.1 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2016இல் மீட்சியடைந்து 7.5 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. மேலும், மனித நலச் செயற்பாடுகள், வசதிவிடக் கணிப்பு மற்றும் சமூகப் பணிச் செயற்பாடுகள் பெறுமதிகூட்டல் நியதிகளில் 2015இன் 8.1 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இல் 1.5 சதவீதத்தால் விரிவாக்கம் அடைந்தது.

## 2.5 செலவினம்

**உள்நாட்டு நுகர்வு மற்றும் முதலீட்டுச் செலவினத்தினூடாக உருவாக்கப்பட்ட மொத்த உள்நாட்டுச் செலவினம் பெயரளவு நியதிகளில் ரூ.12,742.8 பில்லியனாக விளங்கி 2015இன் 5.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இல் 8.2 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** இவ்வளர்ச்சியானது, 19.6 சதவீத முதலீட்டு செலவினத்தின் விரிவாக்கத்தாலும் 4.1 சதவீத நுகர்வு செலவினத்தின் வளர்ச்சியாலும் ஏற்பட்டிருக்கின்றது. நிலையான நியதிகளில் மொத்த உள்நாட்டுச் செலவினமானது 2015இன் 6.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இல் 6.2 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. நிலையான விலை நியதிகளில், முதலீட்டு நடவடிக்கை மீதான செலவினமானது 2015இன் 1.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் ஆண்டுப்பகுதியில் கணிசமான வளர்ச்சியான 18.1 சதவீதத்தைப் பதிவுசெய்த அதேவேளை, நுகர்வுச் செலவினமானது கடந்த ஆண்டின் 8.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இல் உண்மை நியதிகளில் 0.9 சதவீதம் என்ற குறைந்தளவான உண்மை வளர்ச்சி வீதத்தை பதிவு செய்திருக்கின்றது. இதேவேளை, தேறிய வெளிநாட்டுக் கேள்வி, பெயரளவு நியதிகளில், 2015இன் 1.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் 9.6 சதவீதத்தால் சுருக்கமடைந்தது. ரூபாய் பெறுமதியிலான, ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகள் முறையே 2015இன் 5.3 சதவீதம் மற்றும் 3.5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இல் முறையே 10.3 சதவீதம் மற்றும் 10.1 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தன. நிலையான விலைகளைக் கருத்தில் கொள்ளும்போது, இவ்வாண்டில் ஏற்றுமதிகள் 0.7 சதவீதத்தால் சுருங்கியவிடத்து இறக்குமதிகளின் 7.9 சதவீத வளர்ச்சியானது தேறிய வெளிநாட்டுக் கேள்வியினை உண்மை நியதிகளில் தேய்வடையச் செய்தது. இறக்குமதி விலைகளுடன் ஒப்பிடுகையில் அதிகளவான ஏற்றுமதி விலைகளைப் பிரதிபலிக்கும் விதத்தில், வர்த்தக மாற்று விகிதமானது 2015இன் 2.7 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இல் 3.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. இப்போக்கு இறக்குமதி ஏற்றுமதிச் சுட்டெண்களினால் பிரதிபலிக்கப்படுகிறது. இறக்குமதிகளினைப் பொறுத்தவரை பெறுமதி மற்றும் அளவு ஆகிய இரண்டும் அதிகரித்தன. எனினும், ஏற்றுமதி அளவுச் சுட்டெண் சுருக்கமடைந்த வேளையில் பெறுமதிச் சுட்டெண் அதிகரித்தது. இறக்குமதிகளின் பெறுமதி மற்றும் அளவில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு முதலீடுகள் மற்றும் இடைநிலைப்பொருட்களின் இறக்குமதிகளில் ஏற்பட்ட வளர்ச்சி உந்துதலாக இருந்த வேளையில் நுகர்வுப்பொருட்களின் இறக்குமதி இவ்வாண்டுப்பகுதியில் சுருக்கமடைந்தது. அனைத்து

### சிறப்புக்குறிப்பு 04
### வணிக அறிவாண்மை மற்றும் பெருந்தரவுகள்: மத்திய வங்கிப் புள்ளிவிபரங்களின் புதியதொரு பரிமாணம்

வணிக அறிவாண்மை என்பதால் குறிப்பிடப்படுவது புள்ளி விபரங்கள் மற்றும் புள்ளிவிபரமல்லாத தரவுகளை பெறுவதற்கும் அதனை தீர்மானமெடுத்தல் செயற்பாடுகளுக்கு உதவும் வகையில் மாற்றியமைக்கவும் பயன்படுத்தப்படும் நுட்பங்கள் மற்றும் கருவிகளாகும். அவ்வாறான வணிக அறிவாண்மை தற்பொழுது உலகமெங்கிலுமுள்ள மத்திய வங்கிகளின் உடைமையாகவுள்ளதுடன் மத்திய வங்கியியலின் பரந்துபட்ட இலக்குகளை அடைவதற்கான கொள்கை உருவாக்கச் செயல்முறையில் பயனுள்ளதாகவுள்ளது. அண்மைய ஆண்டுகளில் மத்திய வங்கிகள் மிகவும் தற்றுணர்ந்த அடிப்படையில் தரவுகளால் இயக்கப்படும் முன்னோக்கிய கொள்கைப் பாதையை வழிநடாத்துவதற்காக முன்னோக்கிய தீர்மானமெடுத்தல் செய்முறைக்கு வசதியளிப்பதற்காக வணிக அறிவாண்மையைப் பயன்படுத்துகின்றன. இந்த முன்னேற்றங்களுக்குப் புறம்பாக, தகவல் மற்றும் தொடர்பூட்டல் அமைப்புகளின் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மற்றும் கண்டுபிடிப்புக்களை வசதிப்படுத்தும் ஒழுங்குவிதியிலான முன்னேற்றங்கள் உலகப் பொருளாதார மற்றும் நிதித் தோற்றப்பாட்டினை மாற்றியமைத்துள்ளது. இன்றைய உலகமானது அதிகரித்து வரும் ஆழம் மற்றும் அகலத்தினை கொண்ட தகவல் மீது மிகைஊதியத்தை பேணுகிறது. முக்கியமாக, உலகளாவிய நிதி நெருக்கடியின் விளைவாக, பொருளாதார மற்றும் நிதியியல் நிபுணர்கள் நுண்பாக முன்மதியின் முன்னேற்றங்களுக்கு அமைய எண்சார்பற்ற தகவல்களை தேடுகின்றனர். இந்த பின்னணியில், தொழில்நுட்ப முன்னேற்றங்களின் விளைவாக வெளியாகும் டிஜிட்டல் தரவுகள், வணிக பரிமாற்றங்கள், சமூக ஊடகங்கள், வலையமைக்குட்பட்ட கணனிகள் மற்றும் “பொருட்களின் இணையம்” (Internet of Things)[1] என்பவற்றில் இருந்து பெறப்படும் தகவல்களின் கலவையில் இருந்து “பெருந்தரவுகள்” என அழைக்கப்படும் ஒரு புதிய தகவல் முன்மாதிரி உருவம் வெளிப்படுகிறது. பெருந்தரவுகள் என்பவை பாரிய எண்ணிக்கையிலான தரவுகளைக் குறிக்கின்ற வேளையில், சிறந்த தீர்மானங்கள், அதிகளவான செயற்திறன் மற்றும் இலக்கு நிறைவேற்றங்களுக்கு வழிவகுக்கின்ற கருத்துள்ள தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்குத் தரவுகளில் ஈடுபடுத்தப்படுகின்ற கருவிகள் மற்றும் செய்முறைகளை வணிக அறிவாண்மை சுட்டிக்காட்டுகின்றன. வேறு சொற்களில், வணிக அறிவாண்மை வினாக்களுக்கு விடையளிக்க உதவும் வேளையில், பெருந்தரவுகளானவை வினாக்களுக்கான விடையை தேடும் இடமாகிய நூலகமாக திகழ்கிறது.

இவ்வபிவிருத்திகளின் வேகத்தினை நோக்குக் கூற்று, அலுவல்சார் ஆதாரங்களிலிருந்து மட்டும் பெறப்படும் தகவல்களின் அளவு மற்றும் தரம் என்பன முன்னோக்கிய கொள்கை உருவாக்குதலுக்கு போதுமானதாக இல்லை என்பதுடன் சரியான தருணத்தில் பொருளாதாரத்தின் போக்குகளைக் கவனிக்க முடியாமலுமுள்ளது. ஆகையால் உலகளாவிய ரீதியில் மத்திய வங்கிகள் இத்தகவல் இடைவெளியினை நிரப்புவதற்காக பெருந்தரவுகள் மற்றும் வணிக அறிவாண்மையினைத் தேடுகின்றன. எனினும், மத்திய வங்கிகள் தமது கொள்கை முன்னுரிமைகளை வழிகாட்டும் செயல்முறைக்காக தேடிப்பெறும் தகவல்களின் ஆழம் மற்றும் செறிவு என்பனவற்றில் தொடர்ந்தும் பல சவால்கள் காணப்படுகின்றன.

1. இது அன்றாட பொருட்களில் உட்பொதிக்கப்பட்டுள்ள கணனிச் சாதனங்கள் மூலமான பரஸ்பர தொடர்பினால் இணையத்தினூடாக தகவல்களை அனுப்புதல் மற்றும் பெறுதல் என வரையறுக்கப்படுகின்றது.
2. பின்-டெக் என அழைக்கப்படும் நிதித் தொழில்நுட்பமானது மென்பொருள் அடிப்படையிலான நிதிச் சேவைகளை வழங்கும் வணிகங்களை குறிப்பிடும். இப்பதமானது, நிதியியல் துறையில் உள்ள எந்தவொரு தொழிநுட்ப புத்தாக்கம், நிதியியல் கல்வியறிவு மற்றும் கல்வியிலான புத்தாக்கங்கள், சில்லறை வங்கியியல், மூதலீடு மற்றும் குறியாக்க நாணயங்களான பிற் - நாணயம் போன்றவற்றை உள்ளடக்குமாறு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

**புதிய தகவல் முன்மாதிரி உருவம்: பெருந்தரவுகள்**

பெருந்தரவுகள் என்பது தொடர்ச்சியான அடிப்படையில் கொள்கை உருவாக்கச் செயன்முறையின் பிரவாதத்திற்கான கட்டமைக்கப்பட்ட மற்றும் கட்டமைக்கப்படாத தகவல்கள் அடங்கிய பாரிய தரவுத் தொகுதியாகும். தகவல் தொழிநுட்பமானது வணிக மற்றும் தனிப்பட்ட வாழ்க்கையுடன் ஒருங்கிணைந்த தினசரி அம்சமாக விளங்கி டிஜிட்டல் உருமாற்றத்தின் பெருக்கத்தினைப் பிரதிபலிக்கின்றது. டிஜிட்டல் பொருளாதாரம் பெருமளவில், ஊடகம், வங்கித்தொழில் (நிதித் தொழில்நுட்பம் - பின்டெக்[2]), சில்லறைக் கொடுக்கல்வாங்கல்கள் (இணைய வர்த்தகம்), வலு, போக்குவரத்து மற்றும் சுகாதாரம் (மின்னணு ஆவணங்கள், டிஜிட்டல் சுகாதார தீர்வுகள்) மற்றும் பொழுதுபோக்குகளும் மற்றும் சமூக தொடர்புகளும் (சமூக வலைத்தளங்கள், இணைய விளையாட்டு, ஒளிபரப்புச் சேவைகள்) போன்ற துறைகளில் பிணைந்து வருகிறது.

அத்தகைய ஆதாரங்களில் இருந்து பெறப்படும் தரவுகளான பெருந்தரவுகளுக்கு நான்கு முக்கிய வரையறுக்கும் பண்புகள் உள்ளன; பருமன், பல்வகை, வேகம் மற்றும் உண்மைத் தன்மை.

- பருமன் - பெருந்தரவுகளானவை பாரம்பரிய தரவுகளுடன் ஒப்பிடுகையில் அணுவளவு மற்றும் நுண்ணிய அளவிலான தகவல்கள் அடங்கிய பாரிய பருமனைக் கொண்டுள்ளதாகக் கருதப்படுகிறது.
- பல்வகை - பாரிய பருமனைத் தவிர, அவை வேறுபட்ட தரவு மூலங்களிலிருந்து பெறப்பட்ட மனிதர்கள் மற்றும் இயந்திரங்களால் உருவாக்கப்பட்ட, சிக்கலான மற்றும் பல பரிமாணங்களை கொண்டவையாகவும் காணப்படுகின்றன.
- வேகம் - தொழில்நுட்ப வளர்ச்சியின் உதவியுடன் இத்தரவுகள் விரைவான கால இடைவெளிகளில் உருவாக்கப்பட்டு அதிவேகமாகச் செய்முறைபடுத்தப்படும்.
- உண்மைத் தன்மை - இன்னொரு முக்கியமான பண்பானது பல மூலங்களிலிருந்து பெறப்படுவதால் பலதரப்பட்ட தரம் மற்றும் தரவுப் பொருத்தப்பாடின்மையைக் கொண்டிருப்பதாகும். ஆகையால் அத்தரவுகளின் உண்மைத்தன்மை/ தரவுகளின் தரம் பற்றிய சோதனை தேவைப்படுகின்றது. அது மட்டுமன்றி அவை துல்லியம் மற்றும் தர மதிப்பீடுகள் என்பனவற்றில் பாரம்பரிய ஆதாரங்களிலிருந்து பெறப்பட்டவையைவிட தரத்தில் சமமாக அல்லது மேலாக காணப்படவேண்டும். உள்ளடக்கம் மற்றும் முறையியலின் வெளிப்படைத்தன்மை உண்மைத்தன்மையை அதிகரிக்க உதவிபுரியும்.

**பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டிற்கான பெருந்தரவுகள்**

பாரிய அளவிலான டிஜிட்டல் தரவுகளான பெருந்தரவுகளை ஆராய்வதன் மூலம் பொருளாதார செயற்பாடுகள் மற்றும் விலை நிலைகளை கண்காணிப்பதற்கான புதிய நுண்ணறிவைப் பெற்று பல நன்மைகளை அடையலாம். மேலும், பாரம்பரிய அல்லது பழமைவாய்ந்த தரவுகள் காலதாமதத்துடன் கிடைக்கப்பெறும் போது பெருந்தரவுகளின் நேரம் தவறாமையானது ஆரம்ப முன்னெச்சரிக்கைக் குறிகாட்டிகளையும் பொருளாதாரத்தின் நொடிப் பொழுதிலான வரைபடத்தினையும் வழங்குவதன் மூலம் நாணயக் கொள்கையின் அதேநேர தீர்மானமெடுத்தலினை மேம்படுத்த முடியும்.


பெருந்தரவுகளின் மூலமான நாணயக் கொள்கைக்கான ஒரு பயன்பாடானது, தொடர்ந்து முதிர்வுறும் கூடையிலிருந்து வேகமாக மாறுதலடையும் நாளாந்த பணவீக்க குறியீட்டு அளவீட்டினை உருவாக்குதலாகும். அதுமட்டுமன்றி, உரையினை வகைப்படுத்தும் தொழில்நுட்பமானது ஜோன் மேனாட் கேனிஸ் இனால் “மனித உணர்வுகள்” எனப் பெயரிடப்பட்ட, பொருளாதார சமன்பாடுகள் மற்றும் மாதிரிகளை பயன்படுத்தி தீர்மானிக்கப்பட முடியாத மனித உணர்வுகள் மற்றும் உணர்ச்சிகளை மதிப்பிடப் பயன்படுத்தப்பட முடியும். பல முன்னேற்றங்கள் காணப்பட்டுள்ள போதிலும் இவ்வழிமுறைகளை செயலாக்குவதில் பல சவால்கள் உள்ளதோடு இது மத்திய வங்கியின் கொள்கையமைத்தலுடன் பொருந்தும் படி மாற்றம் அடைந்து வருகிறது. பெருந்தரவுகளின் பயன்பாடுகளில் பல வரையறைகள் மற்றும் சவால்கள் காணப்படுகின்றன. அவையாவன பாரிய அளவிலான தகவல்களை ஆராய்வதிலான முறையியல் தடைகள், தகவல்களை எளிதாக அணுக இயலாத்தன்மை மற்றும் அந்தரகங்கத்தன்மை பற்றிய பிரச்சனைகள் ஆகும்.

**நிதியியல் முறைமை உறுதிப்பாட்டிற்கான பெருந்தரவுகள்**

நிதியியல் முறைமை உறுதிப்பாட்டிற்கு தேவையான காலந்தவறா நிதியியல் துறை தகவல்களின் முக்கியத்துவமானது உலகளாவிய நிதி நெருக்கடியின் பின் தனிக்கவனம் செலுத்தப்பட்டு வருவதுடன் அதனைத் தொடர்ந்து நிதியியல் உறுதிப்பாடானது தற்பொழுது பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாடிற்கான முன்நிபந்தனையாக பல பொருளாதாரங்களில் கருதப்படுகின்றது.

நிதி சந்தைகளின் தகவல்களை சேகரிப்பதற்கு பொருத்தமான நிலையில் மத்திய வங்கிகள் உள்ளன. புதிதாக சந்தைக்கு வரும் நடைமுறைகள் மற்றும் புத்தாக்கங்கள் தொடர்பான தகவல்கள் உருவாகி வரும் இடர்நேர்வு முன்னெச்சரிக்கை சமிக்ஞைகளை வழங்கும். இது நிதிச் சந்தையில் சேகரிக்கப்படும் இன்னொரு வகையான வணிக அறிவாண்மை ஆகும். மேலும், நிதித் தொழில்நுட்பத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட பின்-டெக் கண்டுபிடிப்புகள் பொருளாதாரத்தின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமையை பாதிக்கின்றன. ஆகவே, பரந்த பரம்பலைக் கொண்ட நிதியியல் துறையில் விரைவான கால இடைவெளிகளைக் கொண்ட தகவல்களைச் சேகரிப்பதன் மூலம்

வரைபடம் சி.கு 4.1
பெருந்தரவு ஆய்வுகளினால் மத்திய வங்கிகள் எதிர்பார்க்கும் விளைவுகள்




மூலம் : 2015 அளவீடு, மத்திய வங்கி புள்ளிவிபரவியலுக்கான ஜவிங் பிஷர் குழு

3. 2015ஆம் ஆண்டு சனவரி மாதம், மத்திய வங்கி புள்ளிவிபரவியலுக்கான ஜர்விங் பிசர் குழு, பன்னாட்டுத் தீர்ப்பனவுகளுக்கான வங்கி, துருக்கிய மத்திய வங்கி மற்றும் ஐரோப்பிய மத்திய வங்கியுடன் இணைந்து மத்திய வங்கிகளிடையிலான பெருந்தரவுகள் பற்றிய ஆர்வம் மற்றும் பயன்பாட்டிலான இணையத்திலூடான கணக்கெடுப்பு ஒன்றினை நடத்தியது. இதில் 69 ஜர்விங் பிசர் குழு உறுப்பினர் மத்திய வங்கிகளும் பணச்சபைகளும் 83 சதவீத பதிலிறுப்பு வீதத்தில் பதிலளித்தன.

மத்திய வங்கியானது நிதியியல் துறையில் உருவாகிவரும் இடர்நேர்வுகளைக் கணிப்பதற்கும் மற்றும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியியல் நிறுவனங்களிற்கிடையிலான இடைத்தொடர்பினை கண்டறியவும் உதவிபுரியும்.


2015இல் பன்னாட்டுத் தீர்ப்பனவுகளுக்கான வங்கியினால் நடாத்தப்பட்ட அளவீட்டின்படி[3], பெருந்தரவுகளானது பேரண்டப் பொருளாதார மற்றும் நிதியியல் உறுதிப்பாட்டு ஆய்வுகளுக்கு உதவும் ஆற்றல்மிக்க பயனுள்ள கருவியாக மத்திய வங்கிகளினால் கருதப்படுகின்றது. கணக்கெடுப்பில் பங்கேற்ற பெரும்பான்மை மத்திய வங்கிகள் பேரண்டப் பொருளாதாரம் மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு நோக்கங்களில், குறிப்பாகப், பொருளாதார எதிர்வுகூறல், சுழற்சி பகுப்பாய்வு மற்றும் நிதியியல் உறுதிப்பாடு பகுப்பாய்வு (வரைபடம் சி.கு 4.1) பெருந்தரவுகளின் அதிகரித்துவரும் பயன்பாட்டினை எதிர்பார்க்கின்றன.

**சர்வதேச சிறந்த நடைமுறைகள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் முன்னெடுப்புக்கள்**

மாறுபட்டுவரும் பெருந்தரவுகள் முன்மாதிரி வடிவம் மற்றும் விரைவான கால இடைவெளிகளைக் கொண்ட குறிகாட்டிகளின் போக்கிலான திசையில் ஒரு நடவடிக்கையாக, வணிக அளவீடுகளைப் பயன்படுத்தும் மத்திய வங்கிகளின் எண்ணிக்கை கடந்த ஆண்டுகளில் அதிகரித்து வருகிறது. பொருளாதாரத்தின் மீது புலனாய்வை பெற்றுக்கொள்ளும் நோக்கில் நடாத்தப்படும் இந்த அளவீடுகள், பேஜ் புத்தகம் (பெடரல் ஒதுக்கு வங்கி), வணிகத் தோற்றப்பாடு அளவீடு (கனடா வங்கி), இங்கிலாந்து வங்கியின் முகவர்களின் வணிக நிலைமைகளின் சுருக்கம், டங்கன் அளவீடு (ஜப்பானிய வங்கி) மற்றும் வணிக இணைப்பு நிகழ்ச்சித்திட்டம் (அவுஸ்திரேலிய ஒதுக்கு வங்கி) போன்ற பெயர்களில் நடாத்தப்படுகின்றன. இத்தகைய அளவுசாரா அளவீடுகள், பல நிகழ்வுகள் மற்றும் அந்நிகழ்வுகளுக்கான செயல்கள் பற்றிய பதிலளித்தவர்களின் கருத்துக்களைக் கைப்பற்ற முனைகிறது. குறிப்பிட்ட காலப்பகுதியில் பதிலளிப்பவர்களின் கருத்துக்களை அளவிடுவதால் இவ்வளவீடுகளின் முடிவுகள் தனித்தன்மை வாய்ந்ததும் அமைப்பியல் சார்ந்ததாகவும் காணப்படுவதுடன் புதிய தரவுகள் வெளிவரும் போதும் திருத்தப்படுவதில்லை மற்றும் ஆரம்ப அதிகாரபூர்வ பாரம்பரிய தகவல்களை விட பயனுள்ள வழிகாட்டியாக அமைகிறது. அதனைவிட இந்த அளவீடுகள் மக்களின் எண்ணங்கள், நம்பிக்கை மற்றும் எதிர்பார்ப்புகளை வெளிக்கொண்டு வருவதால் அவற்றை பேரண்ட மாறிகளுடன் உறுதிப்படுத்த முடிகிறது.

இவ்வளவீடுகளினூடாகத் திரட்டப்பட்ட தகவல்கள், பணவீக்கத்தின் மீதும் அவற்றின் நாணயக் கொள்கை முன்னுரிமைகளின் மீதும் அழுத்தங்களைத் தோற்றுவிக்கும் நடைமுறை மற்றும் எதிர்பார்க்கப்படும் அபிவிருத்திகள் மீதான நாணயக் கொள்கைத் தீர்மானங்களை மேற்கொள்வதற்கான ஆழ்ந்த அறிவினை வழங்குவதனால், இப்பொருளாதாரப் பணிகளிலுள்ள மத்திய வங்கிகள் அல்லது நாணய அதிகாரசபைகள் இவற்றின் மீது கூடுதலான கவனத்தினைச் செலுத்துகின்றன. இத்தகவல்கள் கொள்கை வகுப்போர் பொருளாதாரத்திற்கு கொள்கைகளினூடாக படிப்படியாக கிடைக்கப்பெறும் பலன்களைக் கண்காணிப்பதற்கான மாற்றுக்குறிகாட்டிகளை வழங்குகின்றன. ஒட்டுமொத்தமாக, தகவல் வியாபாரச் சுழற்சி வட்டத்தின் திருப்புமுனையினையும் அடிப்படைக் காரணங்களையும் எடுத்துக்காட்டுவதுடன் மாதிரிகளினூடாக இலகுவில் பெற்றுக்கொள்ள முடியாத நேரகாலத்துடனான எச்சரிக்கையினையும் வழங்குகின்றன. மேலும், இவை கைத்தொழில்களுக்கிடையிலான மற்றும் பொருளாதார தோற்றப்பாட்டிலான மாற்றங்கள் மற்றும் நீண்டகால கட்டமைப்பு மாற்றங்களின் ஆழமான அறிவினை வழங்குகிறது.

பன்னாட்டுச் சிறந்த நடைமுறைகளுக்கமைய, இலங்கை மத்திய வங்கி, பொருளாதாரத்திலுள்ள தொழில்களான வணிகங்கள் மற்றும் சங்கங்களுடன் இணைப்பை ஏற்படுத்தும் நோக்கில் பின்வரும் வணிக ஆய்வுகளை கடந்த வருடங்களில் நிறுவியது. கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் மற்றும் வணிக தோற்றப்பாட்டு அளவீட்டின் முடிவுகளில் இருந்து பெறப்பட்ட வியாபார மனோபாவ சுட்டெண்கள் இலங்கை மத்திய வங்கியின் இணையத்தளத்தில் பொதுமக்களின் தகவலுக்காக வெளியிடப்படுவதுடன் கொடுகடன் நிலைமைகள் அளவீட்டின் முடிவுகள் உள்ளக ஆய்வுகளுக்குப் பயன்படுத்தப்பகிறது.




**மத்திய வங்கி புள்ளிவிபரவியலின் புதிய பரிமாணங்கள்**

வணிக அறிவாண்மை மற்றும் பெருந்தரவுகள் நடைமுறை கொள்கை வட்டாரங்களில் மத்திய வங்கிகளுக்கு அதிகரித்த ஆர்வத்தை உண்டாக்கும் விடயமாக மாற்றமடைந்து வருகிறது. வணிக அறிவாண்மை மற்றும் பெருந்தரவுகளிலிருந்து வரும் தகவல் உள்ளீடுகள் மத்திய வங்கியின் கொள்கையமைத்தலை வடிவமைக்கும் சாத்தியங்கள் எதிர்காலத்தில் உள்ளன. ஆகவே, கொள்கை அமைப்பாளர்கள் இதனை அறிந்துகொள்வதோடு, இம்முன்னேற்றங்களின் நன்மையை பெற்றுகொண்டு முன்நோக்கிய கொள்கையமைப்பிற்கு முன்னோடியாகக் காணப்படவேண்டும். அதற்காக மத்திய வங்கியில் உள்ள வணிக அறிவாண்மை ஆய்வாளர்கள், பொருளாதாரத்தின் அறிவினை மேம்படுத்தும் நோக்கில் தமது தொடர்புகளை விசாலப்படுத்த வேண்டும். இலங்கை மத்திய வங்கி பல அபிவிருத்தி அடைந்த மத்திய வங்கிகளுக்கு ஏற்ப அதிகளவு அளவுசாராத் தகவல்களை வழங்கும் வணிக ஆய்வுகள் மட்டுமன்றி பல்வேறு விரைவான காலஇடைவெளிகளைக் கொண்ட தகவல்களை ஆய்வு செய்யும் திட்டங்களை தொடங்கியுள்ளது.

இத்தகைய புதிய தகவல்களின் பரிணாமங்கள் தொடர்ச்சியாகப் பகுப்பாய்வு செய்யப்பட வேண்டியிருப்பதுடன் வணிக அறிவாண்மை வியாபாரச் சுழற்சியின் திருப்பு முனைகளை எதிர்வுகூறுவதற்கும் பயன்படுத்தப்பட வேண்டும். ஆகவே இம்முன்னேற்றங்களின் தடைகளையும் சாத்தியங்களையும் புரிதல், மத்திய வங்கியினை சவாலான கொள்கை அமைப்பு முறை வழியில் சரியான பாதையில் இட்டு செல்லும். முன்னொரு போதும் இல்லாதளவு பருமன், கிடைப்பனவு மற்றும் தகவல் அணுகல் இருக்கும் இக்காலப்பகுதியில் மத்திய வங்கி புள்ளிவிபரவியலாளரின் பங்கு மாற்றமடைந்து வருகிறது. இது கடந்த மற்றும் நேரிடையான புள்ளிவிபரங்களை தொகுக்கின்ற எளிய தொகுப்பாளரை இனிமேல் பிரதிபலிக்காது. இது எதிர்காலங்களில் பொருளாதாரத்தினை பாதிக்கக்கூடிய ஏதேனும் மாற்றங்களை முன்கூட்டியே அறியக்கூடிய இயலாற்றும் கொண்ட புலனாய்வு முகவரொருவராக, தரவுபகுப்பாய்வு சிறப்பியல்பாளராக அல்லது தரவு விஞ்ஞானியாக பரிணாமமடையும்.

உசாத்துணைகள்:

IFC Report, Central banks' use of and interest in "big data", Irving Fisher Committee on Central Bank Statistics (IFC), October 2015.

Markets Committee, "Market intelligence gathering at Central Banks", Bank of International Settlements, December 2016.

Nii Ayi Armah, 2013. "Big Data Analysis: The Next Frontier," Bank of Canada Review, Bank of Canada, vol. 2013(Summer), pages 32-39.

Organisation for Economic Cooperation and Development (OECD). 2015. OECD Digital Economy Outlook 2015. Paris: OECD Publishing.

Per Nymand-Andersen 2016. "Big data: the hunt for timely insights and decision certainty", Irving Fisher Committee on Central Bank Statistics, IFC Working Papers No 14.

முக்கிய ஏற்றுமதி வகைகளான வேளாண்மை, கைத்தொழில் மற்றும் கனிப்பொருட்களின் ஏற்றுமதிகள் பெறுமதி நியதிகளில் 2016இல் வளாச்சியடைந்தன. எனினும், அளவு நியதிகளில் கருதும்போது, வேளாண்மை ஏற்றுமதி சுருக்கத்தைப் பதிவுசெய்த வேளையில் கைத்தொழில் மற்றும் கனிப்பொருள் ஏற்றுமதிகள் சாதகமான செயல்திறனைப் பதிவுசெய்தன. இதற்கமைய தேறிய வெளிநாட்டுக் கேள்விக்கு சீராக்கம் செய்யப்பட்ட நடைமுறை விலைகளிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி ரூ.11,839.0 பில்லியனுக்கு 8.1 சதவீதத்தால் அதிகரித்ததுடன் இது 2016இல் 4.4 சதவீதம் கொண்ட உண்மை வளர்ச்சியையும் 3.6 சதவீதம் கொண்ட மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கியையும் உள்ளடக்கியிருந்தது.

## நுகர்வு

**மொத்தச் செலவினத்திற்கு 76.2 சதவீதப் பங்களிப்பைச் செய்த நுகர்வு செலவினம் பெயரளவு நியதிகளில் 2015இல் பதிவுசெய்யப்பட்ட 10.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இல் ரூ.9,018.9 பில்லியனுக்கு 4.1 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** நுகர்வுச் செலவினத்தில் ஏற்பட்ட இம்மெதுவான போக்கு தனியார் மற்றும் அரச நுகர்வு செலவினம் ஆகிய இரண்டிலும் 2015 உடன் ஒப்பிடுகையில் 2016இல் ஏற்பட்ட சுருக்கத்தினால் ஏற்பட்டதாகும். அதற்கேற்ப, மொத்த நுகர்வு செலவினத்தில் 88.7 சதவீதத்துக்கு வகைகூறும் தனியார் நுகர்வுச்செலவினம் 2015இன் 10 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இல் 4.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. தனியார் நுகர்வுச் செலவினத்தின் மெதுவடைவு, பெறுமதி மற்றும் அளவு நியதிகளில் நுகர்வுப் பொருட்கள் இறக்குமதிச் சுட்டெண்ணில் ஏற்பட்ட குறைவினால் பிரதிபலிக்கப்பட்டது. எனினும், நுகர்வுப் பொருட்களின் பெறுமதி நியதியிலான வீழ்ச்சியினைவிட அளவு நியதியிலான வீழ்ச்சி குறிப்பிடத்தக்கதாக இருப்பதால், நுகர்வுப் பொருட்கள் தொடர்பிலான இறக்குமதி விலைகளின் அதிகரிப்பானது தாக்கத்தைப் பிரதிபலித்தது. மேலும், உள்நாட்டுப் பக்கத்தில், அரச தீர்வை மற்றும் வரிகளின் அதிகரிப்பானது தனியார் நுகர்வு செலவினத்தின் மெதுவடைவுக்குப் பகுதியளவில் பங்களிப்புச் செய்தது. இதேவேளை, அரச நுகர்வுச் செலவினம்

2

2015 இன் 13.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இல் 3.1 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. அதற்கமைய, கல்வி மற்றும் நலம் போன்ற அரசின் தனிப்பட்ட இறுதி நுகர்வுச் செலவினம் மற்றும் பொது அரச பணிகள் மீதான ஒன்றுசேர்ந்த இறுதி நுகர்வுச் செலவினம் முறையே 2015இன் 22.6 சதவீதம் மற்றும் 9.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2016 இல் முறையே 2.7 சதவீதம் மற்றும் 3.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இம்மெதுவடைவிற்கு இவ்வாண்டில் அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட இறைத்திரட்சி நடவடிக்கைகள் காரணமாக அமைந்தன. அதற்கேற்ப, அரசின் ஊதியம் மற்றும் கூலிக்கான மீண்டெழும் செலவினம் 2015இன் 27.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இல் 2.6 சதவீத சுருக்கத்தைப் பதிவுசெய்த அதேவேளை, ஏனைய பொருட்கள் மற்றும் பணிகளின் கொள்வனவு 2015இன் 64.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் ஆண்டுப்பகுதியில் 19.5 சதவீதத்தால் சுருக்கமடைந்தது.

**தனியார் நுகர்வு செலவினத்துக்கான முக்கிய பங்களிப்புக் காரணியாக விளங்கும் உணவு மற்றும் வெறியமல்லா குடிபான வகைகள் 2015இல் பதிவுசெய்யப்பட்ட 18.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இல் 5.1 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தன.** ரூபா நியதிகளில், உணவு மற்றும் குடிபானங்களின் இறக்குமதிச் சுட்டெண் 2015 இன் 3.5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இல் 7.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. எனினும், இவ்வகைக்குள் இறக்குமதி அளவு சுட்டெண் சுருக்கமடைந்து பெயரளவு அதிகரிப்பானது உயர் விலைகளினால் தூண்டப்பட்டமையினைப் பிரதிபலிக்கின்றது. இதேவேளை, தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணில் (2013 = 100) உணவு பணவீக்கம் 2015இன் 5.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் 3.1 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. வேளாண்மைப் பொருட்களிலும் மற்றும் உணவு மற்றும் குடிபானங்களின் தயாரிப்பிலும் அவதானிக்கப்பட்ட பின்னடைவு இதற்கான முக்கிய காரணமாகும். அதற்கமைய, உணவு மற்றும் வெறியமல்லாக் குடிபான வகையின் பங்கு வீட்டலகு இறுதி நுகர்வுச் செலவினத்தில் 2015இன் 27.7 சதவீதத்திலிருந்து 2016இல் 27.9 சதவீதத்துக்கு அதிகரித்தது.

**வெறியக் குடிவகைகள், புகையிலை மற்றும் போதைப் பொருட்கள் மீதான தனியார் நுகர்வுச் செலவினம் 2015இன் 10.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இல் 16.7 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** இந்த அதிகரிப்பிற்கு, வெறியக் குடிவகைகள் மற்றும் புகையிலை மற்றும் போதைப்பொருட்களின் மீதான அரச தீர்வைகளின் மேல்நோக்கிய திருத்தங்கள் பகுதியளவில் காரணங்களாக விளங்கின. வெறியக் குடிவகைகள் மற்றும் புகையிலைகளின் பணவீக்கம் (தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண், 2013 = 100) இவை தொடர்பான விலைநிலைகளின் அதிகரிப்பைப் பிரதிபலிக்கும் முகமாக 2015இன் 17.5 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2016இல் 22.1 சதவீதமாக அதிகரித்தது. இதற்கமைய, தனியார் நுகர்வு செலவினத்தில் இவ்வகையின் பங்கு 2015இன் 1.9 சதவீதத்திலிருந்து 2016இல் 2.1 சதவீதத்திற்கு அதிகரித்தது.

**தனியார் நுகர்வு செலவினத்தில் உடை மற்றும் காலணி மீதான செலவினம் 2015இன் 7.7 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இன் 17.7 சதவீதத்தால் சுருக்கமடைந்தது.**

அட்டவணை 2.10

மொத்த கேள்வி (அ)

| விடயம் | நடைமுறைச் சந்தை விலைகள் (ரூ.மில்) | | | நிலையான (2010) விலைகள் (ரூ.மில்) | | |
|---|---|---|---|---|---|---|
| | 2014 (ஆ) | 2015 (ஆ)(இ) | 2016 (இ) | 2014 (ஆ) | 2015 (ஆ)(இ) | 2016(இ) |
| **அ. உள்நாட்டுக் கேள்வி** | | | | | | |
| நுகர்வு | 7,850,006 | 8,661,886 | 9,018,895 | 6,109,435 | 6,645,230 | 6,704,462 |
| (% மாற்றம்) | 8.6 | 10.3 | 4.1 | 3.9 | 8.8 | 0.9 |
| மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் | 3,347,638 | 3,114,674 | 3,723,875 | 2,896,597 | 2,931,967 | 3,463,352 |
| (% மாற்றம்) | 5.0 | -7.0 | 19.6 | 11.5 | 1.2 | 18.1 |
| **மொத்த உள்நாட்டு கேள்வி** | **11,197,644** | **11,776,561** | **12,742,771** | **9,006,032** | **9,577,198** | **10,167,814** |
| **(% மாற்றம்)** | **7.5** | **5.2** | **8.2** | **6.2** | **6.3** | **6.2** |
| **ஆ. வெளிநாட்டுக் கேள்வி** | | | | | | |
| பொருட்களினதும் பணிகளினதும் ஏற்றுமதிகள் | 2,185,039 | 2,301,065 | 2,538,695 | 1,533,668 | 1,605,147 | 1,593,861 |
| (% மாற்றம்) | 12.1 | 5.3 | 10.3 | 4.3 | 4.7 | -0.7 |
| பொருட்களினதும் பணிகளினதும் இறக்குமதிகள் | 3,021,531 | 3,125,931 | 3,442,490 | 2,304,271 | 2,548,455 | 2,749,649 |
| (% மாற்றம்) | 8.9 | 3.5 | 10.1 | 9.6 | 10.6 | 7.9 |
| **தேறிய வெளிநாட்டுக் கேள்வி** | **-836,493** | **-824,865** | **-903,795** | **-770,603** | **-943,307** | **-1,155,787** |
| **(% மாற்றம்)** | **-1.2** | **1.4** | **-9.6** | **-21.9** | **-22.4** | **-22.5** |
| **இ. மொத்த கேள்வி** | **10,361,151** | **10,951,695** | **11,838,975** | **8,235,429** | **8,633,890** | **9,012,026** |
| **(% மாற்றம்)** | **8.0** | **5.7** | **8.1** | **5.0** | **4.8** | **4.4** |

(அ) தரவானது தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் 2010 அடியாண்டின் மொ.உ.உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது
(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானது

மூலங்கள் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

இம்மெதுவடைவானது, உடை மற்றும் காலணிகளின் ரூபா பெறுமதி இறக்குமதி சுட்டெண்ணின் 2015இன் 43.7 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016 இன் 0.4 சதவீதம் என்ற மெதுவான வளர்ச்சியின் மூலம் பிரதிபலிக்கப்படுகின்றது. மேலும், உடை மற்றும் காலணிகளின் இறக்குமதி அளவுச் சுட்டெண் 2015இன் 26.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இல் 13.7 சதவீதத்தால் சுருக்கமடைந்தது. இதன் விளைவாக, தனியார் நுகர்வு செலவினத்தின் இவ்வகையின் பங்கானது 2015இன் 3.9 சதவீதத்திலிருந்து 2016இல் 3.0 சதவீதமாக குறைவடைந்தது.

**வீடமைப்பு, நீர், மின்வலு, வாயு மற்றும் ஏனைய எரிபொருள் வகை மீதான தனியார் நுகர்வுச் செலவினம் 2015இல் பதிவுசெய்யப்பட்ட 11.5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இல் 9.5 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** நாட்டின் வீட்டலகுகளின் மின்வலு நுகர்வின் தொடர்ச்சியான அதிகரிப்பினைப் பிரதிபலிக்கும் விதத்தில் வீட்டுத் துறைக்கான மின்வலு விற்பனை 2015இன் 10.1 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இல் 8.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. மேலும், உள்நாட்டு துறைக்கான நீர் அலகுகளின் பகிர்ந்தளிப்பு 2015இன் 7.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் 12.9 சதவீதத்தால் அதிகரித்தது. இதேவேளை மின்வலு மற்றும் நீர் வரிக்கட்டணம் மற்றும் டீசல் மற்றும் பெற்றோலின் விலைகள் இவ்வாண்டில் நிலையாக காணப்பட்டவேளையில், 2016 நவெம்பரில் திரவபெற்றோலிய வாயுவின் விலை கீழ்நோக்கி திருத்தம் செய்யப்பட்டது. இவ்வகையிலுள்ள விடயங்கள் மீதான சாதகமான விலை அழுத்தம் 2016இல் வீடமைப்பு, நீர், மின்வலு, வாயு மற்றும் ஏனைய எரிபொருள் வகையின் பணவீக்கத்தில் (தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண், 2013 = 100) 0.1 சதவீத மெதுவான வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2015இல் 4.2 சதவீத வளர்ச்சியை இவ்வகை பதிவுசெய்திருந்தது.

**போக்குவரத்துச் செயற்பாடுகள் மீதான தனியார் நுகர்வுச் செலவினம் 2015இன் 7.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2016இல் 3.2 சதவீதத்தால் வளர்ச்சியடைந்துள்ளது.** போக்குவரத்து தொடர்பான பொருட்கள் தனியார் நுகர்வு செலவினத்தைப் பிரதிபலிக்கும் உந்து ஊர்திகள் மற்றும் உந்து ஈருளிகளின் பதிவு இவ்வாண்டில் குறிப்பிடத்தக்க சுருக்கத்தைப் பதிவுசெய்தது. எனினும், பயணிகள் போக்குவரத்துக் கட்டணங்கள் 2016 ஓகத்திலிருந்து அதிகரிக்கப்பட்டமையினால் போக்குவரத்து மீதான தனியார் நுகர்வுச் செலவினம் அதிகரித்தது.

**நலச் செயற்பாடுகள் மீதான தனியார் நுகர்வு செலவினத்தின் வளர்ச்சி, 2015இன் 22.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2016இல் மெதுவடைந்து 10.4 சதவீதத்தால் வளர்ச்சியடைந்திருக்கையில் கல்வி மீதான அச்செலவினம் முன்னைய ஆண்டின் 0.3 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2016இல் 1.8 சதவீதத்தால் சுருக்கமடைந்தது.** கல்வி மற்றும் நலச்செயற்பாடுகளில் அவதானிக்கப்பட்ட பின்னடைவுக்கு கேள்வியினை குறைக்கும் முகமாக இவ்வாண்டில் விதிக்கப்பட்ட மறைமுக வரிகள் பகுதியளவில் காரணமாக அமைந்தன.

2

அட்டவணை 2.11
நடைமுறைச் சந்தை விலைகளில் தனியார் நுகர்வுச் செலவினத்தின் உள்ளமைப்பு (அ)

| வகை | மொத்த தனியார் நுகர்வுச் செலவினத்தின் பங்கு (%) | | | சதவீத மாற்றம் (%) | |
|---|---|---|---|---|---|
| | 2014 (ஆ) | 2015 (ஆ)(இ) | 2016(இ) | 15/14 (ஆ)(இ) | 16/15(இ) |
| 1. உணவு மற்றும் வெறியமல்லா குடிபானங்கள் | 25.7 | 27.7 | 27.9 | 18.4 | 5.1 |
| 2. வெறியமுள்ள குடிபானங்கள், புகையிலை மற்றும் போதைப்பொருள் | 1.9 | 1.9 | 2.1 | 10.3 | 16.7 |
| 3. புடவையும், காலணியும் | 3.9 | 3.9 | 3.0 | 7.7 | -17.7 |
| 4. வீடமைப்பு, நீர், மின்சாரம், எரிவாயு மற்றும் ஏனைய எரிபொருட்கள் | 10.7 | 10.9 | 11.4 | 11.5 | 9.5 |
| 5. தளபாடமிடுதல், வீட்டுச் சாதனங்கள் மற்றும் வழமையான வீட்டுத்துறையின் பராமரிப்பு | 1.3 | 1.2 | 1.4 | 1.0 | 18.1 |
| 6. நலம் | 2.6 | 2.9 | 3.1 | 22.1 | 10.4 |
| 7. போக்குவரத்து | 22.2 | 21.7 | 21.5 | 7.6 | 3.2 |
| 8. தொடர்பூட்டல் | 0.9 | 1.0 | 1.0 | 17.9 | 8.5 |
| 9. பொழுதுபோக்கு மற்றும் கலாச்சாரம் | 1.3 | 1.7 | 1.5 | 44.5 | -9.8 |
| 10. கல்வி | 1.8 | 1.6 | 1.5 | -0.3 | -1.8 |
| 11. விடுதிகள் மற்றும் உணவகங்கள் | 4.4 | 4.1 | 4.2 | 1.7 | 8.0 |
| 12. பல்வகைப் பொருட்களும் பணிகளும் | 25.3 | 24.2 | 24.9 | 5.0 | 7.2 |
| 13. வதிவோரினால் நேரடி வெளிநாட்டு கொள்வனவுகள் | 2.5 | 2.7 | 2.9 | 16.5 | 15.0 |
| 14. கழிக்குக: வதிவற்றோரினால் உள்நாட்டு சந்தையில் நேரடி கொள்வனவுகள் | 4.6 | 5.3 | 6.5 | 27.4 | 26.3 |
| மொத்த தனியார் நுகர்வுச் செலவு | 100.0 | 100.0 | 100.0 | 10.0 | 4.3 |

(அ) தரவானது தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் 2010 அடியாண்டின் மொ.உ.உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) திருத்தப்பட்டது.

மூலங்கள் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

2

மறுபக்கம், மருந்து தொடர்பான உற்பத்தி விலைகளின் கீழ் நோக்கிய திருத்தம் மூலமான நன்மைகள் நலச் செலவினத்தை கட்டுப்படுத்த பங்களிப்பு செய்திருக்கலாம். தனியார் நுகர்வு செலவினத்தில் நலம் மற்றும் கல்வி செலவினத்தின் பங்குகள் முறையே குறைந்தளவிலான 3.1 சதவீதம் மற்றும் 1.5 சதவீதத்தை பதிவுசெய்தன. அடிப்படை நலம் மற்றும் கல்வி பணிகளை கட்டணமின்றி வழங்குவதில் அரசாங்கம் ஈடுபடுவதால் இவ்வகைகளில் வீட்டலகுகளின் நுகர்வு செலவினம் குறைவடைந்து காணப்பட்டது. இப்போக்கு உற்பத்தி அணுகுமுறை மதிப்பீடுகளின்படி, கல்வி மற்றும் மனித நல செயற்பாடுகளின் பெறுமதிகூட்டல் அதிகளவில் அரச துறையினால் உருவாக்கப்பட்டிருப்பதன் மூலம் பிரதிபலிக்கப்படுகின்றது.

**தொடர்பூட்டல் மீதான தனியார் நுகர்வுச் செலவினம் 2015இன் 17.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இல் 8.5 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்தது. தொலைத்தொடர்பூட்டல் பணிகள் மீதான பெறுமதிசேர் வரியின் விதிப்பு இவ்வகை அலகிற்கான விலையை அதிகரித்து கேள்வியைக் குறைத்தது.** மேலும், தொலைத்தொடர்பூட்டலின் பொதுவான ஆகக் குறைந்த கட்டணங்கள் இவ்வாண்டில் மேல் நோக்கி திருத்தம் செய்யப்பட்டன. இது, தொடர்பூட்டல் வகையின் பணவீக்கத்தின் (தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண், 2013 = 100) 2015இன் 0.1 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2016இல் 6.8 சதவீத அதிகரிப்பில் பிரதிபலிக்கின்றது. மேலும், தொலைபேசி மற்றும் மொத்த இணைய இணைப்புக்கள் 2015இன் முறையே 8.8 சதவீதம் மற்றும் 20.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டு காலத்தில் மெதுவடைந்து முறையே 6.6 சதவீதம் மற்றும் 20.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தன. மேலும், தொலைத்தொடர்பூட்டல் சாதனங்களின் இறக்குமதி, ரூபா பெறுமதி இறக்குமதி சுட்டெண்ணிற்கு ஏற்ப இவ்வாண்டில் மெதுவடைந்தது.


**உணவகங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகளிலான தனியார் நுகர்வுச் செலவினம் 2015இன் 1.7 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இல் 8.0 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்து தொடர்ந்து விரிவாக்கமடைந்தது.** இவ்வளர்ச்சிக்கு, மாறிவரும் வாழ்க்கை முறையுடன் சுற்றுலாவிடுதிகள், சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் உணவக வசதிகளின் அதிவேக அபிவிருத்திக்கான உகந்த சூழல், அதிகரித்து வரும் உலக உணவுச் சங்கலிகள் அதேபோன்று அத்தகைய நடவடிக்கைகளுக்கான தொடர்ச்சியான கேள்விக்கு வசதியளிக்கும் சுற்றுலாவருகைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பன பெருமளவிற்கு காரணங்களாக அமைந்தன.

**ஒன்றுசேர்ந்த இறுதி நுகர்வுச் செலவினத்தையும் தனிப்பட்ட இறுதிநுகர்வு செலவினத்தையும் உள்ளடக்கிய அரச நுகர்வு செலவினம் இவ்வாண்டில் அரசினால் அமுல்படுத்தப்பட்ட இறைதிரட்சியுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் மெதுவடைந்தது.** அரச நுகர்வு செலவினத்தின் முக்கிய வகையான ஒன்றுசேர்ந்த இறுதி நுகர்வு செலவினம் 2016இல் அரச நுகர்வு செலவினத்தின் 67.7 சதவீதப் பங்கினை வகித்தது. இச்செலவினமானது முழுச் சமுதாயத்தினது நன்மைக்காக பொது அரசாங்கத்தால் செலவழிக்கப்பட்டதை பிரதிபலிக்கின்றது. இது, பொது அரச பணிகள், பாதுகாப்பு, பொதுமக்கள் ஒழுங்கு மற்றும் பாதுகாப்பு, பொருளாதார விடயங்கள், சூழல் பாதுகாப்பு, வீடமைப்பு மற்றும் சமுதாய பொது வசதிகள், பொழுதுபோக்கு, கலாசாரம் மற்றும் சமயம் மற்றும் சமூக பாதுகாப்பு மீதான செலவினங்களை உள்ளடக்குகின்றது. அதற்கமைய, பெயரளவு நியதிகளில் அரச ஒன்றுசேர்ந்த இறுதி நுகர்வுச் செலவினம் 2015இன் 9.5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இல் 3.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இம்மெதுவடைவிற்கு, பாதுகாப்பிற்கான செலவினம் 2015இன் 4.2 சதவீதத்திற்கு எதிராக இவ்வாண்டில் பதிவுசெய்யப்பட்ட 9.0 சதவீதச் சுருக்கமே காரணமாகும். இதேவேளை தனிப்பட்ட வீட்டலகுகளின் நன்மைக்காக கல்வி மற்றும் நலத்திற்காக பொது அரசாங்கத்தினால் செலவழிக்கப்பட்ட தனிப்பட்ட இறுதிநுகர்வுச் செலவினம் 2015இன் 22.6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இல் மெதுவடைந்து 2.7 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்தது. விரிவாக்கப்பட்ட தகவல்களைக் கருத்தில் கொள்ளும்போது, கல்வி மற்றும் நலச்செயற்பாடுகளின் செலவினம் 2015இன் முறையே 28.4 சதவீதம் மற்றும் 16.1 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இல் முறையே 1.2 சதவீதம் மற்றும் 4.5 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.

## முதலீடு

**முதலீட்டு செலவினம் 2015இன் 7.0 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2016இல் மீட்சியடைந்து 19.6 சதவீதம் எனும் ஆரோக்கியமான வளர்ச்சி வீதத்தைப் பதிவுசெய்தது.** கட்டடவாக்க செலவினம் 2015இன் 0.2 சதவீத குறுகிய சுருக்கத்திலிருந்து மீட்சியடைந்து 2016இல் குறிப்பிடத்தக்களவான 18.0 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்து முதலீட்டின் வளர்ச்சிக்கு பெருமளவில் பங்களிப்புச்செய்தது. பாரியளவிலான அரசின் முதலீட்டுச் செயற்திட்டங்கள், அதேபோன்று தனியார் துறையின் முதலீடுகளின் ஈடுபாடு என்பன கட்டடவாக்கச் செயற்பாடுகளின் நோக்கத்துக்காக வர்த்தக வங்கிகளினால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடனில் ஏற்பட்ட

வரைபடம் 2.8
முதலீட்டுச்சபை தொழில் முயற்சிகளின்
வெளிநாட்டு நேரடி முதலீடுகள் (அ) (ஐ.அ.டொ. மில்லியன்)




(அ) கடன்கள் உள்ளடங்கலாக
மூலம்: இலங்கை முதலீட்டுச் சபை

குறிப்பிடத்தக்க வளர்ச்சியினால் பிரதிபலிக்கப்பட்டதுடன் இது முதலீட்டின் வளர்ச்சிக்கும் பெரும்பங்களிப்பைச் செய்தது. மேலும், கட்டடவாக்கத்தில் பயன்படுத்தப்பட்ட கட்டடவாக்கப் பொருட்களின் இறக்குமதியில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியினாலும் பிரதிபலிக்கப்பட்டதுடன், பொறி மற்றும் கருவி மற்றும் ஆயுத முறைமைகள் மீதான செலவினம் 2015இன் 2.0 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இல் 7.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இவ்வளர்ச்சி, பொறி மற்றும் கருவி இறக்குமதிகளின் பெறுமதி மற்றும் அளவு நியதிகளில் இவ்வாண்டில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சினால் பிரதிபலிக்கப்பட்டது. மேலும், போக்குவரத்துக் கருவி மீதான முதலீடு, தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழிநுட்ப கருவி மற்றும் புலமைச் சொத்து உற்பத்திகள் முதலீட்டு செயற்பாடுகளில் அவதானிக்கப்பட்ட வளர்ச்சிக்கு சாதகமாக பங்களித்த வேளையில், உருவாக்கப்பட்ட உயிரியல் வளங்கள் 2016இல் சுருக்கமடைந்தன. மேலும், அதற்கு மேலாக பெறுமதிகளின் விற்பனவுகளை கழித்த கையேற்புக்கள் மற்றும் இருப்புக்களிலான மாற்றங்கள் 2015இன் 56.1 சதவீத சுருக்கத்திலிருந்து மீட்சியடைந்து 2016இல் 121.8 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்து முதலீட்டின் வளர்ச்சிக்கு ஆதரவளித்தது.

**முதலீட்டு சபையின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களுக்கான கடன்கள் உள்ளடங்கலாக வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல்கள் 2015இல் ஐ.அ.டொலர் 969.7 மில்லியன் உடன் ஒப்பிடுகையில் 2016இல் ஐ.அ.டொலர் 801 மில்லியனாக, 17.4 சதவீத ஆண்டுக்கு ஆண்டு வீழ்ச்சியினை பிரதிபலித்தது.** ஆண்டு காலத்தில் வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாச்சல்களின் சுருக்கத்திற்கு முக்கிய காரணம் உட்கட்டமைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள், சேவைகள் மற்றும் தயாரிப்புகள் என்பவற்றுக்கான உட்பாச்சலானது முறையே 25.1 சதவீதம், 17.0 சதவீதம் மற்றும் 3.6 சதவீதத்தால் குறைந்தமையே ஆகும். ஆண்டு காலப்பகுதியில் பெரும்பாலான வெளிநாட்டு நேரடி முதலீடுகள் உட்கட்டமைப்பு வெளிநாட்டு நேரடி முதலீட்டின் 42.4 சதவீதத்தை பிரதிபலிக்கின்ற வகையில் (ஐ.அ.டொலர் 339.5 மில்லியன்) காணப்பட்டன. தயாரிப்பு துறையிலான வெளிநாட்டு நேரடி முதலீடுகளானது மொத்த வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாச்சல்களின் (ஐ.அ.டொலர் 247.7 மில்லியன்) 30.9 சதவீதத்தினை பிரதிபலிக்கின்ற அதேவேளையில் ஐ.அ.டொலர் 211.9 மில்லியன் பெறுமதியை கொண்ட சேவைத் துறையிலான வெளிநாட்டு நேரடி முதலீடுகள், 2016ஆம் ஆண்டு காலப்பகுதியின் மொத்த வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாச்சல்களின் ஏறத்தாழ 26.5 சதவீதத்தினை பிரதிபலித்திருந்தது.



அட்டவணை 2.12
இலங்கை முதலீட்டுச்சபை மற்றும் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு என்பவற்றின்
கீழ் பதிவு செய்யப்பட்ட தொழில் முயற்சிகளிலுள்ள முதலீடும் தொழில் நிலையும்

| | செயற்றிட்ட எண்ணிக்கை | | எதிர்பார்க்கப்பட்ட முதலீடுகள் (ரூ. மில்லியன்) | | | | | | தொழிலாளர் (எண்ணிக்கை) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2015 (அ) | 2016 (ஆ) | 2015 (அ) | | | 2016 (ஆ) | | | 2015 (அ) | 2016 (ஆ) |
| | | | வெளிநாடு | உள்நாடு | மொத்தம் | வெளிநாடு | உள்நாடு | மொத்தம் | | |
| முதலீட்டுச்சபை (1978ம் ஆண்டு 4ம் இல. சட்டத்தின் கீழ்) | | | | | | | | | | |
| ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் | 241 | 205 | 337,716 | 257,907 | 595,623 | 1,009,516 | 347,838 | 1,357,354 | 38,408 | 27,153 |
| பிரிவு 17இன் கீழ் (இ) | 224 | 191 | 335,840 | 256,535 | 592,375 | 1,008,467 | 347,766 | 1,356,233 | 37,616 | 26,850 |
| பிரிவு 16இன் கீழ் | 17 | 14 | 1,876 | 1,373 | 3,248 | 1,049 | 72 | 1,121 | 792 | 303 |
| பிரிவு 17இன் கீழ் ஒப்பந்தமளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் (இ) | 155 | 180 | 147,631 | 141,675 | 289,307 | 528,215 | 226,566 | 754,781 | 23,426 | 27,300 |
| பிரிவு 17இன் கீழ் அடையப்பட்ட முதலீடுகள் (ஈ)(உ) | 1,989 | 1,929 | 1,236,251 | 755,557 | 1,991,808 | 1,345,715 | 834,098 | 2,179,813 | வி.கி. | வி.கி. |
| வர்த்தகத் தொழிற்பாடுகளின் செயற்றிட்டங்கள் (ஈ) | 2,758 | 2,831 | 446,553 | 4,166,703 | 4,613,256 | 477,167 | 4,210,416 | 4,687,583 | 414,744 | 424,320 |
| பிரிவு 17இன் கீழ் (இ) | 2,032 | 2,097 | 411,962 | 4,155,929 | 4,567,892 | 441,744 | 4,199,306 | 4,641,050 | 377,586 | 387,112 |
| பிரிவு 16இன் கீழ் | 726 | 734 | 34,591 | 10,774 | 45,365 | 35,423 | 11,110 | 46,534 | 37,158 | 37,208 |
| கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு பதிவு செய்யப்பட்ட கம்பனிகள் (ஈ) | 2,276 | 2,436 | - | - | 204,522 | - | - | 204,975 | 311,698 | 315,681 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) விரிவாக்கப்பட்ட செயற்றிட்டங்கள் உள்ளடங்கலாக
(ஈ) ஆண்டின் இறுதியில் ஒன்று சேர்ந்த தொகை
(உ) ஒன்றுசேர்ந்த உண்மையான முதலீடுகளின் பெறுமதி வழங்கப்பட்டுள்ளது.

மூலங்கள்: இலங்கை முதலீட்டுச் சபை
கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு

குறிப்பு :முதலீட்டுச் சபையின் 17ஆம் பிரிவின் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட மற்றும் ஒப்பந்தமளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் முதலீட்டு மட்டம் அல்லது வேறு ஏதேனும் குறிப்பிட்ட தேவைப்பாடுகளின் பூர்த்திக்குட்பட்டு சுங்க மற்றும் செலாவணி கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகளில் இருந்து விலக்களிக்கப்பட்டன.

**முதலீட்டுச் சபை சட்டத்தின் பிரிவு 16 மற்றும் 17இன் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்கான மொத்த மதிப்பிடப்பட்ட முதலீடுகளானது ரூ.1,357.4 பில்லியன் ஆக 2016இல் மதிப்பிடப்பட்டது.** 2015ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் பணிகள், இரசாயனங்கள், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர் மற்றும் பிளாத்திக்கு, உலோகமற்றவைகள் மற்றும் கனிம உற்பத்திகள் போன்ற துறைகளில் ஒப்புதலளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் முதலீட்டு பெறுமதியானது அதிகரித்துள்ளது. எவ்வாறாயினும், கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, புடவை, அணியும் ஆடைகள் மற்றும் தோல் பொருட்கள், உருவமைக்கப்பட்ட உலோகம், பொறிகள் மற்றும் போக்குவரத்து கருவி போன்ற செயற்றிட்டங்களுக்கான உட்பாய்ச்சலானது குறைந்தளவு முதலீட்டு பெறுமதியினை பதிவுசெய்துள்ளது. பிரிவு 17இன் கீழ் ஒப்பந்தமிடப்பட்ட செயற்றிட்டங்களின் மதிப்பிடப்பட்ட முதலீட்டு பெறுமதியானது 2015ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 160.9 சதவீத அதிகரிப்புடன் ரூ.754.8 பில்லியன் ஆக காணப்பட்டது. முதலீட்டு சபை சட்டத்தின் பிரிவு 17 மற்றும் 16 இன் கீழ் வர்த்தக தொழிற்பாடுகளை ஆரம்பித்த செயற்றிட்டங்களின் மதிப்பிடப்பட்ட முதலீடுகள் 2016ஆம் ஆண்டின் இறுதியில் ரூ.4,687.6 பில்லியன் ஆக காணப்பட்டது. முதலீட்டு சபையின் திரண்ட கிடைக்கப்பெற்ற முதலீடுகள் 2016ஆம் ஆண்டின் இறுதியில் ரூ.2,179.8 பில்லியனாக காணப்பட்டது.

## மூலவளங்களின் கிடைப்பனவு மற்றும் பயன்பாடு

**பொருளாதாரத்தில் கிடைக்கத்தக்கதாகவுள்ள மூலவளங்களின் அளவு பெயரளவு நியதிகளில் 2016இல் ரூ.15,281.5 பில்லியனுக்கு விரிவடைந்து 2015இல் பதிவுசெய்யப்பட்ட 5.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது 8.6 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்தது.** பிரிக்கப்பட்டத் தரவுகளை கருத்தில் கொள்ளும் போது, 2015 ஆண்டுப்பகுதியுடன் ஒப்பிடும் போது மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் வெளிநாட்டு மூலவளங்கள் பெயரளவு நியதிகளில் ஆண்டுப்பகுதியில் அதிகரித்திருந்தன. உள்நாட்டு மூலவளங்களின் பெயரளவு நியதிகளில் ஏற்பட்ட வளர்ச்சி மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கியின் அதிகரிப்பினால் பிரதிபலிக்கப்பட்டவாறு உள்நாட்டு மூலவளங்களின் பெயரளவு வளர்ச்சிக்குப் பங்களித்தது. உள்நாட்டு மூலவளங்களின் வளர்ச்சிக்கு கைத்தொழில் மற்றும் பணிகள் நடவடிக்கைகள் தூண்டுதலாக விளங்கிய வேளையில், வேளாண்மை மூலவளங்கள் ஆண்டுகாலப்பகுதியில் வீழ்ச்சியைக் காட்டின. வெளிநாட்டு மூலவளங்களின் நியதிகளில், பெயரளவு நியதிகளில் இறக்குமதிச் செலவினத்தின் அதிகரிப்பிற்கு உள்நாட்டு நாணயத்தின் தேய்வு காரணமாக அதிகரித்த இறக்குமதி விலைகள் பகுதியளவில் காரணமாகவிருந்தது. எவ்வாறாயினும், உண்மை நியதிகளில் மொத்த மூலவளங்களின் கிடைப்பனவில் ஏற்பட்ட வளர்ச்சி 2015இன் 6.1 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது 2016இல் 5.2 சதவீதத்திற்கு மெதுவடைந்தமைக்குப் பிரதானமாக மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மெதுவான வளர்ச்சி மற்றும் உண்மை நியதிகளில் வெளிநாட்டு மூலவளங்களின் வளர்ச்சி என்பன காரணங்களாகும்.

அட்டவணை 2.13

### நடைமுறைச் சந்தை விலைகளில் மொத்த மூலவளங்களும் அவற்றின் பயன்பாடும் (அ) (இ)


| விடயம் | சதவீதப் பங்கு % | | சதவீத வளர்ச்சி % | |
|---|---|---|---|---|
| | 2015(ஆ) | 2016(ஆ) | 2015 | 2016 |
| **அ. மூலவளங்கள்** | | | | |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி | 77.8 | 77.5 | 5.7 | 8.1 |
| பொருட்கள் மற்றும் பணிகளினது இறக்குமதிகள் | 22.2 | 22.5 | 3.5 | 10.1 |
| **மொத்தம்** | 100.0 | 100.0 | 5.2 | 8.6 |
| **ஆ. பயன்பாடு** | | | | |
| நுகர்வு | 61.5 | 59.0 | 10.3 | 4.1 |
| மொத்த நிலையான மூலதனவாக்கம் | 20.6 | 21.4 | 1.1 | 12.3 |
| பெறுமதியானவற்றின் விற்பனையைக் கழித்த கையேற்புக்கள் மற்றும் இருப்புக்களின் மாற்றம் | 1.5 | 3.0 | -56.1 | 121.8 |
| பொருட்கள் பணிகளினது ஏற்றுமதி | 16.3 | 16.6 | 5.3 | 10.3 |
| **மொத்தம்** | **100.0** | **100.0** | **5.2** | **8.6** |

(அ) தரவானது தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் 2010 அடியாண்டின் மொ.உ.உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது
(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானது

மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 2.9

### 2016 இல் பொருளாதாரம் (நடைமுறை விலைகளில்) (அ)




(அ) தரவானது தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் 2010 அடியாண்டின் மொ.உ.உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது

மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

**கிடைக்கத்தக்கதாகவுள்ள மொத்த மூலவளங்களில் பெரும்பங்கு நுகர்வுத் தேவைக்காகப் பயன்படுத்தப்பட்டதோடு 2016இல் மொத்த மூலவளங்களில் 59.0 சதவீதத்திற்கும் வகைகூறியது.** இது, 2015இன் 61.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்தமைக்கு நுகர்வின் வளர்ச்சியில் ஏற்பட்ட மெதுவான போக்கே காரணமாகும். முதலீட்டு காரணங்களுக்காக பயன்படுத்தப்பட்ட மூலவளங்களின் பங்கானது 2015இன் 22.1 சதவீதத்துடன் ஒப்பிடும்போது 2016இல் 24.4 சதவீதத்திற்கு விரிவடைந்திருந்தது. இதற்கு மொத்த உள்நாட்டு நிலையான மூலதன உருவாக்கம் 2015இன் 1.1 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது 2016இல் 12.3 சதவீதத்திற்கு வளர்ச்சியடைந்தமை காரணமாக அமைந்ததோடு ஆண்டுப்பகுதியில் மொத்த மூலவளங்களின் பங்கினை 21.4 சதவீதத்திற்கு அதிகரித்தது. அதேவேளையில் மொத்த மூலவளங்களின் பயன்பாட்டின் சதவீதமாக ஏற்றுமதிப் பங்கானது 2015இன் 16.3 சதவீதத்துடன் ஒப்பிடும்போது 2016ஆம் ஆண்டுப்பகுதியில் 16.6 சதவீதமாக சிறிதளவான முன்னேற்றத்தைப் பதிவுசெய்தமைக்கு ஒப்பீட்டளவில் உயர்ந்த ஏற்றுமதி விலைகளின் காரணமாக பெயரளவு நியதிகளில் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பே காரணமாகும். உண்மை நியதிகளில், மூலவளங்களின் பயன்பாடானது நுகர்வில் ஏற்பட்ட பின்னடைவு மற்றும் ஏற்றுமதியின் சுருக்கம் போன்ற காரணங்களினால் குறைவடைந்திருந்தது.

## சேமிப்புக்கள்

**பொருளாதாரத்தின் உள்நாட்டு சேமிப்புக்கள் 2016இல் ரூ.2,820.1 பில்லியனினை அடைந்ததோடு 2015இல் பதிவுசெய்யப்பட்ட 8.8 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடும்போது 2016இல் 23.2 சதவீத குறிப்பிடத்தக்க வளர்ச்சியினை பதிவுசெய்தது.** 2016இல் பதிவுசெய்யப்பட்ட உள்நாட்டு சேமிப்புக்களில் ஏற்பட்ட இம்முன்னேற்றமானது, தனியார் சேமிப்புக்களில் அவதானிக்கப்பட்ட ஆரோக்கியமான வளர்ச்சியானது, அரசிறையில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் இறைத்திரட்சியை நோக்கி மேற்கொள்ளப்பட்ட ஒன்றிணைந்த முயற்சியினைத் தொடர்ந்து 2015 உடன் ஒப்பிடுகையில் அரச மீண்டெழும் செலவினத்தில் ஏற்பட்ட மெதுவான போக்கு என்பனவற்றின் இணைந்த பெறுபேற்றின் விளைவாக அரச குறைச்சேமிப்பில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியுடன் சேர்ந்து கொண்டமையினால் தூண்டப்பட்டது. இதன்விளைவாக, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக உள்நாட்டுச் சேமிப்புக்களின் 2015ஆம் ஆண்டின் 20.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2016இல் 23.8 சதவீதமாக அதிகரித்திருந்தது.

**பொருளாதாரத்தின் தேசிய சேமிப்புக்கள் 2016இல் ரூ.3,427.1 பில்லியனை பதிவுசெய்ததோடு இது 2015இல் காணப்பட்ட 7.7 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 20.2 சதவீதத்திற்கு வளர்ச்சியடைந்தது.** இந்த மீட்சிக்குப் பிரதானமாக உள்நாட்டு சேமிப்புக்களில் காணப்பட்ட குறிப்பிடத்தக்களவான வளர்ச்சியே காரணமாக அமைந்தது. மேலும், உலகின் எஞ்சிய பகுதியிலிருந்தான தேறிய நடைமுறை மாற்றல்கள் ஆண்டுப் பகுதியில் 11.6 சதவீதமாக வளர்ச்சியடைந்ததுடன் தேசிய சேமிப்புக்கு சாதகமாக பங்களிப்பு செய்தது. அதேவேளையில், உலகின் எஞ்சிய பகுதியிலிருந்தான தேறிய முதன்மை வருமானம் முன்னைய ஆண்டுப் பகுதியின் மெதுவான வேகத்துடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுப் பகுதியில் சுருக்கமடைந்தது. அதன்படி, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தேசிய சேமிப்புக்களின் சதவீதமானது 2015இன் 26.0 சதவீதத்துடன் ஒப்பிடும்போது 2016இல் 28.9 சதவீதமாக முன்னேற்றமடைந்திருந்தது. எனினும், முதலீட்டுச்

அட்டவணை 2.14

நடைமுறைச் சந்தை விலைகளில் நுகர்வு, முதலீடு மற்றும் சேமிப்பு (அ) (இ)

| விடயம் | ரூ.மில்லியன் | | (%) மாற்றம் | | மொ.உ.உ.இன் சதவீதமாக | |
|---|---|---|---|---|---|---|
| | 2015 (ஆ) | 2016 | 2015 (ஆ) | 2016 | 2015 (ஆ) | 2016 |
| 1. சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி | 10,951,695 | 11,838,975 | 5.7 | 8.1 | 100.0 | 100.0 |
| 2. நுகர்வுச் செலவினம் | 8,661,886 | 9,018,895 | 10.3 | 4.1 | 79.1 | 76.2 |
| தனியார் | 7,677,131 | 8,003,789 | 10.0 | 4.3 | 70.1 | 67.6 |
| அரசு | 984,755 | 1,015,107 | 13.4 | 3.1 | 9.0 | 8.6 |
| 3. முதலீடு | 3,114,674 | 3,723,875 | -7.0 | 19.6 | 28.4 | 31.5 |
| 4. உள்நாட்டுச் சேமிப்புக்கள் | 2,289,809 | 2,820,080 | -8.8 | 23.2 | 20.9 | 23.8 |
| தனியார் | 2,536,588 | 2,891,799 | -3.9 | 14.0 | 23.2 | 24.4 |
| அரசு | -246,779 | -71,719 | -93.3 | 70.9 | -2.3 | -0.6 |
| 5. உள்நாட்டுச் சேமிப்புக்கள் - முதலீட்டு இடைவெளி | -824,865 | -903,795 | 1.4 | -9.6 | -7.5 | -7.6 |
| 6. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் (ஈ) | -281,337 | -332,758 | -19.2 | -18.3 | -2.6 | -2.8 |
| 7. வெளிநாட்டிலிருந்தான தேறிய நடைமுறை மாற்றல்கள் | 842,082 | 939,782 | 3.6 | 11.6 | 7.7 | 7.9 |
| 8. தேசிய சேமிப்புக்கள் | 2,850,554 | 3,427,104 | -7.7 | 20.2 | 26.0 | 28.9 |

(அ) தரவானது தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் 2010 அடியாண்டின் மொ.உ.உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது

(ஆ) திருத்தப்பட்டது

(இ) தற்காலிகமானது

(ஈ) சென்மதி நிலுவை மதிப்பீடுகளின் வேறுபாடுகளிற்கு தொகுப்பதில் ஏற்படுகின்ற காலதாமதமே காரணமாகும்.

மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

செலவினத்தின் குறிப்பிடத்தக்க அதிகரித்த வளர்ச்சி காரணமாக தேசிய சேமிப்பு முதலீட்டு இடைவெளி 2015இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 2.4 சதவீதத்திலிருந்து 2016இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 2.5 சதவீதத்திற்கு சிறியளவில் வளர்ச்சியடைந்திருந்தது.

2

## 2.6 வருமானம்

**ஆண்டுப் பகுதியில் பொருளாதாரத்திற்குள் வருமானத்தினை உருவாக்கிய பிரிக்கப்பட்ட கூறுகள் வருமான அணுகுமுறைகளினூடாக விளக்கப்படுகின்றன.** பிரதான வருமான மூலமான மொத்த தொழிற்பாட்டு மிகையானது 2016இல் பொருளாதாரத்தின் மொத்தப் பெறுமதிகூட்டலில் 69.0 சதவீதத்திற்கு வகைகூறியதுடன் அதனைத் தொடர்ந்து ஊழியர்களின் நட்டஈடு மற்றும் உற்பத்தி மீதான உதவுதொகைகளை கழித்த ஏனைய வரிகள் காணப்பட்டதுடன் இவை 2016இன் மொத்தப் பெறுமதிகூட்டல் பொருளாதாரத்தில் முறையே 30.6 சதவீதத்திற்கும் 0.4 சதவீதத்திற்கும் வகைகூறின. பெயரளவு நியதிகளில் மொத்த தொழிற்பாட்டு மிகை 2015இன் 2.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது 2016இல் 6.5 சதவீதமாக வளர்ச்சியடைந்திருந்தது. இவ்வதிகரிப்பிற்கு, பிரதானமாக மொத்த தொழிற்பாட்டு மிகையின் பிரதானமான வருவாய் மூலமான தேறிய தொழிற்பாட்டு மிகை 2015இன் 2.0 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது 7.3 சதவீதத்தினால் உயர்வடைந்தமையே காரணமாக அமைந்தது. மேலும், மொத்த தொழிற்பாட்டு மிகையின் ஏனைய அடுத்த இரண்டு வகைகளான நிலையான மூலதன நுகர்வு மற்றும் கலப்பு வருமானம் முறையே 1.9 சதவீதத்தினாலும் 5.8 சதவீதத்தினாலும் 2016இல் வளர்ச்சியடைந்த வேளையில், இது முறையே 2015இல் 5.9 ஆகவும் 5.5 ஆகவும் வளர்ச்சியடைந்திருந்தது. அதேவேளையில், உற்பத்தி மீதான உதவுதொகைகளைக் கழித்த வரிகள் 2015இன் 5.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது 2016இல் 10.8 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்தன.

**நிறுவனத் துறை வாரியான பகுப்பாய்வின் அடிப்படையில், வருமானத்திற்கான உயர்ந்த பங்களிப்பினை வீட்டலகுகளும் வீட்டலகுகளுக்குப் பணிபுரியும் இலாபமீட்டாத நிறுவனங்களும் உருவாக்கியதுடன் மொத்தப் பெறுமதிகூட்டலில் 50.7 சதவீதத்திற்கு வகைகூறியதுடன் 6.2 சதவீதத்தினைப் பதிவுசெய்தது.** இதனைத் தொடர்ந்து நிதியல்லாக் கூட்டுத்தாபனங்கள் 8.3 சதவீத வளர்ச்சியுடன் 34.5 சதவீத பங்கினைப் பதிவுசெய்தன. பொருளாதாரத்தின் மொத்த தொழிற்பாட்டு மிகையிலிருந்து வீட்டலகுகள் மற்றும் வீட்டலகுகளுக்கு பணிபுரியும் இலாபமீட்டாத நிறுவனங்கள் 5.7 சதவீத வளர்ச்சியுடன் 58.1 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தியதோடு நிதியல்லாக் கூட்டுத்தாபனங்கள் பெயரளவு நியதிகளில் 2016இல் 9.3 சதவீத வளர்ச்சியோடு 35.7 சதவீதத்தினையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. இவ்வேளையில், ஊழியர்களின் சம்பளப் பிரிவில் வீட்டலகுகள் மற்றும் வீட்டலகுகளுக்குப் பணிபுரியும் இலாபமீட்டாத நிறுவனங்கள் மற்றும் நிதியல்லாக் கூட்டுத்தாபனங்கள் முறையே 34.9 சதவீதம் மற்றும் 30.9 சதவீதத்திற்கு வகைகூறியதுடன்

அட்டவணை 2.15
நடைமுறைச் சந்தை விலைகளில் நிறுவனத்துறைகளின் வருமான கூறுகள் (அ) (இ)

| விடயம் | சதவீதப்பங்கு (%) | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2015 (ஆ) | | | | | 2016 | | | | |
| | நிதியல்லா கூட்டுத் தாபனம் | நிதிக் கூட்டுத் தாபனம் | மத்திய அரசாங்கம் | வீட்டு அலகுகள் மற்றும் வீட்டு அலகுகளுக்குப் பணியாற்றும் இலாபமீட்டா நிறுவனங்கள் | மொத்த பொருளா-தாரம் | நிதியல்லா கூட்டுத் தாபனம் | நிதிக் கூட்டுத் தாபனம் | மத்திய அரசாங்கம் | வீட்டு அலகுகள் மற்றும் வீட்டு அலகுகளுக்குப் பணியாற்றும் இலாபமீட்டா நிறுவனங்கள் | மொத்த பொருளா-தாரம் |
| **ஊழியர்களின் நட்டஈடு** | 31.3 | 5.2 | 28.9 | 34.6 | 100.0 | 30.9 | 5.3 | 28.9 | 34.9 | 100.0 |
| **மொத்த தொழிற்பாட்டு மிகை** | 34.8 | 3.9 | 2.8 | 58.5 | 100.0 | 35.7 | 4.4 | 1.8 | 58.1 | 100.0 |
| தேறிய தொழிற்பாட்டு மிகை | 38.2 | 4.6 | 1.8 | 55.4 | 100.0 | 39.3 | 5.3 | 0.9 | 54.5 | 100.0 |
| கலப்பு வருமானம் | - | - | - | 100.0 | 100.0 | - | - | - | 100.0 | 100.0 |
| நிலையான மூலதனத்தின் நுகர்வு | 42.9 | 2.4 | 12.1 | 42.6 | 100.0 | 43.3 | 2.4 | 9.7 | 44.6 | 100.0 |
| **உற்பத்தி மீதான மானியங்களை கழித்த ஏனைய வரிகள்** | 91.4 | 8.3 | - | 0.3 | 100.0 | 91.0 | 8.7 | - | 0.3 | 100.0 |
| **அடிப்படை விலைகளில் பெறுமதி சேர்ப்பு** | 34.0 | 4.3 | 10.7 | 51.0 | 100.0 | 34.5 | 4.7 | 10.1 | 50.7 | 100.0 |

(அ) தரவானது தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் 2010 அடியாண்டின் மொ.உ.உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது

(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானது

மூலங்கள் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

பெயரளவு வளர்ச்சி வீதத்தில் முறையே 8.2 சதவீத்தினையும் 5.9 சதவீதத்தினையும் ஆண்டுப்பகுதியில் பதிவுசெய்தன. அதேநேரம் 2016ஆம் ஆண்டுப்பகுதியில் ஊழியர்களின் நட்டஈட்டுப் பிரிவில் பொதுவான அரசாங்கம் 7.0 சதவீத வளர்ச்சியுடன் 28.9 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்துகிறது. உற்பத்தி மீதான உதவுத் தொகைகளைக் கழித்த வரிகளில் நிதியல்லாக் கூட்டுத்தாபனங்கள் 91.0 சதவீதமாக பிரதானமாக பங்களிப்பினை கொண்டிருந்ததுடன் 2016இல் 10.4 சதவீதத்தில் வளர்ச்சியடைந்தன. 2016இல் வீட்டலகுகள் மற்றும் வீட்டலகுகளுக்கு பணிபுரியும் இலாபமீட்டாத நிறுவனங்கள் மொத்தப் பெறுமதிகூட்டலில் 50.7 சதவீத்திற்கு வகைகூறிய போதிலும் உற்பத்தி மீதான உதவுதொகைகளை கழித்த வரிகள் மீதான பங்களிப்பு ஆண்டுப்பகுதியில் வெறுமனே 0.3 சதவீதமாகக் காணப்பட்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.